20.00
செல்போன் பக்கம் 09
ஆபாசப்படம் பக்கம் 11
பக்கம் 15
பக்கம் 24

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

★ உதயன்

சுடர் 27
கதிர் 75

வள்ளுவர் ஆண்டு 2043 தை 26 வியாழக்கிழமை (09/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# அமெரிக்க – இந்திய அதிகாரிகள் வொஷிங்ரனில் இரகசிய சந்திப்பு

## ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் பற்றி ஆராய்வு



வொஷிங்ரன், பெப்ரவரி 9
இறுதிப் போரில் நடந்தவற்றுக்குப் பொறுப்புக் கூறுதல் மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை அரசு ஏற்கனவே வழங்கியிருந்த உறுதி மொழிகளின் அமுலாக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இல்லை. அந்த உறுதி மொழிகளில் எவையும் உரியவாறு ஒழுங்காக நிறைவேற்றப்படவில்லை. இதனாலேயே இலங்கை விடயத்தில் அமெரிக்கா அதிக அக்கறை செலுத்தியுள்ளதாக வொஷிங்ரன் அதிகாரிகள் புதுடில்லியிடம் விளக்கிக் கூறியுள்ளனர். ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் மரியா ஒட்டேரியா மற்றும் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் ஆகியோர் இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் ரஞ்சன் மாத்தாயுடன் இரகசியச் சந்திப்பு நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு வொஷிங்ரனில் நடைபெற்றது. முன்னதாக வெள்ளை மாளிகையில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்ரனைச் சந்தித்துப் பேசினார் மாத்தாய். இதன் பின்னரே மரியா மற்றும் பிளேக் ஆகியோருடனான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்புக்கான பயணம் மேற்கொள்வது, அதன் நோக்கம் என்பன பற்றி அமெரிக்க அதிகாரிகள் இதன்போது மாத்

27

## இலங்கைக்கு எதிரான தீர்மானம் தளம்பல் நிலையில் இந்தியா

கொழும்பு, பெப்.9
ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் ஆதரவுடன் கொண்டு வரப்படும் தீர்மானத்தை ஆதரிப்பது தொடர்பில் இந்தியாவிடம் இருந்து குழப்பமான சமிக்ஞைகள் வெளிப்படுவதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, அமெரிக்காவின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்படும் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு இந்தியாவும் முடிவு செய்திருந்தது.

ஆனால், கொழும்புக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா, ஜெனிவா அமர்வுகளின் போது கொழும்

27

## காணாமற் போனோர் தொடர்பில் ஸ்ரீபன் ராப் கேட்டறிந்தார்



யாழ்ப்பாணம், பெப். 09.
யாழ். மாவட்டத்தில் யுத்த காலங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பான விவரங்கள் தொடர்பாகவும், மக்களின் மீளக்குடியமர்வு தொடர்பான விவரங்களையும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோளக் குற்றவியல் நீதி விசாரணைக்கான தூதுவர் ஸ்ரீபன் ராப் கேட்டறிந்ததாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்

27

## நாட்டில் குண்டுப் புரளியை அரசுதான் கிளப்பி விடுகிறது

### குற்றம் சாட்டுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, பெப்.9
நாட்டில் போர் முடிந்து மூன்று வருடங்களாகப் போகும் நிலையிலும் அரசு குண்டுப் புரளியைக் கிளப்பி விட்டு மக்களைப் பீதியடையச் செய்கின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் எப்படி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வருவார்கள்? என்று கேள்வி எழுப்புகின்றார் ஜே.வி.பி. உறுப்பினரான ஜயந்த கொட்டகொட.

ஏற்றுமதி இறக்குமதி கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இப்படிக்

27

## ராஜதந்திர நடவடிக்கை மூலம் மீனவர்களை மீட்கமுடியாது

கொழும்பு, பெப்.9
சோமாலிய கடற் கொள்ளையர்களினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் ஆறு பேரையும் விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்று கூறிய கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்விடயம் இராஜதந்திர நடவடிக்கையின் மூலம் தீர்க்கப்படக் கூடியதும் இல்லை என்றார்.

நேற்று நாடாளுமன்றில் ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார திஸாநாயக்க கவன ஈர்ப்பு பிரேரணை

27

## ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்குச் சிக்கல்

### மாலைதீவு ஜனாதிபதியின் இராஜிநாமாவால்

கொழும்பு, பெப்.9
இலங்கை மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ஜெனிவா மாநாட்டில் விசேட உரையொன்றை நிகழ்த்தவிருந்த மாலைதீவு ஜனாதிபதி தனது பதவியைத் திடீரென இராஜிநாமாச் செய்துள்ளமையால், இலங்கை அந்த மாநாட்டில் சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம் - என்று பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த இராஜதந்திரியொருவர் நேற்றுமாலை தெரிவித்தார்.

இலங்கை விவகாரம் குறித்து மேற்குலக நாடுகளுக்கிடையே மத்தியஸ்தம் வகித்து, ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட

27

## தமிழருக்கு நீதி வேண்டும் அமெரிக்கா அதில் உறுதி

### சிறப்புத் தூதுவர் ராப் கூட்டமைப்பிடம் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.9
இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் அமெரிக்கா உறுதியாகவே இருக்கின்றது. இலங்கை விடயத்தை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார் அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோளக் குற்றவியல் நீதி விசாரணைகளுக்கான சிறப்புத் தூதர் ஸ்டீபன் ராப்.

ஜெனிவா மாநாடு ஆரம்பமாகவுள்ள நிலையில் அவசர பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சிறப்புத் தூதர் ஸ்டீபன், தனது முதலாவது சந்திப்பை நேற்றுமுன்

27

### நாடாளுமன்ற செயலாளர் நாயகமாக தம்மிக்க தஸநாயக்க

நாடாளுமன்ற செயலாளர் நாயகமாக தம்மிக்க தஸநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது பிரதி செயலாளர் நாயகமாக கடமையாற்றிவரும் தம்மிக்க தஸநாயக்க நாடாளுமன்ற நடவடிக்கைகளில் நீண்ட கால அனுபவம் பெற்ற சிரேஷ்ட சிவில் நிர்வாக சேவை அதிகாரியாவார். அரசியலமைப்பின் 48 அ (8) உறுப்புரையின் அடிப்படையில் தம்மிக்க தஸநாயக்காவின் பெயர் ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டுள்ளது. இதற்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கூடிய நாடாளுமன்ற பேரவை முன்மொழிவுக் குழு அங்கீகாரம் அளித்தது. தம்மிக்க தஸநாயக்க எதிர்வரும் 15 ஆம் திகதி நாடாளுமன்ற செயலாளர் நாயகமாக உத்தியோகபூர்வமாகப் பதவியேற்பார்.

### குடும்பப் பெண் சடலமாக மீட்பு

மல்லாகம் நீதிமன்ற வீதியில் உள்ள வீடொன்றின் கிணற்றுக்குள் இருந்து நேற்றுக் காலை பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவரும் இவரது கணவரும் தனிமையில் வசித்து வந்ததாகவும் பெண்ணின் சடலம் நேற்றுக் காலை வீட்டுக் கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. நீதிமன்ற வீதி மல்லாகத்தைச் சேர்ந்த கருணைதாசன் மேரி மாக்கிறட் (வயது 51) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார். சம்பவ இடத்துக்கு விரைந்த தெல்லிப்பழை பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் ஒப்படைத்தனர். சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### யால சரணாலயத்தில் செய்தியாளர் காயம்

யால தேசிய வனவிலங்கு சரணாலயத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் பி.பி.சி. செய்தியாளர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பி.பி.சி. செய்திச்சேவையின் செய்தியாளர் சார்ள்ஸ் ஹெவில்ட் அதிவேகத்தில் வாகனத்தைச் செலுத்தியதால் விபத்துக்குள்ளானர். காயமடைந்த இவர், அங்குள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

### ஜனாதிபதி பாகிஸ்தானுக்கு

மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் செல்லவுள்ளார். பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியின் அழைப்பை ஏற்று அங்கு செல்லும் ஜனாதிபதி, 12ஆம் திகதிவரை அங்கு தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தனது இந்த பயணத்தில் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராஸா கிலானி உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கில் 11 தொழிற்சாலைகளில் மூன்று மட்டுமே இயங்குகின்றன

## போர் காரணமாகவே செயல் இழந்தன

யாழ்ப்பாணம், பெப். 9.
வடமாகாணத்தில் அரசின் நிர்வாகத்தில் இயங்கிய 11 தொழிற்சாலைகளில் யுத்தத்தின் பின்னர் 3 தொழிற்சாலைகள் மட்டுமே சிறிய அளவில் இயங்கி வருகின்றன.

யுத்த காலத்துக்கு முன்னர் வடபகுதியில் அரச நிர்வாகத்தின் கீழ் பெரிய அளவான தொழிற்சாலைகள் இயங்கிவந்தன.

இதில் யாழ். மாவட்டத்தில் ஐந்து தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. காங்கேசன்துறையில் லங்கா சிமெந்துத் தொழிற்சாலை, அச்சுவேலியிலுள்ள கைத்தொழில் பேட்டை, திக்கத்திலுள்ள பனம் பொருள் வடிசாலை, காரைநகரிலுள்ள படகு உற்பத்தி நிலையம், குருநகரிலுள்ள வலை உற்பத்தித் தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகள் இயங்கி வந்தன.

**வட பகுதியில் இயங்கி வந்த இந்தத் தொழிற்சாலைகள் மீள இயங்குவதன் மூலம் பலருக்குத் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதுடன் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பாகவும் அமையும்.**

இவற்றில் திக்கம் வடிசாலை, காரைநகர் படகுத் தொழிற்சாலை, குருநகர் வலை உற்பத்தித் தொழிற்சாலை ஆகியன தற்போது இயங்கிவருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனிலுள்ள இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளத் தொழிற்சாலை ஆகியன இயங்கிவந்தன. இவை இரண்டும் இன்னமும் இயங்க ஆரம்பிக்கவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை சிறியளவில் இயங்கிவருகிறது.

மன்னார் மாவட்டத்தில் பேசாலை கடல் உணவு பொதியிடும் தொழிற்சாலை மற்றும் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை ஆகிய இரண்டு தொழிற்சாலைகளும் இயங்கி வந்தன.

வவுனியாவிலுள்ள பூந்தோட்டத்தில் கைத்தொழிற்சாலையும் பூங்கா தொழிற்சாலையும் இயங்கிவந்தன. இவை இன்னமும் இயங்க ஆரம்பிக்கவில்லை. (த-3)

## சம்பந்தனுக்கு ஜனாதிபதி வாழ்த்து





தனது 79 ஆவது பிறந்ததினத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை காலை சம்பந்தனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிறந்தநாள் வாழ்த்தைத் தெரிவித்தார். அத்துடன், தற்போதைய பொதுவான அரசியல் நிலைவரங்கள் குறித்தும் சம்பந்தனுடன் ஜனாதிபதி கலந்தாலோசித்தார் என அறிய முடிகிறது.

அரசு - கூட்டமைப்புப் பேச்சு இக்கட்டான திசை நோக்கிப் பயணிக்கும் இந்நிலையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரச தாதியர்கள் இன்று பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.9
அரச தாதியர் சங்கத்தினர் நாடளாவிய ரீதியில் இன்று மதியம் ஒரு மணிநேரப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக யாழ். போதனா வைத்திசாலை தாதிய சங்கச் செயலாளர் பி.பி. சிவயோகன் அறிவித்துள்ளார்.

15 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 31 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பணிப் பகிஷ்கரிப்புச் செய்தோம். அவற்றில் 3 கோரிக்கைகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே ஏனைய கோரிக்கைகளையும் நிறைவேற்றக்கோரியே இன்று மதியம் 12 மணி தொடக்கம் ஒரு மணிவரை பகிஷ்கரிப்பு இடம்பெறவுள்ளது. தாதிய உத்தியோகத்தர் சகலரையும் இதில் கலந்துகொள்ளுமாறு செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (த-4)

# கொள்ளைச் சந்தேக நபர்களுக்கு நாளை வரை விளக்க மறியல்

யாழ்ப்பாணம், பெப்.9
70 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட மூன்று சந்தேகநபர்கள் தொடர்பான பிணை விண்ணப்பங்களை யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா நாளை வெள்ளிக்கிழமை வரை ஒத்தி வைத்தார்.

நான்கு வெவ்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் மூவர் தொடர்பான இவ்வழக்கை யாழ். விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

அரியாலை, யாழ். ஐந்தாம் குறுக்குத் தெரு மற்றும் ஏழாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்களும் விளக்கமறியலிருந்து நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மூவரும் தங்க நகைகள் உட்பட பெறுமதியான பல்வேறு பொருள்களை கொள்ளையடித்துள்ளனர். அவற்றின் பெறுமதி 70 லட்சம் எனப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். மூவரும் கைது செய்யப்பட்டதையடுத்து இதுவரை இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மாத்திரமே கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தேடப்படும் பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியிருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த மூன்று சந்தேக நபர்களில் அரியாலையைச் சேர்ந்த நபர் தவிர ஏனைய இருவர் சார்பிலும் அவர்களது சட்டத்தரணிகள் பிணை கோரி விண்ணப்பம் செய்திருந்தனர்.

இரண்டாவது சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி பா.தவபாலனும், மூன்றாம் சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸும் ஆஜராகியிருந்தனர். மூன்றாவது சந்தேக நபர் தங்க நகை செய்யும் தொழிலாளி என்றும் அவர் இரண்டாம் சந்தேக நபரிடமிருந்து தங்க ஆபரணங்கள் சிலவற்றை நம்பிக்கை அடிப்படையில் வாங்கினார் என்றும் சட்டத்தரணி தெரிவித்தார்.

இரண்டாம் சந்தேக நபர் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கவில்லையென அவரது சட்டத்தரணியால் தெரிவிக்கப்பட்டது. பிணை மனுக்களைப் பொலிஸாருடன் ஆஜராகியிருந்த சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆட்சேபித்திருந்தார்.

சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கப்பட்டால் அவர்கள் தொடர்ந்தும் கொள்ளைச் சம்பவங்கயில் ஈடுபடும் நிலைமை உருவாகும் எனவும் குற்றங்கள் நடைபெற்ற சம்பவங்கள் பாரதூரமானவையெனவும் குறிப்பிட்டார்.

தவிர, கடந்த 6 மாத காலத்தில் யாழ். குடாநாட்டில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கொள்ளைகளால் பொது மக்கள் இரவில் அச்சத்துக்கும், திகிலுக்கும் ஆளாகிவருவதாகத் தெரிவித்ததோடு பிணை வழங்கப்பட்டால் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை மீட்பதில் சிக்கல்கள் ஏற்படும் எனவும் சுட்டிக் காட்டினார்.

மூன்றாம் சந்தேக நபருக்குப் பிணை வழங்கப்படுவதை பொலிஸார் ஆட்சேபிக்காத போதிலும் அதனை நீதிமன்றம் பொருட்படுத்தவேண்டியதில்லையெனவும் நிகழ்வுகளையும், சூழ்நிலைகளையும் சீர்தூக்கிப் பார்த்து கட்டளையிடும் அதிகாரம் மன்றுக்கு உண்டு எனவும் சுட்டிக்காட்டினார்.

இரு தரப்பினரதும் காரசாரமான வாதங்களையடுத்து இவ்வழக்கு நாளை வெள்ளிக்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டது. (த-4)

# 94,933 கிலோ கடலுணவு வடக்கில் தினமும் பிடுபடுகிறது

யாழ்ப்பாணம், பெப்.9
வடமாகாணத்தில் தினமும் 94 ஆயிரத்து 933 கிலோ கடலுணவுகள் பிடிக்கப்படுவதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் தற்போது 31 ஆயிரத்து 122 மீனவக் குடும்பங்கள் கடல் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன.

இவர்கள் தினமும் 94ஆயிரத்து 933 கிலோ எடைவரையான கடலுணவு பிடிக்கின்றனர்.

வடமாகாணத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு கடந்த 2 வருடங்களில் 8 ஆயிரத்து 912 படகுகள், 94 ஆயிரத்து 967 மீன்பிடி வலைகள், கடல்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடற் றொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் ஆளுநர் மேலும் கூறினார். (த-3)

## அறிமுக கருத்தரங்கு

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானிப் பட்டமாணி மற்றும் அத்திபாரக் கற்கைநெறி பற்றிய அறிமுகக் கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (த-15)

# முல்லையில் மார்ச் 24 தேர்தல்

கொழும்பு, பெப்.9
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்றுப் பிரதேச சபைகளுக்கான தேர்தல் மார்ச் மாதம் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தகவல் வெளியிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இந்த இரண்டு பிரதேச சபைகளுக்குமான தேர்தல் மார்ச் மாதம் 24ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

நிலக்கண்ணி வெடி அகற்றப்படாததன் காரணமாக கரைத்துறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தல் விரைவில் நடத்துமாறு கபே அமைப்பு தேர்தல்கள் ஆணையாளரிடம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தை குறிப்பிடத்தக்கது. (த-10)

## பொலிஸாருடன் கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அரச சட்டத்தரணி வி.திருக்குமரனுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று யாழ். மேல் நீதிமன்றக் கட்டடத்தில் நேற்று நடைபெற்றது.

நீதிமன்றில் குற்றவியல் வழக்குகளின்போது பொலிஸார் வினைத்திறனுடன் செயற்படுவது, நீதிமன்றில் விசாரணையின் போது அரச சட்டத்தரணிகளுக்கு எவ்வாறு உதவுவது உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதில் மாவட்டத்திலுள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், குற்றவியல் பிரிவு சார்ந்த பொலிஸ் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (த-4)

# மனிக்பாம் மக்களும் வாக்களிப்பர்

கொழும்பு, பெப்.9
மனிக்பாம் இடைத்தங்கல் முகாமிலுள்ள வாக்காளர்களுக்கு அவர்களின் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு உரிய வசதிகள் செய்துகொடுக்கப்படும் எனத் தேர்தல்கள் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரியவுக்கும், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு, காரைதீவு ஆகிய பிரதேசசபைகளுக்கான தேர்தல், வாக்காளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை, இடைத்தங்கல் முகாமில்தங்கியுள்ளோர் எவ்வாறு வாக்களிப்பது ஆகியவை தொடர்பாக இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மெனிக்பாம் முகாமில் தங்கியுள்ள வாக்காளர்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்படவில்லை. எனவே, அவர்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது என இதன்போது சுட்டிக்காட்டிய தமிழ்க் கூட்டமைப்பு, அங்குள்ளவர்களுக்கு உரிய வசதிகளைக் கொடுக்கும்படியும் கோரியுள்ளது.

இதனையடுத்தே உரிய வசதிகள் செய்துகொடுக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உறுதியளித்துள்ளார். எவ்வாறான முறைகளைக் கையாள்வது தொடர்பில் 6 ஆம் திகதி நடைபெறும் மற்றுமொரு சந்திப்பில் ஆராயப்படவுள்ளன.

மெனிக்பாம் முகாமுக்குள்ளேயே வாக்குச்சாவடி அமைத்தல்; அவ்வாறு இல்லாவிட்டால் மாங்குளத்தில் வாக்குச்சாவடிகளை நிறுவி அங்கு வாக்காளர்களை அழைத்துச் சென்று வாக்களிக்க வைத்தல் ஆகிய இரண்டு தீர்மானங்களுள் ஒன்றைத் தேர்தல் திணைக்களம் கையாளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொத்தணிச்சாவடிகளை அமைப்பதாகவிருந்தால் நாடாளுமன்றில் அனுமதி பெறவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# மாலைதீவு ஜனாதிபதி ராஜினாமா இலங்கைக்கும் ஒரு படிப்பினை

## எச்சரிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, பெப். 09.
மாலைதீவில் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு, சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்ததாலேயே அந்நாட்டுக் காவல்துறையினரே அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களைச் செய்து ஜனாதிபதியைப் பதவி விலகச்செய்துள்ளனர். இதனை முன் உதாரணமாக நாமும் கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் அஜித் பி.பெரேரா அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டளைகள் ஒழுங்கு விதிகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிட்டு ஜனநாயகம் சீர்குலையும்போது நம்முடைய அரசு என்று கூறிக்கொள்கின்ற இராணுவமும் பொலிசும் ஒருநாள் தனது அரசுக்கு எதிராகவே திரும்பும். இதுவே இன்று மாலைதீவில் இடம்பெற்றுள்ளது.

மாலைதீவில் அரசுக்கு எதிராக ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வெடிக்கும் என்று எவருமே நினைத்திருக்கவில்லை. எந்த ஒரு அநீதியும் காணப்படவில்லை எனினும் ஒரே நாளில் தனது சொந்த பொலிசே அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து ஜனாதிபதியையும் பதவி விலகவைத்தது.

ஜனநாயக உரிமை, நீதிமன்ற நடவடிக்கைகளில் அரசு தலையிடக் கூடாது. மாலைதீவு சம்பவத்தை நினைவில் கொள்ள வேண்டும். சுயலாபமாகக் கிடைக்கும் இடைத்தரகுப் பணத்திற்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கும் பொருளாதாரக் கொள்கையையே இந்த அரசு முன்வைத்துள்ளது.

நாட்டை மேம்படுத்துவதற்கான பொருளாதாரக் கொள்கை இந்த அரசிடம் இல்லை. அதனாலேயே ஏற்றுமதியைவிட இறக்குமதியே அதிகரித்துள்ளது என்றும் அஜித். பி.பெரேரா குற்றம் சாட்டினார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழ் மக்களின் உரிமைகள் நாடக மேடைக் காட்சிகளாக..

இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படக் கூடிய முக்கிய தருணங்கள் கிடைத்த போதிலும், அவற்றைத் தட்டிக் கழித்து விட்டது மஹிந்த அரசு. ஆனால் நாடாளுமன்றத்தின் தீர்மானத்துக்கு தான் இணங்கும் என்று இப்போது சொல்கிறது.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தப் போவதாக கூறிவந்த அரசு, இப்போது அவற்றை புறந்தள்ளி விட்டு நாடாளுமன்ற தெரிவுக்குழுவைத் தூக்கிப்பிடிக்கிறது. அவ்வாறெனில், இத்தனை காலமாக அரசு நடத்திய பேச்சுக்கள் யாவும் ஏமாற்று வித்தைகளா?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சிறந்த சிபார்சுகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு பின்னடித்து காலத்தைத் தாமதிப்பது ஏன்? -

மொத்தத்தில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதனை கைவிடும் நிலைக்கே அரசு சென்று கொண்டிருக்கிறது - என்றும் அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள், செய்யமுடியாதவற்றையே கேட்கிறார்கள் என்று யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி தெரிவித்த குற்றச்சாட்டுக்கு மறுவளத்தில் வைத்து, ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச்செயலாளரின் கருத்தை நோக்கலாம். அவ்வளவு தான்.

மிகக்குறிப்பாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள வேளையில்-,

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளில் சிலவற்றை - முக்கியமான வற்றை நடைமுறைப்படுத்துமாறு, மேற்கு நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வுகுறித்தும் அது எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்தும் அடக்கி வாசித்தும், பட்டும் படாமலும் நாள்களைப் போக்கிவந்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, இப்போது -

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகளை நிறைவேற்றுமாறு, முக்கியமானவற்றை செயற்படுத்துமாறு கோருகிறது.

எது எப்படியோ, காலத்துக்குக்காலம், சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு, முகமூடியை மாற்றி ஒரு கருத்தை முன்வைத்து காலத்தைக் கழிப்பது அல்லது கடத்துவது என்பதே, இன்றைய அரசியல் என்றாகி விட்டது இலங்கையில்!

அதனால், இந்த நாட்டில் ஜனநாயக உரிமைகள், மற்றும் இன ஐக்கியம் என்பன மிக நீண்டகாலமாகவே அவ்வப் போது ஆட்சியில் இருந்த அரசுகளால் காலால் மிதிக்கப் பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், அவர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்குவதிலும் தெற்கின் பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அண்ணன், தம்பி போன்றவை என்பது கடந்த 60 வருட கால அனுபவம்; சரித்திரம்.

இவற்றைக் கற்றுணர்ந்த, தெளிந்து கொண்ட புத்தி ஜீவிகளும், அரசியல் வாதிகளும் தென்னிலங்கையில் இருக்கவே செய்கின்றனர்.

அரசமைப்புச் சட்டத்துக்கான 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அல்லது அதற்கு மேலும் சென்று, மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதன் மூலம் தீர்வு காண்பதற்கு அரசுக்கு விருப்பம் உண்டு என்று கூறப்படுவது, சர்வதேச சமூகத்தையும் தமிழ் மக்களையும் ஏமாற்றும் ஒரு வகைச் சூழ்ச்சியே என்று தெற்கின் புத்தி ஜீவிகள், இப்போது புட்டுக்காட்டத் தொடங்கி உள்ளனர்.

இனவாத அடிப்படையில் அரச நிர்வாகம் முற்று முழுதாக நடைபெற்று வருவதால், இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு எதனையும் காணமுடியாது என்று சுட்டிக் காட்டுகிறார் பேராசிரியர் ரெரன்ஸ் புரசிங்க.

ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தத்தின் மூலம் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளது. ஆகையால், அச்சட்டத்தின் அடிப்படையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மட்டுமன்றி அதில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏனைய உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று அரசமைப்புத் துறை நிபுணரான வழக்கறிஞர் ஜே.ஸி.வெலியமுன கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

நாட்டு மக்கள் மத்தியில் உருவாகும் எதிர்ப்புப் போராட்டங்களை, ஏதாவதொரு காரணத்தை முன்வைத்து, அடக்கி ஒடுக்கி விடவே அரசு எப்போதும் முயன்று வருகின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வாக அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தீர்வுகாணத் தயார் என அரசு கூறுவதும் இத்தகையதொரு கபடநோக்கம் கொண்டதே-

ஜனாதிபதி இதன் மூலம் சிங்களப் பெரும் பான்மையினர் பக்கம் பந்தை அடித்துள்ளார்; நீங்கள் விரும்பும் விதத்தில் இப்பந்தை அடியுங்கள் என்று. தேவையான போது பந்தை மீண்டும் தன் கைகளுக்கு எடுத்துக்கொள்ளவும் அவர் தயாராக உள்ளார் - என்று பொதுவுடைமைப் பார்வையுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார கூறுகிறார்.

ஏனினும் அரசு எந்தப் பக்கம் செல்லும் என்பது, இம்மாத இறுதியில் ஆரம்பமாக உள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவின் அமளி முடிந்த பின்னரே, தெரிய வரும் வாய்ப்பு உண்டு. அதுவரை எல்லாமே நாடக மேடைக் காட்சிகளாகவே அமையும்!

# 6,700 முறைப்பாடுகளில் 1,430 மட்டுமே விசாரணை

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கே இந்த நிலைமை

**2011 இல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்துக்கு 3428 முறைப்பாடுகளும் பிரதேச ரீதியான அலுவலகங்களில் 3276 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.**

கொழும்பு,பெப்.9

இலங்கைமனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு கடந்த ஆண்டில் 6ஆயிரத்து 700 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள போதிலும் அவற்றுள் ஆயிரத்து 430 முறைப்பாடுகள் மட்டுமே விசாரணை செய்யப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைப் பணிமனைக்கு, 3 ஆயிரத்து 428 முறைப்பாடுகளும், பிரதேச ரீதியான அலுவலகங்களுக்கு 3 ஆயிரத்து 272 முறைப்பாடுகளுமாக 6700 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டில் விசாரணைச் செயற்பாடுகள் முடிக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளுள், அடிப்படை உரிமைகள் மீறப்படாதுள்ள 401 முறைப்பாடுகளும், அக்கறை கொள்ள இயலாத 230 முறைப்பாடுகளும், பரிந்துரைகள் வழங்கப்பட்ட நிலையில் 22 முறைப்பாடுகளும், சமரசம் செய்து வைக்கப்பட்ட 32 முறைப்பாடுகளும், 54 முறைப்பாடுகள் நிவாரணம் வழங்கப்பட்ட நிலையிலும், 73 முறைப்பாடுகள் புறமொதுக்கப்பட்ட நிலையிலும், 260 முறைப்பாடுகள் வேறு நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையிலும் உள்ளன.

அத்துடன் அறிவுரை கூறப்பட்ட நிலையில் 23 முறைப்பாடுகளும், 87 முறைப்பாடுகள் வழக்கு இடம்பெறும் நிலையிலும், 213 முறைப்பாடுகள் மனித உரிமைகள் செயற்பாட்டுக்குச் சார்பற்றவையாகவும், 35 முறைப்பாடுகள் காலம் கடந்தவையாகவும் உள்ளன என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ம-22)

## இரவு நேரத்துக்கு மட்டும் 43.5 மெகா வற்ஸ் மின்தேவை

### வடபிராந்திய பொதுமுகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.மாவட்டத்தில் இரவு நேரத்தில் 43.5 மெகா வற்ஸ் மின்சாரம் தேவைப்படுவதாகவும் பகல் நேரத்தில் 18.1 மெகா வற்ஸ் மின்சாரம் தேவைப்படுவதாகவும் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் போரின் பின்பு மின்சாரத் தேவை அதிகரித்துள்ளது. பகல் வேளைகளில் 18.1 மெகா வற்ஸ் மின்சாரம் தேவைப்படுகின்றது. ஆனால் இரவில் 43.5 மெகா வற்ஸ் மின்சாரம் தேவைப்படுகின்றது.

இருப்பினும் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையம் மூலம் 10 மெகா வற்ஸ் மின்சாரமும், அக்றிக்கோ மூலம் 15 மெகா வற்ஸ் மின்சாரமும் நொதேன் பவர் ஊடாக 18.5 மெகா வற்ஸ் மின்சாரமுமே கிடைக்கப் பெறுகின்றது. மொத்தமாக 43.5 மெகா வட்ஸ் மின்சாரமே உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதனாலேயே மின்வெட்டு தவிர்க்க முடியாததாகிறது. அத்துடன் நொதேன் பவர் 30 மெகாவற்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டிய இடத்தில் 18.5 மெகா வற்ஸ் மின்சாரத்தையே உற்பத்தி செய்கிறது.

யாழ்.நகரப்பகுதியில் 95 சதவீதமான மின்சாரப் பாவனை உள்ளது. இதுவே யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய மின்சாரப் பாவனையாக உள்ளது என்று கூறினார்.

(ம - 5)

## 2 லட்சம் மெ.தொன் அரிசி 2015 இல் வெளிநாடுகளுக்கு

### விவசாயத்துறை அமைச்சர் தகவல்

கொழும்பு,பெப்.9

2015 ஆம் ஆண்டளவில் இலங்கையிலிருந்து இரண்டு லட்சம் மெற்றிக் தொன் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதே அரசின் எதிர்பார்ப்பாகும்.

அது தொடர்பாக விதை நெல் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கும், அவசியப்படும் தொழில்நுட்ப அறிவை மற்றும் அடிப்படை வசதிகளை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன.

அண்மையில் மகா இலுப்பல்லம விவசாயப்பயிர் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விவசாயத்துறை சார்ந்த நிகழ்வு ஒன்றில் விவசாயிகள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

'தேசத்தின் மகுடம்' கண்காட்சியை முன்னிட்டு நடத்திய சந்திப்பு ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(ம-22)

## கச்சதீவுத் திருவிழாவில் இம்முறை பெரும் எண்ணிக்கையானோர் எதிர்பார்ப்பு

### சுகாதாரச் செயற்பாடுகளை சீரமைக்க நேற்றைய கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.9

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்திருவிழாவில் இம்முறை பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவில் இம்முறை இந்தியாவில் இருந்து ஐயாயிரம் வரையிலானவர்களும், இலங்கையில் இருந்து மூவாயிரம் வரையிலும் யாத்திரிகர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று புதன்கிழமை யாழ். செயலகத்தில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்திருவிழா ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் இடம் பெற்றது.

இதன் போது மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த வருடம் இடம்பெற்ற திரு [illegible] காட்டப்பட்டது.

சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு நடவடிக்கைகள் நல்ல முறையில் அமைய நடவடிக்கைகள் எடுக்குமாறும் கூட்டத்துக்குத் தலைமை வகித்த யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்தும் உயரதிகாரிகள் வரவுள்ளனர். அவர்களுக்கு உரிய வசதிகள் செய்து கொடுக்குமாறும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரக இணை அதிகாரி மகாலிங்கம் தெரிவித்தார்.

குடிதண்ணீர் வசதிகளை உதவி உள்ளூராட்சி ஆணையாளரும், கடற்படையினரும் வழங்குவர் தற்காலிக மலசல கூடங்களை நெடுந்தீவு பிரதேச சபை அமைக்கும்.

ஆண்களுக்கு நாற்பது மலசல கூடங்களும் பெண்களுக்கு நாற்பது மலசலகூடங்களும், அமைக்கப்படவுள்ளதாக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

இதற்குத் தேவையான பரல்களை [illegible] அபிவிருத்தி அதிகாரசபை வழங்கும் என்று கூறப்பட்டது. இங்கு 10 கடைத் தொகுதிகளும் அமைக்கப்படவுள்ளதாகவும் நெடுந்தீவு பிதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஸியன் தெரிவித்தார்.

ஒளி, ஒலி உட்பட, பாதுகாப்பு என்பவற்றையும் துப்புரவுப் பணிகளையும், கடற்படையினரே கவனிப்பார்கள். கடற்போக்குவரத்துக்கும், கண்காணிப்புக்கும் இவர்களே பொறுப்பு என்றும் கூறப்பட்டது.

தேவையான வசதிகள் அனைத் தும் நல்ல முறையில் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இவற்றை மேற்பார்வை செய்ய இணைப் பதிகாரிகளாக நெடுந்தீவு பிரதேச செயலரும், நெடுந்தீவு பங்குத் தந்தையும் இருப்பார்கள் என்றும் கூறப்பட்டன.

நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பங்குத் தந்தை, பிரதேச சபைத்தலைவர், செயலாளர், கடற்படை அதிகாரி, நெடுந்தீவு பல.நோ.கூ சங்கத்தலைவர், சுகாதாரத்திணைக்கள உத்தியோகத்தர்கள், நயினாதீவு படகு உரிமையாளர் சங்கத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி வேண்டிய நடைப்பயணம் பிரான்ஸில் தடம்பதித்தது

கொழும்பு, பெப். 9

தமிழருக்கு நீதி வேண்டி லண்டனில் இருந்து ஜெனிவா நோக்கி ஈழத்தமிழர்கள் ஆரம்பித்த நடைபயணம், பிரான்ஸ் தலைநகர் பரிஸில் வெற்றிகரமாகத் தடம் பதித்துள்ளது.

''சர்வதேச விசாரணைக்குரிய ஆண்டாகச் செயற்படுத்துவோம், மக்கள் போராட்டங்களை வலுப்படுத்துவோம்'' எனும் நாடுகடந்த தமிழீழ அரசின் தீர்மானத்தினை முழக்கமாகக் கொண்டு, கடந்த ஜனவரி 28ஆம் திகதி லண்டனில் இருந்து புலத்தமிழர்கள் ஆரம்பித்த இந்த நடைப்பயணம், எதிர்வரும் 27 ஆம் திகதி ஜெனிவா ஐ.நா. மனித உரிமை அலுவலகம் முன்பாகச் சென்றடையவுள்ளது.

இலங்கையில் தமிழர் படுகொலை குறித்தான சுயாதீன சர்வதேச விசாரணை, தமிழர் தாயகத்தில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தை ஐ.நா. நிறுவ வேண்டும், தமிழர் தாயகத்தில் பொது வாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை இந்த நடைபயணம் வலியுறுத்துகின்றது.

பிரான்ஸ் தமிழர் நடுவத்தின் ஒத்துழைப்புடன் பிரான்ஸுக்குள் காலடி வைத்துள்ள, இந்த நடைப் பயணிகள் தலைநகர் பரிஸில் பல்வேறு சந்திப்புகளை மேற்கொண்டிருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவுக்கல் உள்ள செவ்வி றோன் பகுதிக்கு சென்ற நடை பயணிகள், செவ்வி றோன் நகரபிதா ஸ்ரீவன் கத்தினியோனைச் சந்தித்துக் கோரிக்கை மனு ஒன்றினைக் கையளித்ததோடு, முள்ளிவாய்க்கால் நினைவுக் கல்லுக்கு வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து, பிரிகேடியர். சு.ப.தமிழ்செல்வனின் சிலைக்கு வணக்கம் செலுத்தும் முகமாக லா கூர்னெவ் பகுதிக்குச் சென்றனர்.

லா கூர்னெவ் நகரசபை உறுப்பினர் அந்தோனிறூசலை சந்தித்து, கோரிக்கைகளை முன்வைத்த நடை பயணிகள், பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனின் சிலைக்கு வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து, தமிழர் வர்த்தக நிலையங்களின் பிரதான மையமாகவுள்ள லா சப்பல் பகுதிக்குச்சென்ற நடை பயணிகளை, வர்த்தகர்கள் இன்முகத்துடன் வரவேற்றுக் கொண்டனர்.

## கொக்குவில் இந்துமாணவர் பயன்பாட்டுக்கான கட்டடம்




வலி. வடக்கு, பெப்.9

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டுக்கென வழங்கப்பட்ட தேவராசா இல்லத் திறப்பு விழா நேற்றுமுற்பகல் 9.00 மணியளவில் இடம் பெற்றது. பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத் திட்டம் லண்டனில் வாழும் கல்லூரியின் பழைய மாணவர்களான ரகு சுகன்யா குடும்பத்தினர் கல்லூரியுடன் அமைந்துள்ள தமது சுமார் 9 பரப்புக் காணியையும் வீட்டையும் கையளித்துள்ளார்கள்.

விருந்தினர்கள் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள கொக்குவில் கிழக்கு கிருபாகர சுவாமி ஆலயத்தில் இருந்து பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியம் அணிவகுப்பு மற்றும் கோலாட்டத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நம்பிக்கை நிதியத் தலைவர் பொ.கமலநாதன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் தேவராசா இல்ல வளாகம் என குறிப்பிடப்பட்ட இந்த வளாகத்தை வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் திறந்து வைத்தார்.

வளாகத்தில் அமைக்கப்பட்ட தேவராசாவின் நினைவுச் சிலைக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் மலர் மாலை சூட்டினார்.

தொடர்ந்து மாணவிகளுக்காக அமைக்கப்பட்ட உள்ளக விளையாட்டரங்கை திருமதி.கிருபாகரி இளங்கோவன் திறந்து வைத்தார். தொடர்ந்து சங்கீத அறையைச் சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் திறந்து வைத்தனர்.

நினைவுக் கல்லை உறவினர்களான க.குலசிங்கம், ம.தம்பாப்பிள்ளை மற்றும் அதிபர் ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

(வ-86)

## 7 ஆம் திகதிவரை 10 லட்சம் பேர்

கொழும்பு, பெப்.9

தேசத்தின் மகுடம் கண்காட்சியின் நான்காவது தினமான நேற்றுமுன்தினம் நண்பகல் வரை கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு வந்துள்ளோர் 10 லட்சம் பேரைத் தாண்டியுள்ளதாகக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கண்காட்சியின் ஆரம்ப தினமான கடந்த நான்காம் திகதியில் இருந்து கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக இலங்கையின் சகல பாகங்களில் இருந்தும் மக்கள் வந்து சேர்கின்றனர். கண்காட்சித் திடலுக்கு வெளியே நீண்ட வரிசையில் வாகனங்கள் நிற்பதனால் அந்தப் பகுதியில் பெரும் வாகன நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



கொழும்பு கங்காராம விகாரையின் வருடாந்த நவம் பெரஹர ஊர்வலம் இரண்டாவது நாளாகவும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

## கண் பரிசோதனைக்குச் சென்றோர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்

யாழ்ப்பாணம், பெப்.9

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கண் பரிசோதனைக்குச் சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள நான்கு ஆதார வைத்திய சாலைகளிலில் புதன்கிழமைகளில் சுகாதார அமைச்சின் விஷன் 2020 செயற்றிட்டத்தின் கீழான கண் பரிசோதனை நடைபெறுமெனச் சுகாதாரத் திணைக்களத்தினால் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது புதன் கிழமைகளில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கண்பரிசோதனை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தென்மராட்சி, கிளிநொச்சி, பூநகரி, வடமராட்சி கிழக்கு, பளை போன்ற இடங்களில் இருந்து பெருமளவு மக்கள் நேற்றுச் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வந்திருந்தனர்.

கிளினிக் நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் ஏதும் காணப்படாததால்.வைத்திய சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டபோது கண் பரிசோதனை தொடர்பான அறிவித்தல் தமக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பரிசோதனைக்கு வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

## 42 முன்னாள் போராளிகள் பெற்றோர்களிடம் ஒப்படைப்பு

கொழும்பு, பெப்.9

புனர்வாழ்வளிக்கப்பட்ட 42 முன்னாள் புலி உறுப்பினர்கள் நேற்று புதன்கிழமை நன்பகல் அநுராதபுரம் ஓயாமடுவ பகுதியில் நடைபெற்றுவரும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியின் பிரதான மேடையில் வைத்து அவர்களது பெற்றோர்கள் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

> தேசத்துக்கு மகுடம் கண்காட்சியின் பிரதான மேடையில் வைத்து அவர் களது பெற்றோர்கள் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்புத்துறை அமைச்சர் சந்திரசிறி கஜதீர தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, பிரதி அமைச்சர் டபிள்யு.பீ.ஏக்கநாயக்க, சிறைச்சாலைகள் மறுசீரமைப்புஅமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க, புனர்வாழ்வு ஆணையாளர் சந்தன ராஜகுரு, சிறைச்சாலைகள் ஆணையாளர் டபிள்யு. பீ.கொடிப்பிலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட 42 முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர்களையும் பொறுப்பேற்க அவர்களது பெற்றோரும், உறவினர்களும் உயாமடுவ தேசத்துக்கு மகுடம் கண்காட்சிப் பிரதேசத்துக்கு வருகை தந்திருந்தனர்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட இவர்களை பெற்றோர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

(ச - 301)

## 'சொர்க்கத்தின் வாசலிலே' நாடக அரங்கேற்றம்



தென்மராட்சி, மீசாலை வேம்பிராய் பிரதேசத்தில் அமைந்துள்ள சுத்த சன்மார்க்க சத்தியஞானக் கோட்டத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு இந்தியா, சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

மாலை 6 மணி முதல் நேற்றுக்காலை 6 மணிவரை இடம்பெற்ற இந்தக் கலை நிகழ்வுகளில் கவிஞர் கே.ரஜனிகாந்தன், ஆசிரியர் எஸ்.தனேஸ் ஆகியோரின் இணை இயக்கத்திலும், நெறியாள்கையிலும் உருவான 'சொர்க்கத்தின் வாசலிலே' சிறப்பு நகைச்சுவை நாடகம் அரங்கேற்றப் பட்டது.

சமூகச் சீர்கேடுகளை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட இந்த நகைச் சுவை நாடகம் சபையோரின் அமோக வரவேற்பைப் பெற்றது. (ம)

## இன்று திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.9

இந்து பௌத்த பேரவையின் சாவகச்சேரிக் கிளை இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க, லலித் அத்துலத் கல்லூரி அதிபர் கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தினதரர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரணி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவிலும் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-13-16)

## இலங்கை மீனவர் 25 பேர் நாகபட்டினத்தில் கைது

இந்திய - நாகப்பட்டினம் கடற் பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் 25 பேர் ஐந்து மீன்பிடிப் படகுகளுடன் இந்திய கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கவிசா புதா, லக் சயுர, லக்சிறி-4, லக்சிறி-1 மற்றும் லக்சிறி -2 ஆகிய படகுகளும் அதில் பயணித்தவர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் சர்வதேச கடல் எல்லைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து மீன்பிடிப் படகுகளிலும் உயர் தொழில்நுட்பம் பொருத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நட வடிக்கையில் ஈடுபட்டதாக இந்த வருடம் கைது செய்யப் பட்ட இரண்டாவது இலங்கை மீனவர் குழு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம், பெப்.9

சுழிபுரம் வட கிழக்கு சம்புநாதஸ்வர சிவன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தினமும் பகல், இரவுத் திருவிழாக்கள் நடைபெற்று சுவாமி வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (வ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 55 ஆயிரத்து 336 ஹெக்ரெயரில் வடக்கில் புதிதாகப் பயிர்ச்செய்கை

2011 ஆம் ஆண்டின் சிறுபோகச் செய்கையின் போது 13 ஆயிரத்து 876 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்,பெப்.9

வடக்கு மாகாணத்தில் கடந்த 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டின் பெரும்போக பயிர்ச் செய்கையின் போது 55 ஆயிரத்து 336 ஹெக்ரெயர் கைவிடப்பட்ட நிலப் பரப்பில் புதிதாக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் புள்ளி விவரத் தகவலை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட தரவுகள் வருமாறு:

78 ஆயிரத்து 279 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது. அதில் 43 ஆயிரத்து 636 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் புதிதாக நெற் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏனைய சிறுதானிய செய்கை 21 ஆயிரத்து 645 ஹெக்ரேயரில் மேற் கொள்ளப்பட்டது. அதில் 8 ஆயிரத்து 689 ஹெக்ரேயர் கைவிடப்பட்ட நிலத்தில் புதிதாக நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டது.

அதே போல 6 ஆயிரத்து 392 ஹெக்ரேயர் நிலத்தில் மரக்கறி செய்கை மேற் கொள்ளப்பட்டது. இதில் கைவிடப்பட்ட நிலத்தில் ஆயிரத்து 420 ஹெக்ரேயர் மரக்கறிச் செய்கை மேற் கொள்ளப்பட்டது.

பழவகைகள் ஆயிரத்து 284 ஹெக்ரேயரில் மேற் கொள்ளப்பட்டன. இதில் புதிதாக 946 ஹெக்ரேயர் நிலப்பகுதியில் அவை செய்கை பண்ணப்பட்டன.

தெங்குச் செய்கை 15 ஆயிரத்து 793 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள் ளப்பட்டது. அதில் 645 ஹெக் ரேயரில் புதிதாக செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இதேபோல கடந்த 2011 ஆம் ஆண்டின் சிறுபோகச் செய்கையின் போது 13 ஆயிரத்து 876 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுதானியச் செய்கை 2 ஆயிரத்து 803 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள் ளப்பட்டது. (த-3)

# ஸ்ரான்லி வீதியிலுள்ள விடுதிகளும் புனரமைப்பு

இந்திய நிறுவனத்திடம் இந்தப் புனரமைப்புப் பணிகளும் கையளிக்கப் படவுள்ளது.

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள ரயில்வே திணைக் களத்துக்குச் சொந்தமான விடுதிகளும் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடுதிகளில் தங்கியிருந்த மக்கள் வெளியேறியுள்ளதை அடுத்து, இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மக்கள் விடுதிகளை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதை அடுத்து அவற்றைத் துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ரயில் பாதை புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் இந்திய நிறுவனத்திடம் இந்தப் புனரமைப்புப் பணிகளும் கையளிக்கப் படவுள்ளதாகக் கூறப் படுகிறது. (ம)

# சமூக சீர்கேடுகளைக் கண்டித்து பிரசுரம்


கலாசாரச் சீரழிவுகளையும் சமூகச் சீர்கேடுகளையும் கண்டித்து கைதடியில் பல்வேறு இடங்களிலும் எச்சரிக்கைப் பிரசுரங்கள் மக்கள் பார்வைக்காக ஒட்டப்பட்டுள்ளன.

கைதடிப் பகுதிகளில் அண்மைக்காலமாக சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துக் காணப் படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் தொடரும் பட்சத்தில், அவர்கள் மக்கள் முன் பகிரங்கப்படுத் தப்படுவார்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரசுரங்கள் பொது இடங்களில் இவை ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-288)

# போதையில் தகராறு பெண்ணுக்கு அபராதம்

மதுபோதையில் குழப்பம் விளைவித்த பெண்ணுக்கும் கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸரால் சாவகச்சேரி நகர்ப் பகுதி பெண்ணுக்கு எதிராக மதுபோதையில் குழப்பம் விளைவித்ததாக விசாரித்த நீதிவான் எதிர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு எதிராக கசிப்பு வைத்திருந்ததாகத் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் மூன்று மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ம-9)



இருபாலைப் பகுதிக்குக் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் முதற்கட்டப் பணியாக இராச வீதியூடாக நிலத்தடிக் குழாய்கள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ம-17)

# துறைமுகத்தில் நெரிசல் கடலில் வீழ்ந்த குழந்தை

நயினாதீவுக்குச் செல்வ தற்காகத் தென்பகுதியில் இருந்து பெருமளவு மக்கள் வருகை தருவதால், குறிகாட்டுவான் துறைமுகத்தில் நெருக்கடி அதிகரித்துக் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம், பெப்.9

நயினை நாகபூஷணி அம்மனுக்கு நேர்த்திக்கடன் நிறைவேற்றச் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் ஒருவரின் பச்சிளம் குழந்தை துறை முகத்தில் நெரிசல் காரணமாகத் தவறிக் கடலில் வீழ்ந்தது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

அங்கு நின்ற குழந்தையின் உறவினர் கடலில் இறங்கி குழந்தையைக் காப்பாற்றினார்.

மதியழகன் பபிநாத் என்ற ஐந்து வயதுக் குழந்தையே இவ்வாறு தண்ணீருக்குள் வீழ்ந்த நிலையில் மீட்கப்பட்டது.

நயினாதீவுக்குச் செல்வதற்காகத் தென்பகுதியில் இருந்து பெருமளவு மக்கள் வருகை தருவதால், குறிகாட்டுவான் துறைமுகத்தில் நெருக்கடி அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிகாட்டுவானில் ஏற்படக் கூடிய நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் புங்குடுதீவு கழுதைப்பிட்டி துறைமுகத்தை நயினாதீவுக்குச் செல்லும் உல்லாசப் பயணிகளுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே அபிப்பிராயம் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7-16)

# மின் விநியோக நேரம் நீடிப்பு

மின்பிறப்பாக்கி பழுதடைந்தால் இருளில் இருக்க வேண்டியதுதான்.

யாழ்ப்பாணம், பெப்.9

அனலைதீவு, எழுவை தீவுப் பகுதிகளில் இலங்கை மின்சார சபையால் விநியோகிக்கப்பட்டு வரும் மின்விநியோகம், ஜனவரி மாத இறுதிப் பகுதியிலிருந்து காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரையும் நேர நீடிப்புச் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

வார நாள்களில் அரச அலுவலகங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகளின் தேவை கருதியும், அனலை தீவு மின் பாவனையாளர்களின் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கமையவும் இந்த நேர நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அனலைதீவில் இலங்கை மின்சார சபையால் ஒரேயொரு மின் பிறப்பாக்கி மூலம் இரவில் 6 மணி முதல் 10 மணிவரையும் அதிகாலை 5மணி முதல் 6.30 மணிவரையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த மின் பிறப்பாக்கி பழுதடையும் சந்தர்ப்பத்தில் மின் வழங்குவதற்கான மாற்று மின் பிறப்பாக்கி இல்லாத காரணத்தால் பழுதடைந்த மின் பிறப்பாக்கி திருத்தப்படும்வரை அனலை தீவு, எழுவைதீவு மக்கள் இரவில் காத்திருக்க வேண்டிய துர்ப் பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவதாக மக்கள் கருத்துத் தெரிவித்தனர். (ம-16-251)

# குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்க பருத்தித்துறையில் வேலைகள் மும்முரம்

வடமராட்சி, பெப்.9

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் பருத்தித்துறை நகரப் பகுதி மற்றும் புறநகர்ப் பகுதிகளில் குழாய் மூலம் குடி தண்ணீர் விநியோகிப்பதற்கான வேலைகள் ஆரம்பமாகி மும்முரமாக நடை பெற்று வருகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் முதலாம் கட்டமாக 600 மில்லியன் ரூபா செலவில் இதற்கான வேலைகளைத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டுள்ளது.

குடிதண்ணீர் விநியோகத்துக்கென வல்லிபுரம், ஆனைவிழுந்தான் பகுதிகளில் 4 கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

தற்போது இரு கிணறுகள் அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றன.

இந்தக் கிணறுகளிலிருந்து பெறப்படும் குடி தண்ணீர் வல்லிபுரக் கோயிலுக்குக் கிழக்கே சமுத்திரத் தீர்த்தமாட சுவாமி செல்லும் வழியில் பெரிய தண்ணீர்த் தாங்கி நிறுவப்பட்டு அதிலிருந்து பருத்தித்துறை நகரப் பகுதி மற்றும் பகுதிகளுக்கு குழாய் மூலம் வழங்கப்படும்.

கிணறுகளுடன் பெரிய தண்ணீர்த் தாங்கி அமைக்கும் வேலைகளும் நடை பெற்று வருகின்றன.

குடிதண்ணீர் விநியோகத்துக்கென பருத்தித்துறை நகரப் பகுதியிலும் 'புலோலிப் பகுதியிலும் பெரு வீதி, மற்றும் சிறு வீதிகள் ஓரமாக நிலத்துக்கடியில் தண்ணீர்க் குழாய்கள் புதைக்கும் பணிகளும் வேகமாக நடை பெற்று வருகின்றன்.

இந்தத் திட்டத்துக்கான பத்து வீதமான வேலைகளே இதுவரை பூர்த்தியடைந்துள்ளதாகவும் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் வேலைகள் யாவும் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தேசிய நீர்வழங்கலில் வடிகாலமைப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 1983 களில் பருத்தித்துறை நகருக்கென வெளிநாட்டு உதவியுடன் வடமராட்சி கிழக்கில் உள்ள மணற்காட்டில் குழாய்க் கிணறுகள் நிறுவப்பட்டு குடிதண்ணீர் பெறப்பட்ட புலோலி கிழக்குப் பகுதிகளில் பெரிய தண்ணீர்த் தாங்கி அமைக்கப்பட்டு அதன் மூலமாக குடிதண்ணீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அசாதாரண சூழ்நிலைகளால் கைவிடப்பட்டிருந்தது.

மீண்டும் சுமார் 30 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் பெரிய அளவில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் தண்ணீர்க் கிணறுகள், தண்ணீர்த் தாங்கிகளின் அமைவிடங்கள் மாற்றமடைந்துள்ளன.

எனினும் தண்ணீர் விநியோகத்துக்காக குழாய்கள் செல்லும் பாதை வழி 1983 இல் திட்டமிட்ட அதே பாதை வழியிலேயே நிலத்தடி மூலம் அமைக்கப்பட்டு வருகின்றன.

1983 காலப் பகுதியில் நிலத்தடியில் புதைக்கப்பட்ட தண்ணீர்க் குழாய்கள் சில பகுதிகளிலிருந்து யுத்த காலத்தின் போது மீட்கப் பட்டிருந்தன.

சில பகுதிகளில் தற்போது குழாய்கள் புதைக்கப்படும்போது முன்னர் புதைக்கப்பட்ட குழாய்கள் வெளியே எடுக்கப்பட்டு வருகின்றன. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மின் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் அமைக்கப்படும்

## ஜனவரியில் அது தொழிற்படும்

யாழ்ப்பாணம், பெப்.9

சுன்னாகத்தில் 24 மெகா வாற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய புதிய மின் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி முதல் அது செயற்படும். இதன் மூலம் இந்த வருட இறுதிக்குள் யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சார விநியோகம் வழங்கப்படும். மேலும் யாழ்.மாவட்டத்தில் தற்போது அதிகரித்துள்ள மின் பாவனைக்கு ஏற்றால் போல் மின்னை எங்களால் வழங்கமுடியாதுள்ளது. அதனையும் விரைவில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மின் விநியோகம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாணத்தில் வழங்கப்படும் மின்விநியோகத்தில் இடையூறுகள் உள்ளதென்பதை ஏற்றுக்கொள்கின்றேன். யாழ்.மாவட்டத்தில் மின் உற்பத்தியில் ஈடுபடும் எமது இயந்திரங்கள் பழைமையானவை.

அத்துடன் 'நொதர்ன் பவர்' மூலம் 30 மெகாவாற்ஸ் மின்சாரத்தை எதிர்பார்க்கின்றபோதும் துரதிர்ஷ்டவசமாக 18 மெகாவாற்ஸ் மின்சாரமே எமக்குக் கிடைக்கின்றது. அந்த மின்பிறப்பாக்கிகளில் குறைபாடுகள் இருப்பதனால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

சுன்னாகம் மின் நிலையம் மிகப் பழைமை வாய்ந்தது. இதனை நாங்கள் அழிக்காமல் அந்த இடத்தில் 24 மெகா வாற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய புதிய மின்நிலையம் ஒன்றை அமைக்க இருக்கின்றோம். இந்த மின் நிலையம் எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து செயற்படும்.

மேலும் தேசிய மின்வலையமைப்புடன் பரந்தன் இணைக்கப்பட்டதன் மூலம் பளை வரையில் உடனடியாக மின்சாரம் வழங்க முடிகின்றது. விரைவில் சாவகச்சேரி வரையில் வவுனியாவிலிருந்து பெறப்படும் மின்சாரம் போதுதானதாக அமையும் போது குடாநாட்டில் மின்தட்டுப்பாடு ஏற்படாது.

அத்துடன் ஒரு யுனிட் மின்சாரத்தை 32 ரூபாவுக்குத் தனியார் நிறுவனத்திடம் இருந்து பெற்று மக்களுக்கு மின்சாரசபை 5 ரூபாவுக்கு அதை வழங்கு கின்றது. இதனால் ஏற்படும் பெருமளவு நட்டத்துக்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மானியம் வழங்குகின்றது.

மின்சாரம் நிறுத்தப்படுவது தொடர்பில் மக்களுக்கு முன்கூட்டியே பத்திரிகைகள் மற்றும் வானொலிகள் மூலமாகவும் அறிவிப்பது மட்டுமன்றி ஒலி பெருக்கி ஊடாகவும் அந்தப் பிரதேசங்களில் அறிவிக்க வேண்டும். - என்றார் அமைச்சர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் மற்றும் பிரதேச செயலர்கள், பிரதேச சபைச் செயலர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-5)

## படையினர் புனரமைத்த முன்பள்ளி குருநகரில்



யாழ்ப்பாணம், பெப்.9

குருநகரில் யாழ்.பெஸ்கி முன்பள்ளி இராணுவத்தினரால் புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த ஒரு வருட காலமாக குறித்த முன்பள்ளி புனரமைப்புச் செய்யப்படாமல் இயங்காத நிலையில் இருந்தது. அத்துடன் அதனுடன் இணைந்த சிறுவர்களின் விளையாட்டுத் திடலும் புனரமைப்பின்றி இருந்தது.

இதனை 50 ஆயிரம் ரூபா செலவில் இராணுவத்தின் 512 ஆவது பிரிகேட்டின் 9 ஆவது படைப்பிரிவு புனரமைப்புச் செய்தது.

இதனை நேற்றைய தினம் 51 ஆவது பாதுகாப்புப் படைப்பிரிவு தலைவர் பிரிகேடியர் ஏ.டி.சற். விக்கிரமரத்ன மற்றும் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

அதன் பின்னர் குருநகர் சென். றோக்ஸ் பாடசாலை மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களும் முன்பள்ளி மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ம-5)

## கோப்பாய் மீன் சந்தையை இயங்க வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.9

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் உரிய மீன்சந்தை இன்மையால் கடலுணவுகளைப் பெறுவதில் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

**உரிய மீன்சந்தை இன்மையால் கடலுணவுகளைப் பெறுவதில் சிரமம்.**

கோப்பாய், உரும்பிராய் வீதியில் கிருஷ்ணர்கோயில் சந்திக்கு அண்மித்த பகுதியில் வீதியோரத்தில் வைத்தே கடந்த சில வருடங்களாகக் கடலுணவுகள் விற்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே கோப்பாய் சந்திக்கு அருகில் வலி. கிழக்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான மீன் விற்பனை சந்தை ஒன்று உள்ளது.

இந்தச் சநதை கடந்த பல வருடங்களாகப் பாவனையின்றி காணப்படுகின்றது.

இந்த மீன் விற்பனைச் சந்தையை மீளத் திறந்து அங்கே மீன் விற்பனையை மேற்கொள்வதற்குச் சம்பந்தபட்ட வலி.கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நுகர்வோர் மத்தியில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கிருஷ்ணர் கோயில் சந்திக்கு அருகில் வீதியோரத்தில் இந்த மீன் விற்பனை இடம்பெறுவதால் அங்கு சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டுக் காணப்படுகின்றதாகவும் கூறப்பட்டது. (ம-17)



தைப்பூசத் தினமான நேற்று முன்தினம் அறுவடை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மும்முரமாக அறுவடை இடம்பெற்று வருகிறது. (ம-86)

## சத்திரச் சந்திக்கு தார்க் கலவைப் பூச்சு

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.நகரில் மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படும் சத்திரச்சந்திப் பகுதி தார்க்கலவை மூலம் திருத்தப்பட்டு வருகின்றது.

நகரில் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு இந்த வீதி பெரும் சேதமடைந்து காணப்படுகின்றது.

வீதியில் பெரும் உடைவுகள், குழிகள் ஏற்பட்டுக் காணப்படுகின்றன. இந்தச் சேதத்துக்குத் தார்க் கலவை போட்டு திருத்தப்படுகிறது. (ம-17)

## கோவா செய்கையில் ஆர்வம்



யாழ்ப்பாணம், பெப்.9

கோப்பாய் இராச வீதியில் உள்ள விவசாய நிலங்களில் கோவா செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

இந்தப் பகுதியிலுள்ள பெருமளவான நிலங்களில் விவசாயிகள் கோவாச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தக் கோவா பயிர்கள் நல்ல நிலையிலும் காணப்படுகின்றன.

தற்போது கோவாச் செய்கைக்கான காலமாகையால் வயல் வெளிகளில் கோவா மிகவும் அழகாகக் காணப்படுகின்றது.

இதேவேளை, ஒரு கிலோ கோவா 60 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# முறைப்பாட்டாளர் மொழியில் பதிவு செய்யப்படாத அறிக்கை

## ஒத்திவைக்கப்பட்டது விசாரணை

யாழ்ப்பாணம், பெப்.9

கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்பான முதல் முறைப்பாட்டு அறிக்கை, முறைப்பாட்டாளரின் மொழியில் பதிவு செய்யப்படாத காரணத்தால் அதனைச் சட்ட ரீதியாக விசாரணை செய்ய முடியாது என்று எதிர்த்தரப்பு சட்டத்தரணி மன்றில் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து இது சட்டத்துக்கு முரணான வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டதை அடுத்து, இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கல்வியங்காட்டுப் பகுதியில் கடந்த 2003 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மூவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

ஒன்பது வருடங்கள் கடந்த நிலையில் இந்த வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் கடந்த வாரம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர். அந்தக் காலப் பகுதியில் கோப்பாய் பொலிஸில் குற்றவியல் பிரிவு அதிகாரியாக இருந்தவரும் மன்றில் விசாரணையில் சாட்சியளித்தார்.

கல்வியங்காட்டிலுள்ள வீடொன்றில் அத்துமீறி நுழைந்த மூவர் அங்கிருந்த பெண்ணைத் தாக்கி அவர் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் நிறையுடைய சங்கிலியை அறுத்ததோடு, அங்கிருந்த சைக்கிள் ஒன்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாகக் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அதுபற்றி விசாரணையில் ஈடுபட்டு சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்தனர். அவர்களில் ஒருவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் கொள்ளையடிக்கப்பட்ட சைக்கிள் மட்டும் பிறிதொரு இடத்திலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டது. மன்றினூடாக அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான எஸ். செலஸ்ரீன் மற்றும் திருமதி ஜொனி மதுரநாயகம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்த சட்டத்தரணி செலஸ்ரீன், 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைக் கோவைச் சட்டத்தின் 109 ஆம் பிரிவின் படி, ஒரு குற்றச்செயல் நடைபெற்றது என்பது தொடர்பாக ஒருவரிடமிருந்து முறைப்பாடு பதிவு செய்யப்படவேண்டுமாயின் தகவல் தருபவர் அல்லது முறைப்பாட்டுக்காரர் அதுபற்றி எழுதித்தரவேண்டும். தகவல் தருபவர் எழுதமுடியாத பட்சத்தில் தகவல் தருபவரின் மொழியில் முதல் முறைப்பாட்டுப் பத்திரம் பதிவுசெய்யப்படல் வேண்டும்.

அவ்வாறில்லாத பட்சத்தில் வேறு தேசிய மொழியில் அதுபதிவு செய்யப்படுவதாயின், அதற்கான காரணம் குறிப்பிடப்பட்ட பின்னரே பிறமொழியில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அவ்வாறு இருக்கத் தவறும் பட்சத்தில் அந்த முதல் முறைப்பாட்டுப் பத்திரம் சட்டத்துக்கு முரணானது என்றும் அதனடிப்படையில் நடைபெறும் விசாரணையும் சாட்சியங்களும் சட்ட வலுவற்றவை என்றும் கூறப்பட்டது. இந்த முதல் முறைப்பாட்டுப் பத்திரத்தை வைத்து விசாரணை நடத்த முடியாது எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. இதனையடுத்து விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. தொடர் விசாரணை இந்த வாரம் இடம்பெறவுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போருக்குப் பின்னர் மட்டும் மட்டக்களப்பில் 23 விகாரைகள்

**பௌத்த கலாசார பீடங்களை நிறுவுவதற்கு இலங்கையின் எவ்விடத்திலும் காணியைக் கொள்வனவு செய்யலாம் என்கின்ற சட்டத்தைக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டுகிறார் யோகேஸ்வரன்.**

வெல்லாவெளி, பெப். 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் போருக்குப் பின் 23 பௌத்த விகாரைகள் படையினரால் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேவேளை, பௌத்த மதஸ்தலங்களை ஸ்தாபிப்பதற்கு, பௌத்த கலாசார பீடங்களை ஸ்தாபிப்பதற்கு இலங்கையின் எவ்விடத்திலும் காணியைக் கொள்வனவு செய்யலாம் என்கின்ற சட்டத்தைக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் இனப் பிரச்சினை இல்லை என்று கூறுபவர்கள் மறைமுகமாக மதப் பிரச்சினையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக எமது வரலாறுகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஆலயங்களின் வரலாறுகள் மக்கள் மத்தியில் சென்றடையவேண்டும். அது ஆதாரமாக எங்கள் மத்தியில் இருக்கவேண்டும். அப்போது தான் நாங்கள் பல விடயங்களை வைத்து வாதாடலாம். அழிக்கப்பட்ட ஆலயங்கள், உடைக்கப்பட்டு பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்ட ஆலய்ங்கள் தொடர்பான விவரங்கள் சர்வதேச ரீதியில் இருக்கின்ற அமைப்புகளிடம் கொடுத்திருக்கிறோம். அதற்கான நடவடிக்கையை எடுப்போம். எங்களது பூர்வீக பூமியை நாங்கள் காப்பாற்ற வேண்டும்.

இந்த வரலாற்று நூலை வெளியிடுவதற்கு முன்னர் ஒரு திகதி குறிப்பிடப்பட்டது. ஆனால், துரதிஷ்டவசமாக இந்த வரலாற்று நூலைக் குறிப்பிட்ட திகதியில் வெளியிட முடியாத நிலை எங்களுக்கு உருவாகியது. இந்த நாட்டில் நாங்கள் எந்தளவிற்கு சுதந்திரத்தை இழந்திருக்கிறோம் என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஆலயத்தின் ஒரு வரலாற்றை வெளியிடுவதற்கு திகதி குறித்து ஏற்பாடு செய்து ஊடகங்களில் அறிவித்த பின் பாதுகாப்புப் படையினரின் செயற்பாடு காரணமாக அன்றைய நாள் மாவீரர் தினம் என்ற ரீதியில் இந்த நூல் வெளியீடு தடை செய்யப்பட்டது.

இது இந்த நாட்டில் இந்துக்களுக்கு விடுக்கப்படுகின்ற ஒரு சவால் என்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எந்த வகையில் இந்துக்களாகிய நாங்கள் இங்கு அடக்கப்பட்டிருக்கின்றோம் என்பதையும் வெளியிடவேண்டும். அன்றையதினம் மாவீரர் தினமாக இருந்தாலும் நாங்கள் மாவீரர் தின நிகழ்வு நடத்தவில்லை. நாங்கள் நடத்தியது ஓர் ஆலயத்தின் வரலாற்று நூலை வெளியிடும் நிகழ்வு ஆகும். ஆனால், நாங்கள் நூல் வெளியிடும் போது தான் தடைகள் அங்கு ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால், அதேநாளில் ஜனாதிபதி அதிவேக வீதியைத் திறந்து வைக்கிறார். இச்சம்பவம் நாங்கள் ஒடுக்கப்படுகிறோம் என்பதற்கு எடுத்துக் காட்டாகும். - என்றார். (ச)

# மட்டு – திருமலை வீதிகளில் ஆறு பஸ் தரிப்பிடங்கள்

கிண்ணியா, பெப். 9

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்லும் முக்கியமான வீதிகளிலுள்ள சந்திகளில் ஆறு பஸ்தரிப்பு நிலையங்களை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விடயம் சம்பந்தமான கலந்துரையாடல் மூதூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் திருகோணமலையிலிருந்தும், மூதூரிலிருந்தும் இரவு நேர பஸ்கள் மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை முதலான இடங்களுக்கு, மூதூர், தோப்பூரூடாகச் செல்கின்றன. இது போன்றே மட்டக் களப்பு, கல்முனை, அம்பாறை ஆகியவற்றிலிருந்து வருகின்ற பஸ்களும் இதே வழியூடாகவே வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட் டது.

இவ்வாறு இரவு நேரங்களில் இந்த பஸ்கள் மூலமாக வருகை தருகின்ற பெண்களும் சிறுவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று கூறப்பட்டது.

இதையடுத்து, அவர்கள் தரித்து நிற்பதற்குப் போதியளவு வசதிகள் இல்லாதமையால் தோப்பூர் சந்தி, திரி சீடி சந்தி ஆகிய இடங்களில் தலா ஒரு பஸ்தரிப்பு நிலையமும், கிண்ணியா, மூதூர் வீதிகளில் 4 பஸ் தரிப்பு நிலையங்களும் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வடிவமைப்பும் மதிப்பீடும் கிழக்கு மாகாண கட்டடத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படும். இதற்கான நிதி திருகோணமலை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளரினால் வழங்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

(ச)

# மக்கள் பிரச்சினைகளை கவனத்தில் எடுப்பதில்லை

நுவரெலியா, பெப்.9

அமைச்சர் சந்திரசேகரன் தனது காலத்தில் மலையக மக்களது உரிமைகளுக்காக மாத்திரமின்றி, இலங்கையின் சகல சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளையும் தேடிச்சென்று ஆராய்ந்து வெளிக்கொணர்ந்தார். ஆனால், அவரது மறைவுக்குப் பின்னர் எவரும் மக்கள் பற்றிய பிரச்சினைகளில் அக்கறைகொள்வதாகவே தெரியவில்லை என்று மலையக தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் க.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தஅறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

அண்மையில் இந்தியாவிலிருந்து உயர்மட்டத் தலைவர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர். இலங்கையின் சகல மட்ட பிரச்சினைகள் பற்றியும் ஆராய்ந்துள்ளார்கள். ஆனால், மலையக மக்களைப்பற்றி எந்த இடத்திலும் யாருமே குறிப்பிடவில்லை. இலங்கையைத் தாயகமாகஏற்றுக்கொண்டு அதன் இறையாதிக்கம் பாதிக்காமல் சகல மக்களுடனும் இணைந்து வாழ்வதே எமது நோக்கம்.

வெளிநாட்டிலிருந்து வருபவர்களிடம் எமது மக்களின் உரிமைகள் பற்றியோ, தொழிலாளர்களின் தேவைகளைப் பற்றியோ கதைக்காவிட்டாலும் பரவாயில்லை, ஆகக் குறைந்தது தேசியமட்டத்தில் அல்லது ஜனாதிபதியின் நேரடியான கவனத்துக்காகவாவது எமது பிரச்சினைகளை யாருமே தெளிவுபடுத்தாமல் இருப்பது வேதனையானது.

ஆகவே, எதிர்காலத்திலாவது தேசிய மட்டத்தில் எமது மக்களின் சகல நலன்களுக்காகவும் நாம் குரல் கொடுக்கவேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

## புதையல் தோண்டிய 9 பேர் கைது

மண்டூர், பெப்.9

அம்பாறை, தீகவாவி பிரதேசத்தில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த மூன்று கடற்படையினர் உட்பட 9 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது இவர்களை தலா ஒரு லட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அக்கரைப்பற்று நீதிவான் ரி.சரவணராஜா அனுமதித்தார்.

அம்பாறை விசேட பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், புதையல்தோண்டுவதற்குப் பயன்படுத்திய மண்வெட்டி, அலவாங்கு, கத்தி போன்ற உபரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (ச)



அநுராதபுரம், ஓயாமடுவ பகுதியில் நடைபெற்றுவரும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் கடந்த திங்கட்கிழமை பார்வையிட்டார்.

## குளிரால் முதியவர் உயிரிழப்பு

மஸ்கெலியா, பெப். 9

சிவனொளிபாதமலையைத் தரிசிக்கச் சென்ற கடந்த திங்கட்கிழமை தொம்பே அம்பலாங்கொடையைச் சேர்ந்த உபாலி குணசேகர (வயது-65) என்பவர் மலை உச்சியில் மரணமடைந்துள்ளார்.

தற்போது நிலவிவரும் கடும் குளிர் காரணமாக அவர் இறந்துள்ளார் என்று மரண பரிசோதனையின் போது, மஸ்கெலிய மாவட்ட வைத்திய அதிகாரி ஆயிசா வெத்தசிங்க தெரிவித்தார்.

மரண பரிசோதனையின் பின்னர், சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்ததாக நல்ல தண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அனில் ஜயசிங்க தெரிவித்தார். (ச)

# முதலீடு என்ற போர்வையில் மூதூரில் காணி சுவீகரிப்பு

திருகோணமலை, பெப்.9

முதலீடு என்ற போர்வையில் சம்பூர் அனல் மின் நிலையம் தவிர்ந்த ஏனைய பகுதிகளையும் சுவீகரிக்க முயற்சிகள் நடைபெறுவதாகத் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அவசர மனு ஒன்றை அனுப்பியுள்ளார். இந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

சம்பூர் பிரதேசம், கடற்கரைச்சேனை உட்பட கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 400 ஹெக்ரெயர் பரப்பைக் கொண்டது. இதில் 500 ஏக்கர் அனல் மின் நிலையம் அமைக்க ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுதி நிலப் பரப்பிலும் இலங்கை முதலீட்டுச் சபை இந்திய, ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு தொழிற்சாலைகள் அமைப்பதற்கு அனுமதியளிக்கும் முன்னேற்பாடாக மூதூர் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் அதிகாரி, முதலீட்டுச் சபையால் கொழும்புக்கு அழைக்கப்பட்டுச் சம்பூர் பிரதேசம் தொடர்பாகவும் அதன் வரைபடம் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இந்திய நிறுவனம் தொழிற்பேட்டை அமைப்பதற்காக 4 மில்லியன் அமெரிக்க டொலரை முதற்கட்டமாகச் செலவிடவுள்ளதாவும் தெரிகிறது. தங்களுக்கு இலங்கை அரசு அனல் மின் நிலையம் தவிர்ந்த ஏனைய பகுதியில் மக்களைக் குடியமர்த்தத் தயார் என அறிவித்த பின்னரும் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்விடங்கள் பறிக்கப்படுவதற்கான தொடர்நடவடிக்கை கள் அரசால் மேற்கொள்ளப்படுவது [illegible] தேன்- என்றுள்ளது. (ச)

# தொழிலாளரின் வேலைப்பளு அதிகரிப்புக்கு தோட்ட நிர்வாகங்களே முக்கிய காரணம்

நுவரெலியா,பெப்.9

தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகங்களின் அழுத்தங்களுக்கு உள்ளாகி வருகின்றமைக்கு கூட்டு ஒப்பந்தத் தொழிற்சங்கங்களே காரணமாகும் என்பதைத் தோட்டத் தொழிலாளர்கள் தற்போது உணரத் தொடங்கியுள்ளனர் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம் தெரிவித்தார்.

கொட்டகலை, ஜாமஸ் தோட்டத்தின் புதிய குடியிருப்புக்கான நீர் விநியோகத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோட்டத் தொழிலாளர் [illegible] சம்மதமின்றி தோட்ட நிர்வாகங்கள் தோட்டத் தொழிலாளர்களின் வேலைப்பளுவினை தன்னிச்சையாக அதிகரித்து வருகின்றன. இதன் காரணமாகத் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்பட்டு அவர்கள் பொருளாதார ரீதியாக பாதிப்படைந்து வருகின்றனர். இதற்கு கூட்டொப்பந்தத் தொழிற்சங்கங்கள் உடந்தையாகவுள்ளன.

இந்தத் தொழிற்சங்கங்களின் அங்கத்துவப் பலத்தினை பலமிழக்க செய்வதன் மூலமே தோட்டத் தொழிலாளர்களுக்கு விமோசனம் கிடைக்குமென்பதை தொழிலாளர்கள் தற்போது உணரத் தொடங்கியுள்ளனர்.

கூட்டொப்பந்தத்தில் கைச்சாத்திட்ட சில தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், தோட்டத் தொழிலாளர்கள் தற்போது எதிர்நோக்குகின்ற தோட்ட நிர்வாகங்களுக்கிடையிலான பிரச்சினைகள் தொடர்பான பேச்சுக்களில் பங்குபற்றாது தோட்ட நிர்வாகங்களின் சார்பாக செயற்பட்டு வருகின்றனர்.

தோட்டக் கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கெதிராக தற்போது எடுத்து வருகின்ற தன்னிச்சையான தீர்மானங்களுக்கு தமது மௌனமான செயற்பாடுகள் மூலமாகத் தோட்டக் கம்பனிகளின் தீர்மானங்களுக்கு சம்மதம் தெரிவித்து வருகின்றனர்.

எனவே தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பை முறையற்ற வகையில் சுரண்டுபவர்களுக்கெதிராக தொழிலாளர் தேசிய சங்கம் துணிந்து செயற்படும்.

தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் தொழிலாளர் தேசிய சங்கத்தினை மேலும் பலப்படுத்துவதுக்கு முன்வர வேண்டும். - என்றார் (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் அருணாசலம்



சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அருணாசலம் (07.02.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம் காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, தங்கச்சிப்பிள்ளை மற்றும் வள்ளிநாயகி ஆகியோரின் சகோதரனும், அரியமலரின் (அம்மாப்பிள்ளை) பாசமிகு கணவரும், கணேந்திரராஜ் (சுவிஸ்), இந்துமதி, சிவசக்தி (சுவிஸ்), நிமலேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரள்மதி (சுவிஸ்), ஸ்ரீஸ்கந்தராசா (Rango), உதயகுமார் (சுவிஸ்), றஜித்தா (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் மதுரா (சுவிஸ்), பிரணவன், தர்சன், கீர்த்தனா, ஜனனன் (சுவிஸ்), அபிராம் (சுவிஸ்), நர்த்தனா, றஸ்மிதா ஆகியோரின் அன்புமிகு பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2012) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி காளையன்மொண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*திருமதி அ. தவரத்தினம்,*
*மனைவி (அம்மாப்பிள்ளை ).*

சிறுப்பிட்டி தெற்கு,
சிறுப்பிட்டி.

# ஐயனார் ஆலயத்துக்கு கிணறு



அல்லைப்பிட்டி ஐயனார் ஆலயத்துக்கு கிணறு வெட்டும் பணிகள் அந்தப் பகுதி இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அல்லைப்பிட்டி கிழக்கு கடற்கரையில் மிகவும் பழைமை வாய்ந்த காவல் தெய்வமாக விளங்கும் ஐய னார் ஆலயத்துக்கு இதுவரை கிணறு அமைக்கப் படாததால் பூசை வழிபாடுகளின் போது பல இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டிய நிலைமை இருந்து வந்தது.

இதனைக் கருத்திற் கொண்டு அந்தப் பகுதி இளைஞர்கள் இணைந்து கிணறு வெட்டும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

தோண்டப்படும் கிணற் றுக்கு கற்கள் கொண்டு கட் டும் பணியை பொதுமக்கள் மூலம் செய்வதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

(ந-14)

# 31 ம் நாள் நினைவஞ்சலி



## திருமதி சிந்து (டயாளினி) றோய் சுரேஸ்குமார்

(யாழ். திருக்குடும்ப பழைய மாணவி)

அன்புத் தோழியே சிந்து உன் மரணச்செய்தி கேட்டு துடித்தோம் தோழியே. துள்ளித் திரிந்த காலம் பள்ளி பயின்ற ஒரு காலம். காலங்கள் போனது தோழியே பள்ளி முடித்து பல்கலைக் கழகம் கிடைத்ததும் எங்களை விட்டு பிரிந்த தோழியே உன்பிரிவு நிரந்தரம் ஆகிவிட்டது.

தோழியே உன் பிரிவால் துயருறும் குடும்பத்துக்கு மன வேதனையைத் தெரிவிக்கின்றோம். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்கின்றோம்.

*நண்பர்கள்,*
யாழ்ப்பாணம். *நண்பிகள்*




# மரண அறிவித்தல்

## திருமதி யோசேப் பவளம்மா



*யாழ்ப்பாணம், இல. 189, நாவலர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோசேப் பவளம்மா நேற்று (08-02-2012) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.*


*அன்னார் மல்லாகம் 7ஆம் கட்டை தேவாலய வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற யோசேப்பின் அன்பு மனைவியும், P.P. ராசாவின் சகோதரியும், பார்த்திமா கிருஸ்டிபுஸ்பம் (முன்னாள் தாதி, மார்பு நோய் சிகிச்சை நிலையம் தற்போது சுவிஸ்), எலன்ஞானமலர், ஸ்ரீஉதயமோகன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், கொழும்பு) ஆகியோரின் தாயும், நடராசா (முன்னாள் தாதி, யாழ் அரசினர் வைத்தியசாலை தற்போது சுவிஸ்), இராசநாயகம், யோகராணி (வலி வடக்கு பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-02-2012) வியாழக் கிழமை இல.79, நியூனம் சதுக்கம், கொழும்பு-13 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 4 மணிக்கு மாதம்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

தகவல்:
கொழும்பு. (14211) (6,7,10) குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலும்

## நல்லதம்பி முத்துலிங்கம்



மலர்வு
*1923.12.21*

உதிர்வு
*2012.01.10*

கடந்த 10.01.2012இல் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவன் நல்லதம்பி முத்துலிங்கம் அவர்களின் அந்தியேட்டிகிரியைகள் இன்று (09.02.2012) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். எங்கள் குலவிளக்கு அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்து சகல வழியிலும் உதவியவர்களுக்கும் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் உள்நாட்டி லிருந்தும் வெளி நாடுகளி லிருந்து தொலைபேசி மூலமாகவம் மின்னஞ்சல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்தியடி, கம்பர்மலை,
V.V.T. குடும்பத்தினர்.

# நீங்கா நினைவில் 31ஆம் நாள் நினைவு

## திருமதி சிந்து (டயாளினி) றோய் சுரேஸ்குமார்



அன்னை மடியில்
28★11★1980

இறைவன் அடியில்
10★01★2012

*31 நாள்கள் கடந்து சென்றாலும் ஆறாத்துயர் இன்றும் ஓயவில்லை. நித்தம் புலம்புகிறோம் உம் திருமுகத்தை காணாமல், அம்மா என என்னை அழைக்கும் உன் குரல் கோளாதே என் காதில். அருமருந்தாய் என் வயிற்றில் நீ உதித்தாய். ஆருயிர் பிள்ளையானாய். முதல் பிள்ளையாய் இன்பத்தில் திளைக்க வைத்தாய். பாசத்துக்கு எடுத்து காட்டாய் நீ இருந்தாய். ஈர்க்கும் காந்தமானாய் எல்லோர் மனதிலும் பாசமாய் நீ இருந்தாய். உனக்கென்று வாழ்ந்த அன்புக் கணவரை ஏன் விட்டுப் பிரிந்தாய். எம்மைவிட்டு ஏன் மறைந்தாய். எம் உடல் உலகை விட்டு பிரியும் வரை ஓயாது எம் துன்பம் எம்மை மறந்தாய் நீ. உனக்கென்று வாழும் உன் அன்பு கணவரை ஆழ்துயரத்தில் ஆழ்த்தி எங்கு சென்றாய் அம்மா சிந்து. இது விதியா, சதியா.*

*அன்னாரின் இரங்கல் திருப்பலி பூசை இன்று 09.02.2012 வியாழக் கிழமை காலை 6 மணிக்கு கொழும்பு சென். லூசியா ஆலயத்திலும் அதே தினம் காலை 6 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்.*

உம்மை மறவாத
அன்புக் கணவர் றோய் (லண்டன்),
அம்மா, அண்ணாமார், தம்பி, தங்கை,
மாமா, அத்தை, பெரியப்பா, சித்தி, சித்தப்பா,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:
தாய்,
றோய் - (கணவர்)
வசந்தா, சங்கீதா, பிரசாந் (சகோதரங்கள்).
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. தூதரகம் சிரியாவில் மூடப்பட்டது நிரந்தரமாக




டமாஸ்கஸ்,பெப்.9

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் இயங்கிக் வந்த அமெரிக்க தூதரகம் மூடப்பட்டு, அனைத்து ராஜதந்திரிகள் மற்றும் தூதரக ஊழியர்களை அங்கிருந்து வெளியேற்றியிருக்கிறது அமெ ரிக்கா.

அமெரிக்கத் தூதர் ரோபேர்ட் ஃபோர்ட் உட்பட 17 பேர் சிரியாவை விட்டு பத்திரமாக வெளியேறி விட்டனர். இதில் இருவர் விமானம் மூலமாக வெளியேற, ஏனையவர்கள் சிரியாவின் எல்லையை கடந்து அருகிலுள்ள ஜோர்தான் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

அமெரிக்கத் தூதரகம் எந்த நிமிடத்திலும் தாக்கப்படலாம் எனவும், அமெரிக்க ராஜதந்திரிகள் கொல்லப்படலாம் எனவும் உளவுத் தகவல்கள் கிடைத்திருப்பதாக சி.ஐ.ஏ. அறிக்கை கொடுத்ததை அடுத்தே, அமெரிக்கா இந்த முடிவை எடுத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. தமது தூதரகத்தை மூடுவது என்ற விஷயத்தை, தூதரக அதிகாரிகள் இரகசியமாகவே வைத்திருந்தனர். சிரியா நாட்டு வெளியுறவு அமைச்சுக்கு கூட இது பற்றி தெரிவிக்கப்படவில்லை.

கடந்த திங்கட்கிழமை டமாஸ்கஸ் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட முதலாவது விமானத்தில், அமெரிக்கத் தூதரும், மற்றொரு அதிகாரியும் பொருள்கள் ஏதுமின்றி பயணம் செய்தனர். அதனால், அவர்கள் மீது தூதரகத்தை கைவிட்டுப் போகிறார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கவில்லை. அதன்பின் வெவ்வேறு வாகனங்களில், வெவ்வேறு நேரங்களில், மற் றைய 15 அமெரிக்கர்களும் சிரியா - ஜோர்தான் எல் லையைக் கடந்தனர். இறுதி நபர் வெளியேறிய பின்னர் தான், ஜோர்தான் தலைநகர் அமானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து, சிரியா நாட்டு வெளியுறவு அமைச்சுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. சிரியாவில் இயங்கி வந்த எமது தூதரகம் இன்றுடன் நிரந்தரமாக மூடப்படுகின்றது.

கடந்த ஒக்ரோபரில் உயிர் அச்சுறுத்தல் காரணமான அமெரிக்க தூதர் தாம் தனியே சிரியாவை விட்டு வெளியேறியிருந்தார். அதன்பின், சிரிய அரசு கொடுத்த உத்தரவாதத்தின் பேரில் மீண்டும் வந்திருந்தார். இந்த முறை நிரந்தரமாக தூதரகத்தையே மூடிவிட்டு சென்றுவிட்டார்கள். இதே வேளை தூதரகப் பணியில் இருந்த உள்நாட்டவர்களுக்கு அமெரிக்க நடைமுறைகளின்படி உரிய இழப்பீட்டு தொகை அனுப்பி வைக்கப்படும் எனவும், அவர்கள் சிரியாவுக்கு வெளியேயுள்ள அமெரிக்க தூதரகங்களில் பணிபுரிய விரும்பினால், முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிரியா மீதான ஆயுத நடவடிக்கை எதையும் எடுக்கும் உத்தேசமில்லை என அமெரிக்கா அறிவித்துள்ளது. ஆனால், எந்தவொரு நாட்டிலும் ஆட்சி மாற்றத்துக்கான ஆயுத நடவடிக்கைகளுக்கு முன்னர் தமது தூதரகத்தை மூடிவிடுவது அமெரிக்க நடைமுறை. அதன்படி தற்போது சிரியாவில் தூதரகத்தை மூடியிருக்கிறது.

## ஒரு நாள் சாப்பாட்டுக்கு ரூ. 7.80 லட்சம் செலவு



பிரான்ஸ் அதிபர் சர்கோஸி ஒரு நாள் சாப்பாட்டுக்கு ரூ. 7.80 லட்சம் வரை செலவு செய்கிறார். 121 கார்களை வைத்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோஸி ஆடம்பரமாகச் செலவு செய்கிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்ததை அடுத்து அதிபர் மாளிகை செலவை குறைத்துக் கொள்கிறேன் என்று அவர் பதில் அளித்தார். அத்துடன் அதிபர் மாளிகை விருந்துகளையும் குறைத்துக் கொண்டார். எனினும் செலவு மட்டும் குறையவில்லை. ஒரு நாள் சாப்பாட்டுக்கு ரூ.7.80 லட்சம் செலவிடுகிறார் என்று சோஷலிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர் ரெனி டோசிர், தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பணம் என்ற தலைப்பில் ரெனி சமீபத்தில் புத்தகம் வெளியிட்டுள்ளார். அதில்தான் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். அதுமட்டுமன்றி தனிப்பட்ட செலவுக்கும், அதிபர் என்ற முறையில் மேற்கொள்ள வேண்டிய செலவுக்கும் வித்தியாசம் தெரியாமல் பணத்தை வாரி இறைக்கிறார் என்றும் புத்தகத்தில் ரெனி குறிப்பட்டுள்ளார்.

உக்ரைனில் உள்ள தனது மகனுக்கு சிகிச்சை அளிக்க தனி விமானத்தில் மருத்துவக் குழுவினரை அனுப்பினார் சர்கோஸி.

அவர்கள் சென்று மகனை அதே விமானத்தில் அழைத்து வந்து சிகிச்சை அளித்தனர். இதற்கு லட்சக்கணக்கில் செலவானது என்று குற்றம் சாட்டப்பட்டது.

சர்கோஸியின் கார்களில் பெரும்பாலானவை மிகப் பெரியது. அதற்கான எரிபொருள் செலவும் அதிகம். அத்துடன் அவரது விமான பயணங்களுக்குரிய செலவை கணக்கிட்டால் தலை சுற்றும் என்று ரெனி புத்தகத்தில் கூறியுள்ளார். இந்தத் தகவல்களால் பிரான்ஸில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## ஆளில்லா விமானத் தாக்குதல்: 8 பேர் மரணம்

பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள வடக்கு வஜிரிஸ்தான் பழங்குடியினப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த கட்டடத்தின் மீது அமெரிக்க ஆளில்லா விமானங்கள் நேற்று அதிகாலை திடீரென ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தின.

இதில் 8 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்; 2 பேர் காயம் அடைந்தனர். இந்தத் தீவிரவாதிகளில் சிலர் வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பகுதியாகும்.



மாலைதீவு நாட்டின் அதிபர் முகமது நஷீத் பதவிவிலகியதை அடுத்து புதிய அதிபராக முகமது வஹீத் ஹூசைன் , மாலே நகரில்பொறுப்பேற்றுக்கொண்டார்.

## ஈராக்கிலிருந்து நாடு திரும்பிய வீரர்களுக்கு ஒபாமா விருந்து

வாஷிங்டன், பெப்.9

ஈராக் போரில் பங்கேற்று நாடு திரும்பிய அமெரிக்க ராணுவ வீரர்களுக்கு வெள்ளை மாளிகையில் விருந்தளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதிபர் பராக் ஒபாமா மற்றும் அவரது மனைவி மின்லில் ஆகியோர் பெப்ரவரி 29 ஆம் திகதி வீரர்களுக்கு விருந்தளிக்க உள்ளனர். இது குறித்து கருத்து தெரிவித்த வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜே கார்னே:


ஈராக் போரில் பங்கேற்ற வீரர்களுக்கும், அவர்களை ஆதரித்த குடும்பத்தினருக்கும் நன்றி தெரிவிக்கும் வகையிலேயே இந்த விருந்து அளிக்கப்படுகிறது என்று கூறியுள்ளார்.

இது குறித்து முப்படைகளின் கூட்டுத் தளபதி மார்டின் டெம்ப்ஸ தெரிவித்ததாவது:

ஈராக்கின் விடுதலைக்காக நடத்தப்பட்ட புதிய விடியல் என்ற நடவடிக்கையில் கலந்துகொண்ட வீரர்கள் மற்றும் அவர்களை ஆதரித்த குடும்பத்தினரை அங்கீகரிக்கும் வகையில், அதிபரும், அவரது மனைவியும் தேசத்தின் சார்பாக எங்களைக் கௌரவிக்கத் தரும் விருந்து இது என்று குறிப்பிட்டார். மேலும் இந்த யுத்தத்தில் கலந்துகொண்ட வீரர்கள் அமெரிக்காவை காத்து, சுதந்திரமான, அமைதியான எதிர்காலத்தை ஈராக்கியர்கள் தேர்ந்தெடுக்க உதவியுள்ளார்கள்.- என்றார்.

ஈராக் யுத்தத்தில் 4,500 இற்கும் மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் ஊனமடைந்துள்ளனர்.

## மூங்கிலில் செல்போன்



லண்டன், பெப். 9

மூங்கில் மூலம் ஒரு மாணவர் செல்லிடத் தொலைபேசியைத் தயாரித்து சாதனை படைத்துள்ளார்.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் வசிக்கும் கிரான்ஸ் காட்வுட் ஹவுஸ் (23) என்பரே இந்தச் சாதனையைப் படைத்துள்ளார். இவர் மிடில்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் தொலைபேசி தயாரிக்கும் கற்கையை மேற்கொண்டு வந்தார்.

இந்தக் கற்கை மூலம் அனைவரது கவனத்தையும் கவர விரும்பினார். அதற்காக மூங்கிலினாலான செல்லிடத் தொலைபேசியைத் தயாரித்து சாதனை படைத்துள்ளார். அதற்காக, அவர் 4 வருடங்கள் வளர்ந்த இளம் மூங்கில் மரங்களைப் பயன்படுத்தியுள்ளார். இதில், ஏனைய கைபேசிகளில் உள்ளதைப் போன்ற கமரா உள்ளிட்ட அனைத்து தொழில் நுட்பங்களும் இடம் பெற்றுள்ளன. இவை இந்த ஆண்டு இறுதியில் மக்கள் பயன்பாட்டுக்காக அறிமுகப் படுத்தப்பட உள்ளன.

உலகிலேயே முதன் முறையாக மூங்கில் மூலம் செல்லிடத் தொலைபேசி தயாரித்து சாதனை படைத்த வுட் ஹவுசுக்கு பாராட்டுகள் குவிகின்றன.

## 77 பேரைக் கொன்றவர் நீதிமன்றில் 'மெடல்' கேட்டார்

நோர்வே நாட்டில் தீவிரவாதத் தாக்குதல் நடத்தி 77 பேரை கொன்றவர், தனக்கு விருது வழங்கி கௌரவிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கேட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நோர்வே நாட்டின் ஒஸ்லோவில் கடந்த ஆண்டு ஜூலை 22ஆம் திகதி காரில் வைக்கப்பட்ட வெடிகுண்டு வெடித்தது. அடுத்தடுத்து நடந்த தீவிரவாதத் தாக்குதலில் 77 பேர் கொல்லப் பட்டனர். இதுதொடர்பாக 32 வயதுடைய ஆண்டர்ஸ் பெஹ்ரிங் பரீவிக் என்பவரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்குத் தொடர்பாக ஆண்டர்ஸை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒஸ்லோ மாவட்ட நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப் படுத்தினர்.

அதன்போது நோர்வேயில் முஸ்லிம்கள் அதிக [illegible] ஐரோப்பாவின் ஆதிக்கத்தால் நோர்வே கலாசார சீரழிவை சந்தித்து வருகிறது. அதனால் தேசத் துரோகிகள் மீது நானே நடவடிக்கை எடுத்தேன். இதில் எந்த கிரிமினல் குற்றமும் செய்யவில்லை. என்னை விடுதலை செய்து இந்தத் தாக்குதலுக்காக எனக்கு ராணுவ விருது வழங்கி கௌரவிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஆண் டர்ஸ்.

எனினும் ஆண்டர்ஸை ஏப்ரல் 16ஆம் திகதி காவலில் வைக்கும்படி நீதிபதி வென்சி ஜெல்ஸ்டன் உத்தரவிட்டார். அன்று முதல் விசாரணை தொடங்க உள்ளது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 21 ஆண்டு சிறை தண்டனை வழங்கப்படும். மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பது நிரூபணமானால் மனநல மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவார் என்று சட்டத் [illegible] தெரிவித்துள்ளனர்.

(ந)

## ஒஸாமாவுடன் தொடர்பான நபருக்கு 6 ஆண்டுகளின்பின் பிணை

அல்குவைதா தீவிரவாத இயக்கத்தின் தலைவரான ஒசாமா பின்லேடனின் நெருங்கிய தீவிராதி ஒருவர் லண்டனில் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்

பல்வேறு தீவிரவாத செயல்களில் ஈடுபட்ட வந்த பொலிஸால் தேடப்படும் குற்றவாளியான ஜோர்தானை சேர்ந்த அபுகுவடா (ஓமர் ஓத்மன்)கடந்த 1993 ஆம் ஆண்டு லண்டனுக்கு தப்பி வந்தார். இதையடுத்து பிரிட்டனிலும் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டு ஆறு 1/2 ஆண்டுகளாக விசாரணை எதுவுமின்றி லண்டன் சிறையில் அடைக்கப்பட்டார். இதற்கு ஐரோப்பிய மனித உரிமை கழக நீதிமன்றம் கண்டனம் தெரிவித்ததால் நிபந்தனையின் கீழ் அவரை லண்டன் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது.

ஜோர்தானுக்கு சென்றுள்ள அங்கு அவர் தன் மீது உள்ள வழக்கு விசாரணையில் பங்கேற்பார். அவர் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க ஜோர்தான் அரசு தவறினால் 3 மாதத்தில் மீண்டும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனப் பிரிட்டன் நிபந்தனை விதித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.பி.சி. செய்தியாளர்கள் ஈரான் அரசால் கைது

தெஹ்ரான், பெப்.9

சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுள்ளனர் எனக் குற்றம் சாட்டப்பட்டு லண்டன் பிபிசி. செய்தி நிறுவனத்தின் செய்தியாளர்கள் சிலரை ஈரான் அரசு கைது செய்துள்ளது.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் பிபி.சி. நிறுவனம் உலகம் முழுவதும் மக்கள் பேசும் மொழிகளில் செய்திகளை வழங்கி வருகிறது. அதேபோல் ஈரானில் பேசும் மொழியான பார்சி மொழியிலும் செய்திகளை வழங்கி வருகிறது. இந்த நிலையில் பார்சி மொழியில் செய்திகளை வழங்கி வரும் செய்தியாளர்கள் சிலர் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறி ஈரான் அரசு கைது செய்துள்ளது என அரசுக்கு சொந்தமான செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

**இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே பகுதி நேர செய்தியாளர்களின் நடவடிக்கைகள் கவனிக்கப்பட்டதாம்**

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே பகுதிநேர செய்தியாளர்களின் நடவடிக்கைகள் கவனிக்கப்பட்டு வந்ததாகவும் அவர்களின் நடவடிக்கைகள் சட்டவிரோதமாக இருந்ததால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் எந்தவகையான குற்றங்கள், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் விவரம் போன்றவற்றை வெளியிடவில்லை.

ஏற்கனவே சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டனர் எனக் கைது செய்யப்பட்ட இரண்டு பி.பி.சி. செய்தியாளர்களை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ஈரான் அரசு விடுவித்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# உதவிகள் தொடரும்

## இந்தியாவுக்கு பிரிட்டன் உறுதி

லண்டன், பெப்.9

இந்தியாவுக்கான உதவிகள் தொடரும் எனப் பிரிட்டன் அரசு உறுதியளித்துள்ளது.

இந்திய விமானப் படைக்கு போர் விமானங்களை வழங்குவதில் பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகள் ஆர்வத்துடன் இருந்தன. இதற்கிடையே பிரான்ஸ் நாட்டின் டஸ்சால்ட் நிறுவனத்திடமிருந்து 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், 126 போர் விமானங்கள் வாங்க, இந்தியா முடிவு செய்துள்ளது. இதனால் பிரிட்டன் நிறுவனத்தின் போர் விமானங்களை வழங்கும் வாய்ப்பு பறிபோனது. இந்த அதிருப்தியில் பிரிட்டனின் கன்சர்வேடிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவுக்கான உதவிகளை நிறுத்தும்படி பிரதமர் டேவிட் கமரூன் அரசை வற்புறுத்தினர்.

எனினும், இந்தக் கோரிக்கையை நிராகரித்த பிரதமர் டேவிட் கமரூன், சில நிபந்தனைகளின்படி, இந்தியாவுக்கான உதவிகளைத் தொடர ஒப்புக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து, பிரதமரின் தகவல் தொடர்பாளர், ''இந்தியாவுக்கான உதவிகள் தொடரும். குறிப்பாக, இந்தியாவில் ஏழைகள் அதிகம் உள்ள மூன்று மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி தொடரும்.''-என்றார்.

# கனடா விபத்தில் 13 பேர் சாவு



கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தின் ஸ்ட்ராட் போர்ட் நகரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்து ஒன்றில் 13 பேர் கொல்லப்பட்டனர். குடிபெயர்ந்த தொழிலாளர்களை ஏற்றிச் சென்றபஸ் ஒன்று எதிரேவந்தடிரக்குடன்நேருக்கு நேராக மோதியது.

மோதிய வேகத்தில் அந்த பஸ் 75 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டது. இந்த விபத்தில் 11 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் காயமடைந்த இருவர் மருத்துவமனையில் உயிரிழந்தனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் 3 பேர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ந)

# குயின்ஸ்லாந்தில் தொடர்ந்து வெள்ளம் பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு

குயீன்ஸ்லாந், பெப்.9

கிழக்கு ஆஸ்திரேலிய மாகாணமான குயின்ஸ்லாந்தில் மழை வெள்ள அபாயம் தொடர்வதால் பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

சென்.ஜோர்ஜ் நகர் வெள்ளத்தால் மிகவும் மோசமான பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. இந்த நகரானது இரு வருடங்களுக்கும் குறைந்த காலப்பகுதியில் எதிர்கொள்ளும் மூன்றாவது வெள்ள அனர்த்தம் இது வாகும்.

**கடந்த வருடம் குயின்ஸ்லாந் மாநிலத்தில் இடம்பெற்ற மிகப் பெரிய வெள்ளப் பெருக்கு காரணமாக 35 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.**

சென்.ஜோர்ஜ் நகரின் அனைத்து பாகங்களும் வெள்ள நீரால் துண்டிக்கப்பட்டுள்ளதால் வான் வழியாகவே உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விநியோகங்கள் இடம்பெற்று வரு கின்றன.

நியூ சவுத் வேல்ஸிலுள்ள மூரி நகரும் குயீன்ஸ்லாந்திலுள்ள மிட்செல் நகரும் வெள்ள அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

ரோமா நகரில் காரொன்று வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த வருடம் குயின்ஸ்லாந் மாநிலத்தில் இடம்பெற்ற மிகப் பெரிய வெள்ளப் பெருக்கு காரணமாக 35 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# சூடானில் கடத்தப்பட்ட சீன அதிகாரிகள் விடுவிப்பு

நைரோபி, பெப்.9

சூடானில் கடத்தப்பட்ட சீனத் தூதரக அதிகாரிகள் கென்யத் தலைநகர் நைரோபியில் வைத்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த சூடான் நாடு தெற்கு சூடான், வடக்கு சூடான் எனத் தனித் தனியாகப் பிரிந்ததை அடுத்து முதன் முறையாக தென் சூடான் தீவிரவாதிகள் சீனத்தூதரக அதிகாரிகள் 47 பேரைக் கடத்திச் சென்றனர். இதனையடுத்து அதிகாரிகளை மீட்கும் நடவடிக்கையில் சூடான் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டது. இதில் 17 பேரை தீவிரவாதிகள் ராணுவத்திடம் ஒப்படைத்தனர். ஏனையவர்களைக் கடத்திச் சென்று மறைவிடத்தில் வைத்திருந்தனர். 11 நாள்களுக்குப் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் 29 பேர் ஒப்படைக்கப்பட்டனர். மேலும் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள ஒருவரின் உடலையும் மீட்புக் குழுவினர் சீனத் தூதரிடம் ஒப்படைத்தனர். (ந)

**நீங்காத நினைவுகளுடன் 3ஆம் வருடம்**

அன்னையின் மடியில்
19
12
1972



இறைவன் அடியில்
09
02
2009

**அமரர் கலக் சண்முகநாதன் சசிசராஜ்**
(பிரதி அதிபர் கிளி/பாரதிபுரம் வித்தியாலயம்)
கணித ஆசான் - கிளி/றோயல் கல்வி நிலையம் உங்கள் பிரிவால் என்றும் துயருற்றிருக்கும் நாம் உங்கள் எண்ணம் ஈடேற்ற றோயல் சமூகப் பணியை என்றும்தொடர்வோம்வானத்திலிருந்து எம்மை ஆசீர்வதிப்பாயாக
றோயல் கல்வி நிலைய நிர்வாகம், ஆசிரியர்கள் மாணவர்கள், கிளிநொச்சி. (11025)(6-7-8)

**தவறிவிட்டது**

அற்புதநாதன் நிஷாந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (832501026 V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி (மோட்டார்), வரிப்பத்திரம், ATM Card போன்றவை அடங் கிய பேர்ஸ் 06.02.2012 அன்று கொழும்புத் துறை வீதிக்கும், சுவாமியார் வீதிக்கும் இடை யில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெ டுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(077518 8754). இல:53,சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.

**தபால் மூலம்** **ஆறுமாத கால டிப்ளோமா**
22 வருட அனுபவம்
Course Length - Six Month
Dec 2011 To May 2012
தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | சிவில் எஞ்சினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & marketing Management | விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி |
| Dip. in Health & Hospital Management | சுகாதார மற்றும் வைத்தியசாலை மு.டி |
| Dip. in Nurseing Administration | தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | கல்வி முகாமத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
★கல்முனை ★மட்டக்களப்பு ★திருகோணமலை ★புத்தளம் ★வவுனியா ★மன்னார் ★யாழ்ப்பாணம் ★கண்டி ★கொழும்பு ★ஹட்டன் ★அனுராதபுரம் ★நுவரெலியா
மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கை நெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile:- 0777140844, 0718034848
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR. A.HASSEN
(B.Sc, Psychology, M.S.c Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPER MARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07
web:-www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org,
Tel:- 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி:- 10.02.2012

**நீங்காத நினைவலைகள்**
**3 ஆம் ஆண்டு**



நசரேனு றொபேட் வசந்தராஜ்
தோற்றம் :- .10.04.1979
மறைவு :- 09.02.2009



நசரேனு கத்தறீன்
தோற்றம் :- 09.03.1940
மறைவு :- 14.05.2008



நசரேனு றொபேட் கெனடி
தோற்றம் :- 30.03.1975
மறைவு :- 10.02.2000

மூவிரண்டு ஆண்டுகள் சென்றாலும் என்ன!
மும்மூன்று ஆண்டுகள் சென்றால் என்ன!
உற்றோர்கள், கற்றோர்கள், மற்றோர்கள் போற்றிட
புகழ்மாலை சூடியவர்களே! உங்கள் பசுமையான
நினைவுகள் என்றும் எங்களை விட்டு அகலாது!
உங்கள் பிரிவால் வாடும்: குடும்பத்தினர்
2 ஆம் கட்டை, முரசுமோட்டை, பரந்தன்.

**தவறிவிட்டது**

கீரிமலை காங்கேசன்துறையைச் சேர்ந்த ஈஸ் வரன் திவ்யரதன் என்ப வரது தே.அ.அ (94245 1385 V) அளவெட்டிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.
தொ.பே:0771386198, 0757984963

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே
V Care
DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!
தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.
எதிர்வரும் 4.5.6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது
வவுனியா-12.13ஆகிய திகதிகளில் முன் பதிவுகளுக்கு- 021 - 4923416
V Care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela, 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya, 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 2220288.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டசபையில் ஆபாசப்படம் பார்த்தனராம் அமைச்சர்கள்



கட்சியின் வலியுறுத்தலில் ராஜினாமாகக் கடிதத்தைக் கையளித்தனர்.

கர்நாடக சட்டப் பேரவையில் நேற்று எதிர்க்கட்சித் தலைவருக்கும், முதலமைச்சருக்கும் முக்கிய விவாதம் நடந்து கொண்டிருந்த போது, எவற்றையும் கவனிக் காமல் பா.ஜ.கவின் 3 அமைச்சர்கள் கைபேசியில் ஆபாசப்படம் பார்த்துக் கொண்டிருந்த விவகாரம் கர்நாடக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சட்டப் பேரவையில் முக்கியமான விவாதம் நடந்து கொண்டிருந்த போது அதனைப் படம் பிடித்துக் கொண்டிருந்த தொலைக் காட்சி கமராக்களில் கூட்டுறவுத்துறை அமைச்சர் லட்சுமண் சவதி, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத் துறை அமைச்சர் சி.சி. பாட்டீல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் கிருஷ்ண பாலேமர் ஆகியோர் கைபேசியில் ஆபாசப் படம் பார்த்துக் கொண்டிருந்தது அப்பட்டமானது.

உடனடியாக இந்த தொலைக்காட்சி நிருபர்கள், தாங்கள் எடுத்த காணொளிகளை தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பியதை அடுத்து சட்டப் பேரவையில் கடும் அமளி ஏற்பட்டது.

இதனையடுத்து, கட்சி அவசரக் கூட்டம் நடைபெற்றது. இதில், அவர்கள் பதவி விலகுமாறு வலியுறுத்தப்பட்டது.

இதனையடுத்து, அவர்கள் மூவரும் ராஜினாமா கடிதத்தை, முதல்வர் சதானந்த கவுடாவிடம் வழங்கியுள்ளனர். சட்டசபைக் கூட்டத்தில், அமைச்சர்கள் ஆபாசப் படம் பார்த்த நிகழ்வு, அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

# கிருஷ்ணா சீனாவுக்குப் பயணம்




மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மூன்று நாள் பயணமாக சீனாவுக்குச் சென்றுள்ளார்.

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கட்டப்பட்டுள்ள புதிய இந்திய தூதரகத்தைத் திறப்பதற்காக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா சீனா சென்றுள்ளார்.

அங்கு சீனாவின் உயர் அதிகாரிகளை அவர் சந்தித்துப் பேசவுள்ளார். இதன் போது இந்தியா - சீனா இடையேயான உறவு கள் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# பஸ்-லொறி விபத்து 23 பேர் சாவு



மைன்பூரி, பெப்.9

உத்தரப் பிரதேசத்தில் பஸ்ஸும் - லொறியும் மோதிய விபத்தில் 23 பேர் உயிரிழந்தனர். 19 படுகாயமடைந்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

உத்தரப்பிரதேச மாநிலம் மைன் பூரி மாவட்டம் ஒஞ்சா நகரின் ராத்ரே கிராமத்தில் இருந்து 36 பயணி களுடன் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. பிரதான வீதியின் ஹேவ்லி கிராமம் அருகே வந்து கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக லொறியுடன் நேருக்குநேராக மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பஸ்ஸில் பயணித்த 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். இவர்களில் 5 பேர் சிகிச்சை பலனின்றி இறந்தனர். இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆக அதிகரித்தது. 19 பேர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து பொலிஸார் தெரிவித்ததாவது:

பஸ்ஸில் பயணித்தவர்கள் அனைவரும் ஈத்தா மாவட்டத்தின் பக்வாலா கிராமத்தைச் சேர்ந்தவர்கள், நிச்சயதார்த்த நிகழ்வுக் காகச் சென்றபோது இந்த கோர விபத்து நிகழ்ந்துள் ளது என்றனர். (வ)

# பாடகி ஜானகி ஆஸ்பத்திரியில்



திருப்பதிக்குச் சென்றிருந்த பிரபல பின்னணிப் பாடகி ஜானகி குளியலறையில் விழுந்ததால் பலத்த காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருப்பதி மகதி அரங்கில் உள்ள அன்னமாச்சாரியார் சங்கீதா சபாவில் பாலகிருஷ்ணா பிரசாத்தின் 3 நாள் கச்சேரி நடைபெறுகின்றது. இதன் நிறைவு விழா நேற்றுமுன்தினம் மாலை நடந்தது. இதில் பங்கேற்பதற்காக பிரபல பின்னணிப் பாடகி ஜானகி பெங்களூரில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை திருப்பதி வந்து தனியார் விடுதியில் இரவு தங்கினார்.

நேற்றுமுன்தினம் காலை 7.30 மணிக்கு குளிக்கச் சென்றபோது தவறி விழுந்தார். தலையில் பலத்த காயமடைந்த அவர், அம்புலன்ஸ் மூலமாக திருப்பதியில் உள்ள திருமலை திருப் பதி ஆலய சிம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு தலையில் 6 தையல்கள் போடப்பட்டது. தொடர்ந்து சிகிச்சை அளிக்கப் படுகிறது. (வ)



இந்தியக் கடலோரக் காவல்படை சார்பில் முதன்முறையாக மீனவர்களுக்கான படகுப் போட்டி சென்னையில் நடந்தது. இதில் மீனவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

# பனியில் சிக்கிய 313 பேர் விமானப் படையால் மீட்பு

ஸ்ரீநகர், பெப்.9

காஷ்மீரில் பனியில் சிக்குண்ட 313 பேரை விமானப்படை மீட்டுள்ளது.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக காஷ்மீரில் கடுமையான பனிப்பொழிவு காணப்படுகிறது. பனிப்பொழிவு காரணமாக லடாக் வீதி மூடப்பட்டதால் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் காஷ்மீரின் ஏனைய பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் தவித்தனர். அதே போல், ஸ்ரீநகர் வந்திருந்த லடாக் பகுதி மக்களும் சொந்த ஊருக்குத் திரும்ப முடியாமல் தவித்தனர். மீட்புப் பணியில் ஈடுபட விமானப் படையை காஷ்மீர் அரசு கேட்டுக் கொண்டது.

இதையடுத்து, கார்கில் நகருக்கு மீட்பு விமானத்தை இயக்க விமானப் படை திட்டமிட்டது. ஆனால், ஐ.எல் 76 ரக விமானம் கார்கிலில் தரை இறங்கமுடியாது. இதனால், லே நகருக்கு மீட்பு விமானத்தை இயக்க முடிவு செய்யப்பட்டது. அங்கிருந்து கார்கிலுக்கு பஸ்கள் இயக்க திட்டமிடப் பட்டது. இதன்படி ஸ்ரீநகரில் இருந்து லே நகருக்கு நேற்றுமுன் தினம் இயக்கப் பட்ட மீட்பு விமானத் தில் லடாக் பகுதி மக்கள் 142 பேர் பயணம் செய்தனர். லே நகரில் இருந்து 171 பேர் அந்த விமானத்தில் ஸ்ரீநகருக்கு அழைத்து வரப் பட்டனர். (வ)

# சுடுகலன் வெடித்து இருவர் மரணம்

ஈரோடு, பெப்.9

துணி பதப்படுத்தும் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் சுடுகலன் வெடித்த விபத்தில் ஒரு பெண் உட்பட இருவர் பரிதாபமாக மரணமானார்.

ஈரோடு மாவட்டம் கொத்துக்காரன் தோட்டத்தை சேர்ந்தவர் முருகன்(வயது 50). இவருக்குச் சொந்தமான துணியை பதப்படுத்தும் ஆலை வீரப்பன்சத்திரம் பகுதியில் உள்ளது. ஆலையில் சுடுகலன் இயக்குநராக பெரியசாமி(வயது 60) உள்ளார். ஊழியர்கள் மூர்த்தி (வயது 38), வாணி (வயது 39), இலியாஸ்(வயது 40), ராசி (வயது 40), சகாதேவன் (வயது 50) ஆகியோர் நேற்றுமுன் தினம் வேலை செய்து கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென சுடுகலன் பயங்கர சத்தத்துடன் வெடித்தது.

இதில் தொழிற்சாலையின் மேற்புற சிமென்ட் கூரை நாலாபுற மும் சிதறியது. அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது. சுடுகலன் வெடித்ததில் மூர்த்தி, வாணி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி மரணமானவர்களாவர்.

இலியாஸ், பெரியசாமி, சகாதேவன், ராசு ஆகியோர் படுகாயம் அடைந்தனர். தகவல் அறிந்த ஈரோடு தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தொழிலாளர்களை மீட்டு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். (வ)

# நக்ஸலைட்டுகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை

## கேள்வி எழுப்புகிறார் சிதம்பரம்

டில்லி, பெப்.9

வன்முறையில் அதிகளவில் ஈடுபட்டபோதும் நக்சலைட்டுகளுக்கு எதிராக ஏன் தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஜார்கண்ட் அரசுக்கு மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆவேசமாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜார்கண்ட் மாநிலத்தில் பா.ஜ.கூட்டணி ஆட்சி நடக்கிறது. அர்ஜுன் முண்டா முதல்வராக இருக்கிறார். அவருக்கு மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்ததாவது:

கடந்த 2011 ஆம் ஆண்டு நக்சலைட்டுகளின் வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலமாக ஜார்கண்ட் உள்ளது. நக்சலைட்டுகளுக்கு எதிராக ஜார்கண்ட் [illegible] எடுத்த நடவடிக்கை முனைப்பாக இல்லை. பாதுகாப்புப் படையினரை நக்சலைட்டுகள் அதிகளவில் கொன்ற போதும், அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க சீரிய முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. நக்சலைட் அமைப்பின் 2 முக்கியத் தலைவர்களான பிரசாந்தோ போஸ் என்கிற கிஷந்தாவும், மிகிர் பெஸ்ரா [illegible] மாநிலத்தில் [illegible] செயற்பட்டு வருகின்றனர் என்று உளவுத்துறை மூலம் கிடைத்த தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.



ஜார்கண்டில் நக்சலைட்கள் நடத்தும் மக்கள் நீதி மன்றங்களின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டில் 25 ஆக இருந்தது. இது, 2011இல் 53 ஆக உயர்ந்துள்ளது. தங்களுக்குப் பணிய மறுப்பவர்களுக்கு, இந்த நீதிமன்றங்கள் மூலம் பொலிஸ் இன்பார் என்ற முத்திரையை குத்தி, நக்சலைட்டுகள் கொலை செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி, காமே கிராமத்தில் நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தில், அதிகளவான பொது மக்கள் முன்னிலையில் ஒருவரின் தலையைத் நக்சலைட்டுகள் துண்டித்துள்ளனர்.

இவ்வாறு நக்சலைட் வன்முறைகள் அதிகரித்த போதிலும், அவர்களுக்கு எதிராக மாநில அரசு தீவிர நடவடிக்கை எடுக்காதது ஏன்? இது கவலை அளிக்கிறது.

எனவே, பொலிஸாரை ஊக்கப்படுத்தி, நக்ஸலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கையைத் தீவிரப்ப டுத்த வேண்டும். அதற்கான உதவிகளை செய்ய மத்திய அரசு தயாராக இருக்கிறது. - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Try பண்ணித்தான் பாருங்களேன்

நீர் தேங்கும் வாய்க்காலில்
என் பிறப்பு
சேறோடும் நீரோடும்
குடியிருப்பு
புல்லோடும் பூண்டோடும்
பகலிருப்பு
உயிர் இனம் உள்ளவரை
என் இருப்பு

பொழுதோடு தான் நான்
மனை நாடுவேன்
காதோடு தான் நான்
கவிபாடுவேன்
உயிரோடு தான் நான்
உறவாடுவேன்
வெயில் வந்தபின் தான்
வெளியேறுவேன்

.......உங்களால்
முடிந்தால்..........
தினம் தினம் சுற்றாடற் சூழல்
சுத்தம் செய்து
வாய்க்காலில் கழிவுநீர்
தேக்கத்தைத் தவிர்த்து
மாலையானதும்
மனைமுழுவதும்
வேப்பிலைத் தூபமிட்டு
மனித உயிரின் மாண்பினைக்
காப்பீர்

யாழூர் "போறா" சுட்டி.

# 'வைதிஸ் கொலைவெறி' பாடலை தமிழர்கள் தமக்கானதென



## கொண்டாடலாம்

21 ஆம் நூற்றாண்டைப் பொறுத்த வரை கால மாற்றத்துக்கு ஏற்ப நவீன வளர்ச்சி பெற்று சினிமா கலையும் மாற்றமடைந்ததையே காணலாம். முன்னைய காலத்தில் தோற்றம் பெற்ற வேற்று மொழிச் சொற்கள் தற்காலத்தில் அன்றாட வாழ்வில் வேரூன்றிப் பயன் படும் சொற்களாகிவிட்டன.

தமிழ் நாட்டிலே தமிழுக்கென்றொரு காலம் இருந்த போதும் சினிமாப் பாடல்களில் வேற்றுமொழிச் சொற்கள் பயன் படுத்தப்பட்டன. இவற்றை தமிழில் பெயர்போன கண்ணதாசன், கவிஞர் வாலி போன்றவர்கள் பாடியும் ஆக்கியும் உள்ளனர்.

தற்காலத்தில் சூழ்நிலைக்கு ஏற்ப மெட்டுக்காகவும் பாடுவதற்கு இலகுவாகவும் அர்த்தம் மாறிவிடக் கூடாதென்பதற்காகவும் தமிழ் பாடல்களில் ஆங்கில சொற்கள் சேர்ப்பது தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது. 'வைதிஸ் கொலைவெறி' பாடலில் தமிழ் சொற்களை விரல்விட்டு எண்ண முடியும். எனினும் அந்த சொற்கள் இந்தப் பாடலில் அமைந்ததை பாக்கியம் என்றே கூறலாம் என்பதே எனது வாதம்.

வி.விசாகன்.




## கொண்டாட முடியாது

'வைதிஸ் கொலைவெறி' பாடலை தமிழர்கள் சொந்தம் கொண்டாட முடியாது. தமிழர்கள் தனித்துவமிக்கவர்கள். பொழுதுபோக்குக்காக ஒருவன் எழுதிய பாடலை எவ்வாறு ஒட்டுமொத்த தமிழர்களும் சொந்தம் கொண்டாட முடியும். தமிழ் சினிமாவைப் பொறுத்த வரையில் ஒரு திரைப்படம் வெளிவந்தவுடன் அந்தப் படத்தின் பாடல்கள் அல்லது கதை வசனங்கள், கதாநாயகன் அல்லது கதை வசனங்கள் , கதாநாயகி பயன்படுத்திய ஆடைகள் என்பன இளைஞர்களைக் கவர்ந்து விடுகின்றன. அடுத்த படம் வந்தவுடன் மாறிவிடுவார்கள். அதற்காக அவற்றை தமிழர்கள் எவ்வாறு சொந்தம் கொண்டாட முடியும். தமிழர்கள் சொந்தம் கொண்டாட உயிரிலும் மேலான தமிழ் போதும் வேறொன்றும் தேவையில்லை.

சுஜிதா

# தனிமை



அன்று மண்ணுலகில் இன்பமாய்
கொப்புகளில் அழகிய
பூக்களாய்-பூத்திருக்கும்
என் வாழ்க்கை
இன்று புயல் எனும்
கொடிய இயற்கையினால்
பூக்கள் எல்லாம் உதிர்ந்து
பட்ட மரம் போல்
தனித்து நிற்கிறேன்
என் சோகத்தை எவருக்குமே
புரியவில்லை எவர்தான்
எனக்கு ஆறுதல் கூறுவர்
என்று தெரியவில்லை

சி.துஸ்ஷாலினி
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

# வாழ வழி இருக்கும் போது...

வாழ வழி இருக்கும் போது...
காலனவன் கைதழுவும் கழகமதில்
காரிருள் சூழ்ந்து கலங்கினோராக
கண்ணில்லா கையியங்கா
காலிரண்டும் ஊனமுற்றோர்
என்னவன் இறைவனவன்
எனையாள்வான் இருக்கும்போது
எனக்கொன்றும் குறையில்லை
எனக்கூறி எடுத்தியம்பி
தன்காலே தஞ்சமென
தரணிதனில் நிற்கையில்
கையிருந்தும் காலிருந்தும்
கதிர்பாயும் கண்ணிருந்தும்
வாழ்வதெப்படி என்கின்றனர்
வாழவழி இருக்கும் போது....



பா.துவர்ஸிகா
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

# மது எனும் அரக்கன் மாய வேண்டும்



எமது நாடான இலங்கையிலே கொலை, களவு, கொள்ளை முதலிய பாதகச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளான வீதி விபத்து, விபச்சாரம், கொலை போன்ற நிலை ஏற்பட்டவுடன் அநேக மக்கள் நடப்புலக மாற்றத்தைச் சாட்டுகின்றனர். இது எவ்வாறு உள்ளதெனில் "காகம் தன் தலையிலுள்ள எச்சத்தைக் காணாது பிறர் தலையிலுள்ள எச்சத்தைக் கண்டு பழிப்பது போன்று" உள்ளது. இந்த நாட்டின் நற்பெயருக்கு மாசேற் படுத்தும் இந்த நிலைக்கு காரணம் மக்கள் தான். இந்தக் காரணத்துக்கு முக்கிய காரணம் போதை. போதையூட்டி மதியை மயக்கி மக்களை மாக்களாக்கித் தம்மை அறியாமல் மேற் கூறிய விபத்தில் ஈடுபடுகின்றனர்.

மதுஅருந்தியவனது குடும்பம் அழிவது மாத்திர மன்று அவனது வாழ்வும் அழிகிறது.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்
எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்"

என்பார் திருவள்ளுவர். எனவே மது மனிதனால் தீண்டப்படாத இழிபொருள். இவ்விதம் தனிமனிதனும் குடும்பமும் மதுவால் அழிக்கப்படவே நாட்டின் நல் வாழ்வும் கெடுகின்றது. அதனாலன்றோ நாட்டின் நல்வாழ்வுக்கு மதுவிலக்கு மிக அவசியமெனக் கண்டார் காந்தி யண்ணல்.

நம் ஈழத்திரு நாட்டிலேயும் மது ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று. இங்கும் மதுவிலக்குச் சித்திபெற வேண்டுமானால் மது அருந்தும் மக்களிடையே மனமாற்றம் ஏற்பட வேண்டியது மிக அவசியம்.

மதுவரக்கன் நாட்டில் நிகழ்த் தும் கோர நர்த்தனங்களை மக்கள் புத்தி பூர்வமாக உணர்தல் வேண்டும். தனி மனித வாழ்வையும் குடும்ப வாழ்வையும் சீர்குலைத்து அழிவு செய்வதனால் தீமைகளில் பெருந் தீமை மதுவென மக்கள் சந்தேக விபரீதமற உணர வேண்டும். மக்களிடையே மனமாற்றம் ஏற்படாதபோது ஆட்சியாளர் மதுவிலக்குச் சட்டத்தை நடமுறைப் படுத்தினும் பெரும் பயன் விளையாது. சட்டத்தின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு மக்கள் சட்டவிரோத வழிகளில் மதுவை உற்பத்தி செய்து அருந்துகின்றனர்.



சட்டத்தின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு மக்கள் சட்டவிரோத வழி களில் மதுவை உற்பத்தி செய்து அருந்துகின்றனர்.

மதுவிலக்கு சித்திபெற வேண்டும். அதற்காக மக்களது ஒத்துழைப்போடு மதுவிலக்கு சட்டமும் நடைமுறைக்கு வருதல் வேண்டும். அவ்விதம் மது விலக்கப்படுமாயின் தனி மனிதன் நோயற்ற சிறப்பான வாழ்வு வாழ்வான். குடும்பங்கள் அமைதியும் பொருள் வளமும் பெற்றுச் சீர்பெறும். அதனால் நாடு நலமுறும். ★

உடுவில் மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

'வைதிஸ் கொலைவெறி' பாடலை தமிழர்கள் தமக்கானதென சொந்தம்

| கொண்டாடலாம் | கொண்டாடமுடியாது |
|---|---|
| ☐ | ☐ |

பெயர்: ..........................................

முகவரி: ..........................................

அடையாள அட்டை இல..

..........................................

உங்கள் தீர்ப்புக்களை 23.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

..........................................

.................... ....................
திகதி கையொப்பம்

# வியளம் கேட்டீர்களா?

## புதுப்பொலிவுடன் ஆலயங்கள் ஆனால் மாலை மங்கியதும்...?

அண்மைக்காலங்களில் எல்லா அபிவிருத்திகளுக்கும் சிகரம் வைத்தாற் போல ஆலயங்கள் புது மெருகு பெற்று அபிவிருத்தி காண்கின்றன. கல்லு வைத்த ஆலயங்களைக் கையெடுத்துக் கும்பிடும் மக்கள் நிறைந்த பிரதேசம் இது என்பதால் பெரிய ஆலயங்கள் முதல் சிறிய ஆலயங்கள் வரை புனரமைக்கப்பட்டு, கும்பாபிஷேகம் காண்கின்றன.புதிது புதிதாகவும் பலருடைய கனவில் கடவுள் தோன்றிக் கட்டளையிட்டதன் காரணமாக ஆலயங்கள் எழுகின்றன.

ஆலயங்கள் ஆன்மிக விழிப்புக்கு வழிகாட்டும் இடங்கள் என்பதால் அவற்றின் முக்கியத்துவம் அதிகமாகும். வகை தொகையாகப் பெருகும் ஆலயங்களால் பிணக்குகளும், பிரச்சினைகளும் உண்டாயினும் போரினால் பாதிக்கப்பட்டு உள நெருக்குவாரங்களுடன் இருக்கும் மக்களை ஆற்றுப்படுத்தி, மன நோய்களின்றி வாழ வழிகாட்டுபவை ஆலயங்களே என்பது மனங் கொள்ளத்தக்கது.

ஆலயங்களைக் கட்டுபவர்கள், புனரமைப்பவர்கள் பலரும் புலம்பெயர்ந்தவர்களே.தம்மை இந்நிலைக்கு ஆக்கிய தெய்வங்களுக்கு ஆலயம் அமைத்து தமது நன்றிக் கடனை அவர்கள் நிறைவேற்றுகின்றனர். ஆலயங்கள் வர்ண வேலைப்பாடுகளுடன் புதுமெருகுடன் காணப்படுகின்றன. எல்லா வசதிகளும் நிறைந்துள்ளன.

ஆனால் பல ஆலயங்களில் சுவாமி தூக்குவதற்கோ, தேவாரம் படிப்பதற்கோ ஆளில்லாத நிலை. பல ஆலயங்கள் ஒரு நேரப் பூசையிலிருந்து விரிந்து இருநேரப் பூசைகளுடன் பல விசேட தினங்களையும் உள்வாங்கிச் செயற்படுகின்றன. ஆனால் உபயகாரர்களைத் தேடுவதற்கும், பக்தர்களைக் காண்பதற்கும் கஷ்டப்படுகின்றனர். பல ஆலயங்கள் பூசகர்களைத் தேடுவதிலும், அவர்களுக்கான ஊதியம் வழங்குவதிலும் இடருறுகின்றன.

கந்தபுராணக் கலாசாரம் நிலவிய இடமல்லவா! புராணபடனம் சில ஆலயங்களில் இன்று வரை கைவிடப்படாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் பாடுபவரையும், பயன் சொல்பவரையுந் தவிர தூண்களே அவற்றைக் கேட்போராக உள்ளன. தர்மகர்த்தா சபையினரையோ, பூசகரையோ கூடக் காண முடிவதில்லை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இன்றுள்ள பிரதான பிரச்சினை, திருடர்களிடமிருந்து எப்படிக் கடவுள் சிலைகளையும், கோயிற் பொருள்களையும் பாதுகாப்பது என்பதே. பல ஆலயங்களை இலக்கு வைத்து திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருவது அண்மைக்காலத்தில் பத்திரிகைச் செய்திகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆலயங்களில் மாலை மங்கிய பின் சனநடமாட்டம் இருக்காது. இது திருடர்களுக்கு மிகவும் வாய்ப்பானது. அத்துடன் திருட்டுக் காதல் ஜோடிகளுக்கும், சட்ட விரோதமாக மது அருந்துபவர்களுக்கும் வாய்ப்பான இடமாக சில இடங்களில் ஆலயங்கள் உள்ளன. பல சந்தர்ப்பங்களிலும் ஆலயச் சுற்றாடலில் இருப்போர் ஒன்று சேர்ந்து மல்லுக்கட்டி பெருங்குடியர்களையும், தெருக் காதலர்களையும் கலைத்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆனால் ஆலயங்களை அதிக செலவில் கட்டிவிட்டு, அதற்கான பொருள்களையும் தாராளமாக வாங்கி வைத்து விட்டு அவற்றின் பாதுகாப்புத் தொடர்பில் கரிசனையற்று இருப்பது நியாயமானதா? ஒவ்வொரு ஆலய நிர்வாகமும் குறித்தளவு பணத்தை ஒதுக்கி, பாதுகாப்பு ஊழியர்களை நியமித்து ஆலயங்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும். இதன் மூலம் ஆலயச் சுற்றாடலில் இருக்கும் ஒருவருக்கு வேலை வாய்ப்பை அளிக்க முடியும்.

அத்துடன் ஆலயத்தைத் திருடர்களிடமிருந்து பாதுகாப்பதுடன் ஆலயச் சுற்றாடலில் இடம்பெறும் சமூக விரோதச் செயல்களையும் இல்லா தொழிக்க முடியும்.

இந்து அமைப்புக்கள் என்ற கடிதத் தலைப்புகளுடன் இயங்குபவை இவற்றில் கவனம் செலுத்தினால் நிறுவன மயப்பட்ட பாதுகாப்பு அமைப்பினை நிறுவி, ஆலயங்கள் தோறும் பாதுகாப்பு ஊழியர்களை வழங்கலாம். இதனால் அந்த அமைப்புக்களுக்கு நிதிப் பலம் ஏற்படுவதுடன் ஒரு ஆளணிக் கட்டமைப்பையும் கொண்டிருக்கலாம். இது குறித்துச் சிந்திக்கக் கூடாதா?

விழிச்சான் குஞ்சு.

# தமிழர் இருப்பை மறைக்கும் முயற்சிகளை முறியடிப்போம்

### மாவை சேனாதிராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.9

எமது மண்ணில் நாங்கள் வாழ முடியாதபடி அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் எம்மை கலப்பினமாக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபைத்தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற திருநெல்வேலி பொதுச் சந்தை திறப்பு விழாவில் பேசிய மாவை சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்: 13 வது திருத்தச் சட்டத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அதில் எவ்வித பயனுமில்லை. பொலிஸ், காணி அதிகாரங்கள் குறித்த குறைகள் உண்டு. ஐக்கிய இலங்கையில் முஸ்லிம், தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் வாழக் கூடிய வடக்கு, கிழக்கு இணைந்த சுயாட்சியே எமது மக்களுக்குத் தேவை.

எம்மை நாடாளுமன்றம் அனுப்பிய மக்களுக்கு நாம் காவலாக இருப்போம். தமிழர்களின் அடையாளங்களை, இருப்பை மறைக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு தடையாக அதை முறியடிப்பவர்களாக இருப்போம்.

வடக்கு, கிழக்கு எமது பிரதேசம். அதை இராணுவ மயமாக்கவும், தமிழினத்தை கலப்பினமாக்கவும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கினால் எங்கும் செல்ல முடியாது என ஜனாதிபதி பேசித்திரிகிறார்.

இப்படியான தேவையற்ற கதைகளைப் பேசி தீர்வை முன்வைக்க முடியாமல் உள்ளார். தமிழ் மக்களுக்குரிய தீர்வை வழங்க ஜனாதிபதிக்கு விருப்பமில்லை. அவர்களிடம் தீர்வுத் திட்டமே இல்லை. சர்வதேச அழுத்தங்கள் இருப்பதால் தெரிவுக்குழு என்றெல்லாம் பேசிக் காலத்தை இழுத்தடிக்கின்றார்கள்.

எமது மக்களின் உரிமைக்காக நாங்கள் ஜனநாயக ரீதியில் போராடுவோம். எமது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு எங்களுக்கு உரிய முறையில் அழைப்பு விடுப்பதில்லை. பேச்சுவார்த்தையில் அதிகாரப்பகிர்வு குறித்து முடிவுகள் எடுக்கப்படாத நிலையில் தெரிவுக் குழுவில் கலந்து கொள்வதில் பயன் எதுவும் கிடையாது.

மக்கள் எங்களிடம் பெரும்பாலான தமது உள்ளூராட்சி சபைகளை நிர்வகிக்கும் அதிகாரத்தை வழங்கியுள்ளனர். அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் நலன்களையும் பேணிக்கொள்ளும் பொறுப்பு எமது உறுப்பினர்களுடையது. அவர்கள் அதனை நல்ல முறையில் நிறை வேற்றுவார்கள். நல்லூர் பிரதேச சபை தனது சொந்த நிதியில் இருந்தே இந்தப் பொதுச் சந்தையைக் கட்டியுள்ளது. வருமானத்தை அதிகரித்து மக்களுக்கான சேவையை வழங்க வேண்டும் என்பதே எமது எண்ணம்.- என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயக மூர்த்தி தெரிவிக்கையில் ;

நல்லூர் பிரதேச சபை மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கி நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதில் அரசு தலையிட்டு அதன் பணிகளைக் குழப்பக்கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லுகிறேன் 'உங்கள் எண்ணம் பலிக்காது'.- என்றார்.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். (எ - 7)

## 'ஞானச்சுடர்' வாசகர் போட்டி முடிவுகள்

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்பட்டு வரும் 'ஞானச்சுடர்' ஆன்மிக மாதாந்த சஞ்சிகை ஊடாக நடத்திய வாசகர் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்விவரம் வருமாறு:

முதலாம் பரிசு சி.பகீரதன் - கணேஸ்வரம் அளவெட்டி, இரண்டாம் பரிசு நா.லோஜனவனிதை - சாவகச்சேரி, மூன்றாம் பரிசு திருமதி கலையரசி லோகேஸ்வரன் காசிப்பிள்ளையார் கோயிலடி - தெல்லிப்பழை.

ஆறுதல் பரிசு பெற்ற பத்துப் பேரின் விவரம் வருமாறு:

தெய்வீகா சிவலிங்கம், அல்வாய், எஸ்.சிவாஜினி, உடுப்பிட்டி, செல்வி செ.மைதிலி- வல்வெட்டித்துறை, து.ஜனிதா - ஆவரங்கால், செல்வராஜா குகநேசன் - வட்டுக்கோட்டை, ல.சத்தியவாணி - மட்டக்களப்பு, கணபதிப்பிள்ளை கமலாம்பிகை - மீசாலை, திருமதி தயாநிதி பாலசுந்தரம் - யாழ்ப்பாணம், சி.சிவன ருட் செல்வி - கரவெட்டி, கணேசையர் ஞானேஸ்வரி - வண்ணார்பண்ணை.

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும் ஞானச்சுடர் மாசி மாத இதழ் வெளியீட்டு விழாவின்போது வழங்கப்படும். (எ-8)

## ஒய்வூதியத்தை உரிய முறையில் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்

யாழ்ப்பாணம், பெப்.9

அரச சேவையில் பணி புரிந்து இளைப்பாறியவர்களுக்கு அவர்களின் சேவையின் பின்னர் வழங்கப்படும் ஓய்வூதியம் உரிய முறையில் கிடைக்கப் பெற வேண்டும்.

இதன் மூலம் தான் அவர்களின் சேவை அடையாளப்படுத்தக் கூடியதாக பொதுமக்கள் மத்தியில் இருக்கும். அத்துடன் ஓய்வூதியம் பெற்றவர்கள் தமது சேவையின் பின் அதற்கான பலன்களைப் பெற்றதாகவும் கருத முடியும். இவ்வாறு யாழ்.மாவட்ட செயலகத்தின் ஓய்வூதியப் பகுதியின் ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் எஸ்.சின்னத்துரை தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தின் நலன் புரிக்கழகத்தின் வருடாந்த ஒன்று கூடல் கடந்த 19 ஆம் திகதி யாழ். செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: கடந்த காலங்களில் அரச சேவையில் பணிபுரிந்தவர்கள் நவீன வசதிகளுடன் கூடிய உபகரணங்களோ, வசதிகளோ இல்லாமல் தனிமனித உழைப்பால் மட்டும் பணிபுரிந்தவர்கள். அத்துடன் இரவு, பகல் சேவையை மட்டும் நோக்காகக் கொண்டு தமது கடமைகளை நிறைவேற்றி முடித்தவர்கள்.

இத்தகையவர்கள் இன்று ஓய்வு நிலையில் கடமையை விட்டு விலகிச் சென்றாலும் கடந்த காலங்களில் அவர்கள் செய்த பணிகள் மதிக்கப்பட வேண்டும். இதற்காக அரசினால் வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை காலம் தாழ்த்தாமல் கிடைக்கப் பெறுவதற்கு தற்போது சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் செய்ய வேண்டும்.

இன்று பல அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்ற பின்னர் அதற்கான ஊதியத்தைப் பெறமுடியாமல் அலைந்து திரிவதைக் காணமுடிகிறது. எனவே இவற்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.குறித்த காலங்களில் அவர்கள் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.- என்றார்.

(எ - 14 - 45)



பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் என்ற தலைப்பிலான தொடர் கருத்தரங்கில் திருஞானசம்பந்த நாயனார் [illegible] காட்டும் [illegible] என்ற அமர்வு நாவலர் மணி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை [illegible] மனோன்மணி சண்முகதாஸ் உரையாற்றுகிறார். கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களில் ஒரு பகுதியினரும் உள்ளனர். (ம-38)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377,
021-2262395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0755732271, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023222331

## கேட்டதும் கேட்கக்கூடாததும்

யாழ்ப்பாணம் வந்திருந்த இலங்கை நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அரசிடம் கேட்கக் கூடாததை எல்லாம் தமிழர்கள் - அதாவது கூட்டமைப்பினர் - கேட்கிறார்கள் என்று கூறினார். தரக் கூடியவற்றை மட்டுமே கேட்கவேண்டும் என்றும் கூறினார். அத்துடன் நின்றுவிடாது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நீச்சல் குளத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில், அமைச்சர் டக்ளஸைப் போன்று மாணவர்களும் அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் வரவேண்டும் என்றும் வேறு கூறிவிட்டும் போயிருக்கிறார்.

அதாவது கூட்டமைப்பினர் கேட்கக் கூடாததைக் கேட்கின்றனர் என்றும் டக்ளஸ் கேட்கக் கூடியதைக் கேட்கிறார் என்பதும்தான் அதன் பொருள்.

அமைச்சர் டக்ளஸ் மிக நீண்ட காலமாக இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார். அதனை ஓர் அடிப்படையாக வைத்துக் கொண்டு நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி முன்னேறலாம் என்று சொல்லி வருகிறார்.

13 வருடங்களுக்கும் மேலாக சுதந்திரக் கட்சிக்கு முழு விசுவாசமாக - அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பாயாமல் - அதன் காலையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும். அமைச்சர் டக்ளஸ்தான் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தச் சொல்லிக் கேட்கிறார்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்று டக்ளஸ், சொல்வது காணி, பொலிஸ் அதிகாரங்களையும் சேர்த்துத்தான். அந்த அதிகாரங்கள் இப்போதைக்கு வேண்டாம் என்று அவர் சொன்னாலும் பின்னாளில் அவை வேண்டும் என்றுதான் அவர் கேட்கிறார்.

கூட்டமைப்பும் அதைத்தான் கேட்கிறது. உடனடியாக, இப்போதே தா என்று கேட்கிறது. ஆனால் அது அரசின் காதில் புலி உறுமலாகக் கேட்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினராகிய ஆரம்பத்தில் அமைச்சர் டக்ளஸ், மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு என்ற தனது இலக்குகளை அடைவதற்கே தான் தவம் கிடக்கிறார் என்று தொலைக்காட்சிகளில் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இப்போதும் கூறிவருகிறார்.

அப்படி இருக்கும்போது திம்புவில், ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத கோரிக்கைகளையே தமிழ்க் கட்சிகள் முன்வைத்தன என்று அவர் எப்போது இலங்கை ஜனாதிபதி மஹிந்தருக்குச் சொன்னார் என்பது தெரியவில்லை. டக்ளஸ் ஜனாதிபதியை ஏமாற்றுகிறாரா? இல்லை ஜனாதிபதி டக்ளஸை ஏமாற்றுகிறாரா ? அவர்கள் இருவருக்குமே தெரிந்த ரகசியம் அது.

இப்போது இல்லாவிட்டாலும் பின்னராவது மாநிலத்தில் சுயாட்சி வேண்டும் என்று டக்ளஸ் கூறி வரும் நிலையில், திம்புவில் முன்வைக்கப்பட்ட 4 அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் இலங்கை ஜனாதிபதிக்கு எப்படி கேட்கக்கூடாதவைகளாகிப் போயின என்பதும் புரியவில்லை.

சிங்கள அரசியல்வாதிகள் இப்படி எந்த அடிப்படைகளும் அற்று பொய்களையும் புரட்டுக்களையும் கட்டவிழ்த்து விடும் போது மேடையில் கைகட்டி, வாய் பொத்தி அமர்ந்திருப்பதுதான் இணக்க அரசியல் என்று டக்ளஸ் வரையறுத்து வைத்திருப்பார் போலும்.

# இடர்படும் 5,000 தமிழர்கள்

'வின்னிபெக் பிரீ பிரஸ்' என்ற இணையத் தளத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இது.
புதினப் பலகை இணையத் தளத்திலிருந்து பெற்றுப் பிரசுரிக்கப்படுகின்றது.

கனடாவில் உள்ள வின்னிபெக் நகரத்தைச் சென்றடைய வேண்டும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கும் குடும்பங்கள் உட்பட இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் தமது பயணத்தைத் தொடர முடியாது, இடைவழியில் இடர்படுபவர்களாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் உள்ளனர். உலக நாடுகளுக்குப் பயணம் செய்து உண்மை நிலையைக் கண்டறியும் வின்னிபெக்கின் மனித உரிமை சட்டவாளரான டேவிட் மற்றாஸ் இவர்களின் நிலைமை பற்றியும் அறிய முயற்சித்து வருகிறார்.

"நீங்கள் ஏதாவது புதிதாகச் செய்ய வேண்டும் என நினைத்தால், முதலில் உங்களது பிள்ளைகளைச் சிறைகளிலிருந்து வெளியில் எடுத்து அவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் என்பதையே நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்'' என 5,000 வரையான தமிழ் மக்களிடம் மற்றாஸ் தெரிவித்துள்ளார்.

இந்த 5,000 தமிழர்களும் கனடாவுக்கான தமது பயணத்தைத் தொடர முடியாது இடைவழியில் தரித்து நிற்கிறார்கள். இவர்களைப் பார்வையிடுவதற்காக தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று திரும்பியிருக்கிறார் மற்றாஸ்.

"இது மிக இலகுவானது, வெளிப்படையானது, அதிக செலவில்லாதது. இது ஒரு புரட்சிகரமான சிந்தனையல்ல'' என தனது நண்பரும் வின்னிபெக்கைச் சேர்ந்தவரும், நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினருமான சாம் ரட்ணாவுடன் இச்சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட சட்டவாளர் மற்றாஸ் தெரிவித்தார்.

இவர்கள் இடம்பெயர்ந்த 200,000 மக்களுக்கான பாதுகாப்பான நிரந்தர இடத்தைக் கண்டறியும் முயற்சியில் இறங்கியுள்ளனர். புகலிடம் கோரி இடைவழியில் நிற்கும் தமிழ் மக்கள் மீளவும் தமது இடங்களுக்குச் செல்ல முடியாதவர்களாக உள்ளனர். இவர்கள் தற்போது உள்ள நாடுகளில் தொடர்ந்து தங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படவில்லை என மற்றாஸ் தனது 42 பக்க அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் மாநிலங்களில் ஒன்றான மனிற்றோபாவிற்குச் செல்வதற்காக மலேசியாவில் காத்திருக்கும் நான்கு குடும்பங்களில் ஒரு குடும்பத்தை இவர்கள் சந்தித்தனர். "கனடாவுக்கு நாங்கள் எப்போது செல்ல முடியும்?'' என அவர்கள் தம்மிடம் வினவினர் என்று ரட்ணா தெரிவித்தார்.

அன்ரன், தேவகி யோகேந்திரன் மற்றும் பாடசாலை செல்ல வேண்டிய வயதை அடைந்த அவர்களின் இரு மகள்மார் ஆகியோர் இரு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையை விட்டுப் புலம்பெயர்ந்திருந்தனர். ஆனால் இவர்கள் தாம் சென்றடைய வேண்டிய நாட்டிற்குச் செல்ல முடியாது மலேசியாவில் தற்போது தடுக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கட்டுமானத் துறையில் பணிபுரிந்த அன்ரன் தற்போது தனது குடும்பத்தவர்களைக் காப்பதற்காக அரைச் சம்பளத்தில் வாகனத் திருத்தகம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறார்.

"இவர்கள் சட்ட ரீதியற்ற முறையிலேயே வேலை செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் மலேசியாவில் உள்ள இவர்கள் சட்ட ரீதியாக வேலை செய்ய முடியாது. வேலைக்குச் செல்லாவிட்டால், இவர்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது'' எனவும் அன்ரன் குடும்பத்தைச் சந்தித்த ரட்ணா தெரிவித்தார்.

"இவ்வாறுசட்ட ரீதியற்ற முறையில் வேலைக்குச் சென்றபோதுதான் அந்த நாட்டுக் காவல்துறைக்கு அபராதம் செலுத்தியதாக அன்ரன் தெரிவித்திருந்தார். ஆனால் வேலைக்குச் சென்று தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதைவிட அவருக்கு வேறு தெரிவுகள் எதுவுமில்லை. மலேசியா அரசு தனது நாட்டிலுள்ள அன்ரன் போன்ற அகதிகளுக்கு எந்தவொரு மருத்துவ வசதிகளையும் வழங்கவில்லை'' எனவும் ரட்ணா மேலும் சுட்டிக்காட்டினார்.

தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றியே கவலைப்படுவதாக அன்ரன் தன்னிடம் குறிப்பிட்டார் என்று ரட்ணா தெரிவித்துள்ளார். "இவர்களது இரு மகள்மாரும் பாடசாலைக்குச் செல்வதில்லை. இவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் பாடசாலை இல்லை. அன்ரனின் இரு மகள்மாரும் வீட்டிலேயே தங்கியுள்ளனர். பெற்றோர்கள் தம்மால் இயன்றளவு தமது பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க முயற்சிக்கிறார்கள்'' எனவும் ரட்ணா குறிப்பிட்டுள்ளார்.

ரட்ணா மற்றும் மற்றாஸ் ஆகிய இருவரையும் சந்தித்து, நல்ல செய்திகளைக் கேட்க முடியும் என்ற நம்பிக்கையில் மலேசியாவில் காத்திருந்த 800 தமிழ் அகதிகளில் யோகேந்திரன் குடும்பமும் ஒன்றாகும்.

"இது என்னுடைய கைகளில் இல்லை என்பதை நான் அந்த மக்களிடம் எடுத்துக் கூறினேன். இது குடியேற்றுவதுடன் தொடர்புபட்ட ஒன்றாகும் எனவும் நான் அவர்களிடம் எடுத்து விளக்கினேன்'' என ரட்ணா தெரிவித்தார். தடுத்து வைக்கப்பட்டுள்ள பல நூற்றுக்கணக்கான அகதிகளுடன் ரட்ணா மற்றும் மற்றாஸ் ஆகிய இருவரும் கலந்துரையாடினர். அத்துடன் மனித உரிமை அமைப்புக்கள், அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் ஆகியோருடனும் இவ்விருவரும் தமிழ் அகதிகள் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறினர்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடந்திராவிட்டால், தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்றிருக்க முடியும் என மற்றாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கனேடிய அரசு தனது அதிருப்தியை ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் அடுத்த ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய அமைப்புகளின் மாநாட்டைப் புறக்கணிப்பதாகவும் கனேடிய அரசு அறிவித்திருந்தது.

2009இல் நிறைவுக்கு வந்த இலங்கையின் உள்நாட்டுப் போரில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கான பொறுப்பை அந்த நாட்டுப் அரசு ஏற்க மறுத்துள்ளது. உள்நாட்டுப் போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது ஊடகவியலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவை போர் இடம்பெற்ற பகுதிகளில் பணி புரிவதற்கான அனுமதியை இலங்கை அரசு வழங்கவில்லை.

யோகேந்திரன் குடும்பத்தைச் சேர்ந்த செறின், அன்ரோலினா ஆகிய இருவரைப் போல பாடசாலைக்குச் செல்லும் பராயத்தை அடைந்தும் கல்வியைப் பெறமுடியாது இடைவழியில் தவிக்கும் பிள்ளைகளும் அவர்களது குடும்பங்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என மற்றாஸ் தெரிவித்துள்ளார்.

மலேசியாவைப் பொறுத்தளவில் இது மிகவும் இலகுவானது எனவும், இங்கு மொழிப் பிரச்சினை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலேசியாவில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்வதுடன், தமிழ் மொழி கற்பிக்கப்படும் 500 பாடசாலைகள் உள்ளன. "ஆனால் அகதிகளாக உள்ள தமிழ்ப் பிள்ளைகள் இப்பாடசாலைகளில் கற்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது'' எனவும் மற்றாஸ் குறிப்பிடுகிறார்.

இது தொடர்பாக இவரால் எழுதப்பட்ட அறிக்கையை எதிர்வரும் 16ஆம் திகதி ரொரன்ரோவில் நடைபெறவுள்ள மாநாட்டில் மற்றாஸ் வழங்கவுள்ளார். டேவிட் மற்றாசால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் பின்வரும் முக்கிய பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

- இலங்கை அரசானது சிறுபான்மைத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள பாரபட்சம், சித்திரவதை மற்றும் அடக்குமுறை போன்றவற்றை நிறுத்த வேண்டும்.
- இலங்கை அரசு தனது நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் மற்றும் மீள் இணக்கப்பாட்டு முயற்சிகளை மேற்கொள்ளும் வரை, 2013இல் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டைப் புறக்கணிப்பதில் கனடாவுடன், ஏனைய அனைத்து உறுப்பு நாடுகளும் ஒன்றிணைய வேண்டும்.
- இந்தோனேசியா அரசு அகதிகள் சாசனத்தில் கையொப்பமிட வேண்டும். அத்துடன் பிள்ளைகள் மற்றும் அவர்களது பெற்றோரை தடுத்து வைக்காதிருப்பதற்கான கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய இரு நாடுகளிலும் பணிபுரிவதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும்.
- மீள்குடியேற்றுவதாக உறுதியளித்த மலேசியாவில் உள்ள 4,000 அகதிகளை அவுஸ்திரேலியா அரசு உடனடியாக மீள்குடியேற்ற வேண்டும்.
- கனேடிய அரசு நாடாளுமன்றிலிருந்து Bill C-4ஐ நீக்க வேண்டும். சட்ட ரீதியற்ற வகையில் ஆள்கடத்தல் செய்கின்றவர்களைத் தண்டிப்பதற்காகவே கனடாவின் குடிவரவு முறைமையில் குழப்பத்தை உண்டு பண்ணும் ஆள்கடத்தல் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் இதன் கீழ் சிறுவர்கள் உட்படப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பலர் எவ்வித விசாரணைகளும் இன்றி சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆகவே இவ்வாறானவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படவேண்டும்.

- அத்துடன் அகதிகளை தனிப்பட்ட ரீதியில் பொறுப்பேற்பதற்கான கட்டுப்பாடுகள் தொடர்பில் கனேடிய அரசாங்கமானது 2012இல் தளர்வைக் கொண்டு வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலும் மக்கள் கிளர்ச்சி ஏற்படுமா?

வி.எஸ்.ரீ.

போதைப் பொருள் பாவனை தொடர்பாகக் கைதிகள் மத்தியில் உருவான மோதலே அண்மையில் கொழும்பு மகஸின் சிறைச்சாலைக் குழப்பத்துக்கான காரணம் என்று காட்டிக்கொள்ள அரசு முயல்கிறது. ''இல்லையில்லை; அது அரசுக்கு எதிரான எழுச்சிப் போராட்டம்'' என்கின்றனர் மற்றொரு தரப்பினர்.

தனியார்துறை ஓய்வூதியச் சட்ட மூலத்துக்கு எதிராக கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் கடந்த வருடத்தில் கிளர்ந்து எழுந்தனர். அந்தக் கிளர்ச்சியைக் கண்டு பத்திரிகையாளர்களும் அண்மையில் வீதியில் இறங்கி கருத்துச் சுதந்திரம் கேட்டுப் போராட்டம் நடத்தினார்கள்.

பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி அண்மையில் கொழும்பில் ஓர் ஆர்ப்பாட்டமும் பேரணியும் நடைபெற்றன. அரசுக்கு எதிரான இத்தகைய போராட்டங்கள் படிப்படியாக அதிகரித்து வருகின்றன.

வீதியில் இறங்கிப் பொதுமக்கள் மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் கண்டு ஜனாதிபதி எப்போதுமே அஞ்சு கிறார்.

கட்டுநாயக்க தொழிலாளர்கள் வீதியில் இறங்கிப் போராடியதும் தனியார்துறை ஓய்வூதியச் சட்ட மூலத்தை அரசு மீளப் பெற்றுக் கொண்டது.

மரக்கறி வர்த்தகர்கள் வீதியில் இறங்கியபோது பிளாஸ்ரிக் கூடைத் திட்டம் இடை நிறுத்தப்பட்டது.

அப்படியானால் ஜனாதிபதியையும் அரசையும் அதிகாரத்திலிருந்து அகற்ற உகந்த வழி வீதிப் போராட்டம்தானா?

உண்மையில் நாடாளுமன்றத்தாலோ, நீதிமன்றத்தாலோ தன்னைப் பதவியிலிருந்து அகற்ற முடியாது என்பதை ஜனாதிபதி நன்கறிவார். ஆனால், மக்கள் வீதியில் இறங்கித் தனக்கு எதிராகப் போராடுவார்களானால் தாம் பதவியை விட்டு விலக நேரிடும் என்பதையும் அவர் நன்கறிவார். மக்கள் கிளர்ச்சியால் மட்டுமே தன்னைப் பதவியில் இருந்து அகற்ற முடியும் என்பது அவருக்குத் தெரியும்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தப் போராட்டங்களைத் தடுத்து நிறுத்த முன் அனுமதி கோரி பொலிஸார் நீதிமன்றங்களை நாடிச் செல்வது இதனாலேயே. இன்றைய நாள்களில் இத்தகைய மக்கள் போராட்டங்கள் அடிக்கடி தலைதூக்குவதைக் கண்டு, மத்திய கிழக்கு நாடுகளைப் போன்று இலங்கையிலும் பொதுமக்களை வீதியில் இறங்கிப் போராட வைக்க வேறு சக்திகள் பின்னணியில் சதி செய்வதாக அரசு சந்தேகிக்கக் கூடும்.

ஆட்சியாளர்களுக்கு எதிராக கருத்து வெளியிடும் சுதந்திரம் மறுக்கப்படுவதாலேயே மத்திய கிழக்கு நாடுகளில் பொதுமக்கள் வீதியில் இறங்கிப் போராட முனைந்தனர். அந்த நாடுகளில் ஆட்சியாளர்கள், எதிர்க்கட்சிகளை மௌனிக்க வைத்து, ஊடகங்களைத் தம் பக்கம் கவர்ந்து, தமக்குக் கட்டுப்படாத ஊடகங்களை செயலிழக்க வைத்து, எவருமே தமக்கெதிராக வாய்திறக்க இயலாத நிலையை உருவாக்கினர்.

இதனால் ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்களது எதிர்ப்பு பல வடிவங்களில் தலை தூக்கின. தனிப்பட்ட எவரது தலைமையிலும் அவை முன்னெடுக்கப்படவில்லை. மாணவர்கள், தொழிலாளர்கள், வெவ்வேறு சமூகத்தரப்புக்கள் என பொதுமக்கள் வெவ்வேறு பிரிவுகளாக ஆட்சியாளர்களுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடினர். இத்தகைய பல்வேறு அணிகளின் குறிக்கோளும் ஆட்சியாளர்களை அதிகாரத்திலிருந்து அகற்றுவதாகவே இருந்தது.

தற்போது இலங்கையில் இடம் பெறுவதும் அத்தகைய எதிர்ப்புகளே. இவற்றுக் கெல்லாம் அரசியல் தரப்புகள் எவையும் தலைமை தாங்கி வழி நடத்தவில்லை. தொழிலாளர்கள், மாணவர்கள் எனப் பாதிக்கப்பட்டோர் ஒன்றிணைந்து அரசினால் தமக்கு இழைக்கப்படும் பாதிப்புகளுக்கு தமது எதிர்ப்பை வெளிபடுத்தி வருகின்றனர்.

தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம், மரக்கறிகளை பிளாஸ்ரிக் கூடைகளில் பேணும் திட்டம் போன்றவற்றுக்கு எதிரான பொது மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அரசு தன் பக்க நியாயத்தையும் கற்பிக்கத் தவறவில்லை.

''இவையெல்லாம் தொழிலாளர்களது நலன் கருதி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே. தொழிலாளர்களே இவற்றை விரும்பாவிட்டால் அரசால் என்ன செய்ய முடியும்? அதனால் அரசு இத்திட்டங்களைக் கைவிடத் தீர்மானித்தது'' என்று கூறி தனது முடிவுக்கு, பின் வாங்கலுக்கு காரணம் கற்பித்துக் கொண்டது அரசு. ஆயினும் குறிப்பிட்ட இத்திட்டங்களின் மூலம் அரசு தமது வயிற்றில் அடிக்க முனைவதைத் தெளிவாக உணர்த்து கொண்ட தொழிலாள வர்க்கத்தினர் அதற்குத் தீவிர எதிர்ப்புக் காட்டினர் என்பதே உண்மை.

அண்மைய சிறைச்சாலைக் குழப்பச் சம்பவமும் திடீரென, எதிர்பாராத விதமாக ஏற்பட்டதொன்றல்ல. தடுப்பிலுள்ளோரைச் சந்திக்கச் செல்லும் உறவினர்கள், சிறைக் கைதிகளுக்குப் போதிய வசதி இல்லை என்பதைக் கண்டும் கேட்டும் உணர்ந்திருந்தனர்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பின்பே சிறைச்சாலைக் கைதிகள் போராட்டம் நடத்த ஆரம்பித்தனர். சிறைச்சாலை மதிற் சுவரில் 'சிறைக் கைதிகளும் மனிதர்களே' என எழுதப்பட்டிருக்கும் வாக்கியம் சிறைக் கைதிகளும் தமது அதிகாரிகளின் புறக்கணிப்பால் உணர்ச்சி வசப்பட்டிருந்தனர் என்பதை நிரூபிக்கப் போதுமான சான்றாகும்.

சிறைச்சாலைச் சம்பவத்துக்கு முன்னரும் நாட்டின் பொதுமக்களை உணர்ச்சி கொள்ள வைத்த பல சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. அங்குலான, தொம்பே பொலீஸ் நிலையங்கள் மீதான தாக்குதல்கள், முன்னாள் இராணுவத் தளபதிக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கிய தினத்தன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் என்பவை பொறுமை காக்க இயலாத நிலையில் பொதுமக்கள் பொங்கி எழுந்தமைக்கான உதாரணங்கள்.

ஜனநாயக நாடொன்றில் அரசுக்கு எதிரான தமது எதிர்ப்பைப் பொது மக்கள் வெளிப்படுத்தும் விதங்கள் பலவுண்டு. நாடாளுமன்றம் எதிர்க் கட்சி ஊடகங்கள் என்ற வழிகளினூடாகத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தப் பொதுமக்களுக்கு வாய்ப்புக் கிட்டாது போனால், அவர்கள் தாமாக ஒன்று திரண்டு சுயமாகத் தமது எதிப்பை வெளிப்படுத்த முயல்வர்.

மத்திய கிழக்கு நாடுகளிலும் மக்களின் எதிப்பலைகள் அரசுகளுக்கு எதிராக வெடித்துக் கிளம்பியமை இந்த விதத்திலேயே. முபாரக்கும், கடாபியும் மக்கள் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்ததும் இதனாலேயே.

இலங்கையிலும் மக்கள் எழுச்சி உருவாக வாய்ப்புண்டா என்பதே தற்போது எழுந்துள்ள கேள்வி.

இன்ரநெற், பேஸ்புக், ருவிற்றர் போன்ற நவீன தொழில்நுட்ப வசதிகளே மத்திய கிழக்கு நாடுகளில் மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்ததாகக் கூறப்பட்டாலும், இலங்கையில் கூட ஒரு எஸ்.எம்.எஸ். செய்தி பல பொது மக்களை உணர்ச்சி வசப்பட வைக்கவல்லது என்பதையும் மறுக்க இயலாது ✱

# ஒரு யுகத்துக்குரிய தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம்

க.மு.தர்மராசா

கணபதிப் பிள்ளை காங்கேசர் பொன்னம்பலம் வித்தியாசமான ஒரு யுகத்திற்கும் வித்தியசமான ஒரு சூழலுக்கும் உரியவர் என்று அவரைப் பற்றிக் குறிப் பிடுகின்றார்கள் பேராசிரியர் சச்சி சிறிகாந்தா மற்றும் சிவ சச்சி ஆகியோர்.

''நாவன்மையாலும் தன்னம்பிக்கையாலும் ஆளுகை செய்யப்பட்ட மங்கிச் செல்லும் நாடாளுமன்ற விளிம்பின் கடைசி வாய்ப்புத் தூண் அவர். கடுமையான சொற்றொடரையும் இதமாகத் தரவல்ல செழுமையான அவரது குரல் ஒலியை இனி ஒரு தடவை நாம் கேட்க முடியாது. அதிர்ஷ்டம் இல்லாத அவரது எதிரியை இரகசியமாகப் பின் தொடர்ந்து செல்லும் கற்றார்ந்த அவரது இடிபோன்ற குரல், தாக்குதலில் இருந்து இலகுவாகத் தப்பிக்கொள்ளும் சொற்றிறன், விவாதத்தில் போட்டியென்று வந்து விட்டால் அவர் கொடுக்கும் நெத்தியடி, நாடாளுமன்ற வாசலுக்குள்ளும் அதுபோல் நீதிமன்றங்களின் சுவருக்குள்ளும் பயத்தை விரட்டியடிக்கவல்ல ஏனை வார்த்தை ஜாலம்... இவற்றையும் நாம் இனிப் பார்க்க முடியாது. சோல்பெரி ஆணைக்குழு முன் அவர் ஆற்றிய உரை, குழுவை மந்திரத்தால் கண்டுண்ட நாகத்தின் நிலைக்குத் தள்ளி, அதனை மீண்டும் ஆற்றுமாறு அவர்களைக் கோர வைத்தது. அந்தப் பேச்சாற்றலின் வெற்றிகரமான காலத்தைப் பற்றியும் நாம் இனிக் கேட்கப் போவதில்லை. ஐ.நா. சபையின் மதிப்பிற்குரிய அரங்கத்தினரை 1965 இல் வியப்பிலாழ்த்தின அவரது பேச்சுக்கள்...'' என்று பேராசிரியர் சச்சி சிறிகாந்தாவும் சிவா சச்சியும் தொடர்கிறார்கள்.

ஜி.ஜியின் அரசியல் பற்றி ஜேன் ரஸ்ஸல் என்பவரும் ஜெயரண்டம் வில்சன் என்பவரும் கூறிய கருத்துக்கள் மிக முக்கியமானவை. நண்பனாகவும் பின்னர் எதிரியாகவும் மாறிய செல்வநாயகத்துடன் பொன்னம்பலம் கொண்டிருந்த முரண்பாடு பற்றிய மதிப்பீட்டுக்கு தந்தை செல்வாவின் மருமகனாகிய ஜெயரட்ணம் வில்சனின் அவதானிப்புக்கள் மிகவும் முக்கியமானவை.

ஈழ மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்த முதல் தமிழ்த் தலைவர் பொன்னம்பலம் என்பதை வில்சனின் விவரணங்கள் நிரூபிக்கின்றன.

1931ஆம் ஆண்டு இலங்கைத் தீவில் அனைவருக்கும் வாக்குரிமை நிறுவப்பட்டதை அடுத்து, ஈழத்துத் தமிழர்கள் மத்தியில் அவர் தம் சிந்தை கவர்ந்த முதல் அரசியல்வாதியாகப் பொன்னம்பலம் மாறினார். ஆகவே, 1931இற்கும் 1970க்கும் இடையில் வரும் நான்கு தசாப்த காலத்திலான அவரது தேர்தல் பதிவுகள் மீளாய்வு செய்யப்படுவதற்கான தகுதியைப் பெறுகின்றன. இன்றுள்ள நிலவரப்படி பற்றிச் சிங்கள அரசியல்வாதிகளுக்கு இருக்கும் அச்சம் என்னவென்று என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஒரு பொதுவான மொழியினால் ஒன்றுபட்ட, பெரும்பாலும் ஒரு பொதுவான சமயத்தினால் ஒன்றுபட்ட, ஒரு பொது



இன்று நினைவு தினம்

கட்சி சார்புகளைக் காட்டாமல் மிக நீண்டதொரு காலத்துக்கு வாக்காளப் பெருமக்களை அடிக்கடி சந்தித்து வந்த அரசியல்வாதியாக பொன்னம்பலத்தைத் தவிர வேறு யாரையும் குறிப்பிட முடியாது.

1939ஆம் ஆண்டு அரச சபையில் ஜி.ஜியே சமநிலைப் பிரதிநிதித்துவம் கோரி உரையாற்றினார். அப்போது, சமநிலைப் பிரதிநிதித்துவத்துக்கான கோரிக்கையைப் வான பண்பாட்டாலும் பாரம்பரியத்தினாலும் ஒன்றுபட்ட ஒரே சமூகத்தைச் சேர்ந்த 34 உறுப்பினர்களுக்கு எதிராக - தமிழர்கள், இந்தியர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள், மலாயர்கள் என்ற முற்றிலும் வெவ்வேறான முரண்குழுக்களைக் கொண்ட - வேறு 34 உறுப்பினர்கள், ஐரோப்பிய நியமன உறுப்பினர் திரளணியாக ஓர் அரசுக்கு உறுதுணையாக இருக்கும் என்று அதனை ஆதரிக்கும் ஐரோப்பியர்கள் உறுதியளித்துள்ள போது, நான் உங்களைக் கேட்கிறேன் சிங்கள மக்கள் அல்லது சிங்கள அரசியல்வாதிகளே நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்?'' என்று அவர் அதிரடியாக முழங்கினார்.

ஜி.ஜியின் கடமை உணர்ச்சி என்பது இன்றைய இளைஞர்களுக்கு ஒரு முன்மாதிரி. 1976இல் கொழும்பு மேல் நீதிமன்றில் 'ட்ரயல் அட் பார்' முறையில் நடந்த வழக்கில் பொன்னம்பலம் நடந்து கொண்டமையே அதற்குச் சாட்சி.

அந்த வழக்கு நடப்பதற்கு முன்னர்தான் பொன்னம்பலம் கடுமையாகச் சுகவீனம் அடைந்து சிகிச்சை பெற்றிருந்தார். அந்த வழக்கில் கவனத்தைக் குவிப்பது அவரது உயிருக்கு ஆபத்தானது என்று தெரிந்திருந்தும், தான் பொறுப்பெடுத்ததற்காக அவர் அந்த வழக்கைக் கொண்டு நடத்தினார். ''கிட்டத்தட்ட இறந்துவிட்டார் என்ற நிலைக்குச் சென்று மீண்டிருந்தார். அதனால் அவரது உதவியாளர்களிடம் வழக்கை ஒப்படைத்து ஆலோசனையை மட்டும் வழங்கும் பணியைச் செய்யுமாறு கூறி, அவர் வழக்கில் நேரடியாகப் பங்கேற்று உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதைத் தடுக்க எவ்வளவோ முயன்றேன். ஆனால், தான் பொறுப்பெடுத்து விட்டார் என்பதற்காக அவரே அந்த வழக்கை எடுத்து நடத்தினார். அதுதான் அவர் தனது தொழிலின் மீது காட்டிய பக்தி'' என்று கூறுகிறார் பிரபல சட்டத்தரணியான ஏ.எச்.டி.சில்வா (குயின் கவுன்ஸில்).

அந்த வழக்கில் ஜி.ஜி. ஏன் அத்தனை கரிசனை காட்டினார் என்றால் அது தமிழ் மக்களின் விவகாரத் துக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் என்பதாலேயே ஆகும்.

1976 செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி அந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. பிரதிவாதிகள் எழுப்பிய ஆட்சேபனைகளுக்கு ஆதரவளித்துத் தீர்ப்பளித்த அந்த ஆயம் (ட்ரயல் அட் பார்), தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிலிருந்தும் விடுவித்தது. அரசுக்கு எதிராகத் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தார் என்பதே அமிர்தலிங்கத்துக்கு எதிரான அந்தக் குற்றச்சாட்டு.

விடுதலையான அமிர்தலிங்கம், ''அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்ட விதத்தை நாம் எதிர்க்க வேண்டும் என்பதை ஜி.ஜி. பொன்னம்பலம் வழக்கின் போது எமக்குத் தெளிவுபடுத்தினார்'' என்றார்.

அவ்வாறு தமிழ் மக்களுக்காகப் பாடுபட்ட ஜி.ஜி. பொன்னம்பலத்தை தமிழ் இனம் ஒருபோதும் மறக்க முடியாது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமை கொடுத்த அறிவு

அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாதவர்கள் உலகத்தில் மிக மிகக் குறைவு. ஒரு வீட்டில் தங்கும்போது நண்பர் பாவித்திருந்த வாசனைத் திரவியத்தின் மணம் மூக்கைத் துளைத்தால் "ஆஹா.. இது மாதிரி வாசனைத் திரவியம் எமக்கு வேண்டுமே" என்பது ஆசையின் முதல் அலை. "அட... இந்த வாசனைத் திரவித்தையே அவர் நமக்குத் தந்துவிட்டு வேறு வாங்கிக் கொண்டால் என்ன?" என்று நினைப்பது அடுத்த பெரிய அலை. கேட்டால் தரவா போகிறார்.

நாம் எடுத்து ஒருமுறை பாவித்துப் பார்த்தால் என்ன குடிமுழுகியா போய்விடும் என்பது அடுத்த பேய் அலை. வாசனையில் மயங்கி நமது பெட்டியில் ஞாபகமாக உள்ளே வைப்பது ஆசைக் கடலின் புயல்.. சூறாவளி... நமது கௌரவக் கப்பலைக் கவிழ்த்துவிடும் கடல் கொந்தளிப்பு. அதாவது மானச் சுனாமி.

இப்படிப் பிறர் பொருளுக்கு ஆசைப்படுவதை கண்டிக்கத்தக்கது. "உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறர் பொருளைக் கள்ளத்தால் எனல்" என்கிறது தமிழ்மறை.

கையெழுத்துப் போடப் பேனா கொடுத்தால் சிலருக்குத் திருப்பிக் கொடுக்க மனம் வராது. மறந்து விட்டதாக நினைத்துக் கொண்டு புறப்பட்டு விடுவார் கள்.

பொதுவாகவே பொருளாசை துன்பம் தரும். நாம் என்ன நினைக்கிறோம் தெரியுமா? நமது அனுபவத் துக்குக் கிடைக்கும் பொருள்கள் எல்லாம் நமது புண்ணியத்தின் பலன்.

எனவே அவற்றை நுகர நமக்கு உரிமை உண்டு என்று நினைக்கிறோம். நமது புண்ணிய பலத்தால் நாம் பெறுகிற சுகபோக அனுபவங்களை யார் கேள்வி கேட்க முடியும் என்று அகம்பாவமாகக் கூட நடந்து கொள்கி றோம். இது தவறு.

காந்தி அடிகள் நமக்குக் கிடைத்த செல்வத்தை நாமே அனுபவிக்காது பிறருக்குப் பயன்படுத்தச் சொல்கிறார். எப்படி? அதனை தர்ம கர்த்தா தத்துவம் என்பார். கோயில் சொத்தை தர்மகர்த்தா நிர்வாகம் செய்வார்.

ஆனால் அந்தச் சொத்துக்களைத் தன்னுடையது என்று கருதமாட்டார். அதன் உரிமை முழுவதும் தனக்கே என்று ஆடம்பர வீக்கம் அடையமாட்டார். அப்படி நமது பணம், சொத்து, திறமைகள், கலைகள், ஆற்றல்கள் எல்லாவற் றையும் பிறர் உடைமையாகக் கருதி நம்மைத் தர்மகர்த்தாவாக நினைக்க வேண்டும் என்கிறது காந்தியக் கொள்கை இது. மிக மிக உயர்வான கொள்கை.

விவேகானந்தர் மேலை நாடுகளுக்குப் போனபோது அவர் தங்கும் அறை நவீன கட்டில், உயர்ரக மெத்தையுடன் இருந்தது. ஆனால் அவர் அந்தக் கட்டில் மெத்தையைத் தவிர்த்துக் கீழே படுத்துக் கொண்டார். ஏன்? என்று கேட்டபோது "என் நாட்டில் கோடிக் கணக்கான ஏழைகள் பாய்கூட இன்றி வெறுந்தரையில் படுக்கிறபோது இந்த உயர் ரக கட்டில் மெத்தையில் என்னால் எப்படி உறங்க முடியும்" என்று பதில் கூறினார்.

இதுமட்டுமல்ல, இது போல உயர்ந்த சிந்தனையைத் தூண்டும் ஒரு கதை சொல்கிறேன்.

அரண்மனையில் வேலை பார்க்கும் அடிமை ஒருவன் அரசருடைய படுக்கை அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். மெத்தையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்த அவன் அதன் மென்மையை உணர்ந்து சாய்ந்தான். தன்னை அறியாது உறங்கியும் போனான். உள்ளே நுழைந்த அரசர் அடிமை தம் கட்டிலில் உறங்குவதைப் பார்த்துக் கோபப்பட்டு "இவனைச் சவுக்கால் அடியுங்கள்" என்று உத்தரவிட்டார்.

சவுக்கால் அடிபட்ட அடிமை அழுவதற்குப் பதில் சிரிக்கத் தொடங்கினான். அரசர்... "ஏன் சிரிக்கிறாய்?" என்று உறுமினார். "அரைமணி நேரம் படுத்திருந்த எனக்கே இத்தனை அடி கிடைக்கிறது என்றால் வாழ்நாள் முழுவ தும் படுத்திருந்த உங்களுக்கு எவ்வளவு அடி கிடைக்கும் என்று நினைத்தேன். சிரிப்பு வந்து விட்டது" என்றான்.



இப்படியும் யோசிக்கலாமோ?

சுகி.சிவம்

# இணைப்பாட விதானத்தில் முன்னிற்கும் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*



55 ஆவது ஆண்டில் கால்பதித்து சைவத்தமிழ் பாரம்பரியங்களோடு மணி விழாவை நோக்கி வளர்ந்து வரும் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம் குறித்த சமூகச் சூழலில் வாழும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று பணியாற்றி வருகின்றது.

வசதி படைத்த மாணவர்கள் நகரப் பாடசாலைகளை நாடும் காலச்சூழலில் "தரமான கல்வியினூடாக சமூகத்துக்கு பொருத்தமான பிரஜைகளை உருவாக்குவோம்" என்ற தூரநோக்குடன் கல்விப்பணியாற்றி வரும் வித்தியாலயத்தில் தரம் ஒன்று முதல் தரம் 11 வரையான வகுப்புக்களில் 250 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர். பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் 600 மாணவர்கள் வரை கல்வி கற்ற போதிலும் அந்த எண்ணிக்கை அரைவாசிக்கு குறைந்த அளவு வீழ்ச்சி கண்டிருப்பது பெற்றோர் பாடசாலை மீது வைத்திருந்த நம்பிக்கைத் தன்மை குறைவடைந்து செல்வதை எடுத்துக் காட்டுகின்றது. எனினும் கடந்த 10 வருட இடைவெளியில் 2001 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2011 ஆம் ஆண்டு பி.சாலமன் தரம் 5 புலமைப்பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளார் (புள்ளி 169) க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைவோர் எண்ணிக்கை கடந்த ஐந்து வருட புள்ளிவிவரங்களின் படி ஆகக்கூடியது 4 பேர் 20 வீதம். 2010 ஆம் ஆண்டு 13 பேர் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் ஒருவரே சித்தியடைந்துள்ளார். சித்தியடைந்தோ 10 வீதத்துக்கு குறைவானது (07.6 வீதம்)

**பிள்ளை நேயப் பாடசாலை செயற்றிட்டத்தில் இணைக்கப்பட்டு கடந்த வருடம் பாடசாலை கவர்ச்சியாக்கப்பட்டது. வகுப்பறைக் காட்சிப்படுத்தல் செயற்பாடுகள் ஒரு லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.**

பாடசாலைகளின் கல்வித் தரம் தொடர்பான நம்பிக்கையை பாடசாலைச் சமூகம் வெளிப்படுத்தும் அலகுகள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை உட்பட பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளே. கடந்த வருடம் மூன்றாம் தவணையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் ஆசிரியர் ஆளணியின் எண்ணிக்கை 19, மாணவர் எண்ணிக்கை 233

கோப்பாய் கல்வி வட்டாரத்தில் விளையாட்டு மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளின் கணிசமான அளவு முன்னணியில் திகழும் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் பரிசு நிதியத்தில் ஒரு லட்சத்து 55 ஆயிரம் ரூபா நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளது. பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியர் க.முருகேசு ஞாபகார்த்தமாக 50 ஆயிரம் ரூபா, அமரர் சுப்பிரமணியம் பவளம் - இரத்தினசபாபதி ஞாபகார்த்தமாக 50 ஆயிரம் ரூபா , பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர் கா. லங்காநேசன் ஞாபகார்த்தமாக 20 ஆயிரம் ரூபா பழைய மாணவன் மா.நாதமணி (சுவிஸ்) 15 ஆயிரம் ரூபா, பழைய மாணவன் அ.பரஞ்சோதி 10 ஆயிரம் ரூபா, முன்னாள் அதிபர் நா.சிவஞானம் 10 ஆயிரம் ரூபாவையும் பரிசளிப்பு விழா நிதியத்துக்கு வைப்புச் செய்துள்ளனர்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து அதிபர்களாக கடமையாற்றியவர்கள் என்ற வகையில் க.முருகேசு, எஸ்.சிவசிதம்பரம், மூ.சுப்பிரமணியம் ஏ.நாகராசா, கே.அந்தோனிப்பிள்ளை, கே. பொன்னம்பலம், எஸ்.மணிசுந்தரம், நா.சிவஞானம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். பாடசாலையின் ஆரம்ப கால அதிபராகக் பொறுப்பேற்று 18 வருடங்களுக்கு மேல் அதிபராகக் கடமையாற்றி பாடசாலை வளர்ச்சிக்கு அளப்பெரும் சேவையாற்றியவர் என்ற வகையில் க.முருகேசுவின் சேவை பாடசாலை சமூகத்தினால் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றது.

அந்த வகையில் பாடசாலையின் புதிய மாடிக் கட்டடத்துக்கு அமரர் க.முருகேசுவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளையும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் உரிய முறையில் முன்னெடுத்து வளர்க்கும் வகையில் கணித விஞ்ஞான மன்றம், இந்து மாமன்றம், மாணவர் மன்றம், தகவற் தொடர்பாடல் கழகம், கவின் கலைமன்றம், சுகாதாரக் கழகம், ஆங்கில மன்றம், உள்ளிட்ட பல்வேறு செயற்பட்டு வருகின்றன.

பிள்ளைநேயப்பாடசாலை செயற்றிட்டத்தில் பாடசாலை இணைக்கப்பட்டு கடந்த வருடம் பாடசாலை கவர்ச்சியாக்கப் வகுப்பறைக் காட்சிப்படுத்தல் செயற்பாடுகள் ஒரு லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10இற்கும் மேற்பட்ட கணினிகளுடன் செயற்பட்டு வரும் கணினிக் கூடம் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகின்றது.

பாடசாலை நேரத்திலும் பிற்பகல் மற்றும் விடுமுறைக் காலத்திலும் கணினிக் கூடத்தின் செயற்பாடுகளின் மூலம் மாணவர்கள் பொருத்தமான முறையில் தேர்ச்சிகளை பெற்று வருவதோடு கணினிக்கூடம் தொடர்பான 2010 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வடக்கு மாகாண அதிகாரிகள் மேற்கொண்ட மதிப்பீட்டின் பிரகாரம் 'சி' வகை பாடசாலைகளில் மாகாண மட்டத்தில் 4 ஆவது இடத்தையும் தேசிய மட்டத்தில் 6 ஆவது இடத்தையும் பெற்று 13 லட்சம் ரூபாவை பரிசுத் தொகையாக பெற்றுள்ளது.

பாடசாலையின் சமகாலத் தேவைகள், சுற்றுலா வசதி, மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கற்றல் சாதனங்களை வழங்கலில் எ.ஏ.ஏ. முலீஸ் பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவர் க.செவ்வேள் அவர்கள் கணிசமான அளவு உதவி வருவதாக அதிபர் குறிப்பிட்டார்.

2011 ஆம் ஆண்டுக்கான சிறந்த அதிபர்களுக்கான 'பிரதீபா பிரபா' விருதை பாடசாலை அதிபர் கு.ரவீச்சந்திரனும் சிறந்த ஆசிரியர்களுக்கான 'பிரதீபா பிரபா' விருது பாடசாலையின் பிரதி அதிபர் சி.ஸ்ரீராகவனும் பெற்றுள்ளனர். வித்தியாலயம் சமூகத்தின் நம்பிக்கை பெற்று மேலும் சிறப்புப் பெற வாழ்த்துவோம்.

*(முற்றும்)*

ஞானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவை விடுவிக்கக் கோரிய ஆர்ப்பாட்டம் பேரணியாக மாறியது

கொழும்பு, பெப்.9

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை அரசு விடுதலை செய்ய வேண்டும், நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்ட வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மேல் நீதிமன்ற வளாகத்தில் நேற்று புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



சிறையில் இருந்து உயர் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்ட சரத் பொன்சேகா மருத்துவப் பரிசோதனைகளுக்கென வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படாமல் மீண்டும் சிறைக்கே அழைத்துச் செல்லப்பட்டமையால் இந்த ஆர்ப்பாட்டம் பேரணியாக வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றுள்ளது என்று சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்கு ஜனநாயகத் தேசிய முன் னணி மற்றும் ஜனநாயகத்தை மீட்பதற்கான இயக்கம் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேம தாச, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி நேற்று புதன் கிழமை அலுத்கடை நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சட்டவிரோத செயல்கள் இடம்பெற்றிருந்தால் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு என்று கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேல் மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்துக்கு நேற்று சமர்ப்பித்த அறிக்கை ஒன்றை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங் கப்புலி இவ்வாறு தீர்ப்பளித்தார்.

ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கம் சரத் பொன்சேகாவின் விடுதலை வேண்டி, நீதிமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை நீதிமன்ற மற்றும் பொது மக்களின் நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படும் என்று குற்றப்புலனாய்வுப் பிரி வினர் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்து குறிப்பிட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தை அடக்க பொலிஸார் முற்படும்போது பொலிஸாருடன் முறுகலில் ஈடுபட ஆர்ப்பாட்டக்காரர்கள் தீர்மானித்துள்ளதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த அறிக்கையைப் பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங் கப்புலி, அவ்வாறான நிலை ஏற்படும்போது பொலிஸ் கட்டளைச் சட்டம் 95 ஆவது அத்தியாயத்தின் கீழ் ஆர்ப்பாட்டத்தை கலைக்க பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு என்று தீர்ப்பளித்துள்ளார்

(ச)

# வெள்ளைக் கொடி மேன்முறையீடு மே மாதத்தில் விசாரணை ஆரம்பம்

கொழும்பு,பெப்.9

வெள்ளைக் கொடி வழக்கில் சரத் பொன்சேகா தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் மே மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் விசாரணக்கு எடுத் துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

**வெள்ளைக் கொடி வழக்கில் குற்றவாளியாக இனங் காணப்பட்ட பொன்சேகாவுக்கு 3 வருட கடூழியச் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

இந்த மேன்முறையீடு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க உள்ளிட்ட மூன்று நீதிபதிகள் கொண்ட குழு முன், நேற்று புதன் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேன்முறையீடு தொடர்பான ஆவணங்கள் அண்மையிலேயே தனக்கு கிடைக்கப்பெற்றதாக சரத் பொன்சேகா சார்பில் முன்னிலையான சட்டத்தணி நளின் லத்துவஹெட்டி மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை குறிப்பிட்டார். அதனால் அவற்றை பரிசீலிக்க தனக்கு கால அவகாசம் தேவை என்று கேட்டுக் கொண்டுள்ளார். இதனைக் கருத்தில் கொண்ட உயர் நீதிமன்றம் மனு மீதான விசாரணையை ஒத்திவைத்துள்ளது.

இதேவேளை, சரத் பொன்சேகாவினால் எழுதப்பட்ட இரு மனுக்கள் சட்டத்தரணி நளின் லத்துவ ஹெட்டியினால் நேற்று நீதிமன்றில் சமர்பிக்கப்பட்டன.

நீதிபதிகள் குழு தொடர்பில் அந்த மனுவில் தகவல் உள்ளடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மனு தொடர்பில் மே மாதம் 2 ஆம் திகதி விளக்கமளிக்குமாறு நீதிமன்றம் உரிய தரப்பினருக்கு உத்தரவிட்டுள்ளது.

வெள்ளைக் கொடி வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட சரத் பொன்சேகாவுக்கு 3 வருட கடூழியச் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை இரத்துச் செய்து தன்னை விடுதலை செய்யுமாறு கோரி சரத் பொன்சேகா மேன்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# முதலாவது விபத்து; ரூ. 5,34,960 நட்ட ஈடு


கொழும்பு,பெப்.9

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற முதலாவது வாகன விபத்துச் சம்பவத்தின்போது வீதியின் இரும்பு வேலி சேதமாக்கப்பட்டமைக்கு நட்ட ஈடாக 5 லட்சத்து 34 ஆயிரத்து 960 ரூபாவினை செலுத்துமாறு விபத்துக்குள்ளான சாரதிக்கு கெஸ்பாவ நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தச் சாரதி தனது வாகனத்தை அதி வேகத்தில் செலுத்தியமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக நிரூபிக்கப்பட்ட நிலையிலேயே அவருக்கு இந்தத் தொகையை தண்டப் பணமாக செலுத்துமாறு கெஸ்பாவ நீதிவான் சமத் மதநாயக்கா தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி கஹதுடுவ, 8ஆவது மைல் கல்லுக்கு அருகில் வைத்து இந்த வாகன விபத்து இடம் பெற்றது. விபத்துக்கு காரணமாக காலி, போத்தல பிரதேசத்தைச் சேர்ந்த சாரதிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஜனாதிபதி மாறினாலும் உறவில் மாற்றமில்லை



கொழும்பு,பெப்.9

*மாலைதீவு ஜனாதிபதி பதவி விலகியமை அதன் உள்நாட்டுப் பிரச்சினை என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.*

*மொஹமட் நசீட் பதவி விலகியமையால் இலங்கை - மாலைத்தீவு உறவில் எதுவித விரிசலும் ஏற்படாது என்று இலங்கை அரசு குறிப்பிட்டுள்ளது.*

*மொஹமட் நசீட் இலங்கை ஜனாதிபதியுடன் மிகவும் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தார் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.*

*இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு விடயத்தில் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நசீட் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.* (ச)

# இவர்களுக்கும் தண்டனை

வீதியைக் கடக்கும்போது கையடக்கத் தொலைபேசிகளில் கதைத்துக்கொண்டு செல்வோருக்கு அபராதம் விதிக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வீதி ஒழுங்குகளைப் பேணும்வகையில் புதிய பல சட்டங்களையும் கொண்டு வர தமது திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# புலி முத்திரைக்கு கடும் கண்டனம்

கொழும்பு,பெப்.9

நோர்வேயில் விடுதலைப் புலிகளின் சின்னங்களுடன் அஞ்சல் தலை வெளியான விவகாரம் தொடர்பாக இலங்கை அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்துடன் தொடர்பு கொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ஒஸ்லோவில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் இந்த அஞ்சல் தலைகளை தடைசெய்வது தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சுடனும் அந்த நாட்டின் அஞ்சல், தொலைத் தொடர்புத் துறையுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

ஏற்கனவே பல ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகளின் சின்னங்களுடன் அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டபோது, இலங்கை அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், நோர்வே இதற்கு அனுமதி வழங்கியது குறித்து இலங்கை அரசு தனது சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. (ச)

# அதிகாரிகள் வருகையால் அழுத்தமில்லை: அரசு

கொழும்பு,பெப்.9

அமெரிக்காவின் உயர் ராஜதந்திரிகள் இலங்கைக்கு வருகின்றபோது அவர்களால் எவ்வித அழுத்தங்களும் இல்லை என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய நிலைவரங்களை அறிந்துகொள்ளவே அமெரிக்கா அதிகாரிகள் நாட்டுக்கு வருகை தரவுள்ளனர். அது அவர்களின் நடைமுறைகளில் ஒன்றாகவே உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்தநிலையில் அமெரிக்க அதிகாரிகளின் பயணங்கள், இலங்கையின் நடைமுறைக் கொள்கைகளுக்கு வலுச் சேர்ப்பதாகவே அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை பல்வேறு சக்திகள் இலங்கை ஜனாதிபதிக்கு பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

# தேசத்தின் மகுடத்தைப் பார்வையிட்ட இளைஞன் சாவு

கொழும்பு,பெப்.9

அநுராதபுரத்தில் இடம் பெறும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி வளாகத்தில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்காட்சியைப் பார்வையிட வருகை தந்திருந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த இளைஞரே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

கண்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த இந்த இளைஞர் மீது மின் கடத்தியொன்று விழுந்து இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நாளை 10 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சி, எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மாடுகளைக் கொண்டு சென்றோர் கைது

**மாடுகளை லொறியில் ஏற்றிச் சென்றவேளை, இவர்கள் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

கொழும்பு,பெப்.9

அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை ஏற்றிச்சென்ற சந்தேகநபர்கள் ஐவர் கஹவத்தை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

5 மாடுகளை லொறியில் ஏற்றிச் சென்றவேளை, இவர்கள் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்கென இவர்கள் கஹவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கந்தானை, தனமல்வில, வத்தளை, வெலிசர மற்றும் செவனகல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# தீ விபத்தில் இருவர் சாவு

கொழும்பு,பெப்.9

வெள்ளவத்தை, 37ஆம் குறுக்கு மாடி வீட்டுத் திட்டத்தில் அமைந்துள்ள 4 ஆம் மாடியில்நேற்று புதன் கிழமை அதிகாலையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தி னால் இருவர் உயிரிழந் துள்ளனர்.

தீ விபத்தில் தந்தை மற்றும் மகள் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில், களுபோவல மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணங்கள் இதுவரை அறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திருமதி கமலராணி தனபாலசிங்கம்



யாழ்ப்பாண கல்வி வலயத்தில் சங்கீத பாடசேவைக்கால ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி (2012.02.01) இல் அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற திருமதி கமலராணி தனபாலசிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழவேண்டும் என கற்பகப்பிள்ளையாரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை (14278)(6-7-8)

இசையாசிரியர்கள்.
திருமதி க.சிவகுமார்,
திருமதி க.சிவானந்தம்.

## இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபை தெரிவிற்கான தேர்தல் அறிவித்தல்

மேற்படி ஆலயத்தில் தர்மகர்த்தா சபையின் ஆறு உறுப்பினர்களுக்கான தெரிவும், குழந்தையர் வேலாயுதர் சந்ததி ஆண் உறுப்பினர் ஒருவருக்கான தெரிவும், பெண் வழி உறுப்பினர் ஒருவருக்கான தெரிவும் பரம்பரை பூசகர் வழியில் ஒருவருக்கான தெரிவும்(11.02.2012) சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் ஆலய மண்டபத்தில் கௌரவ யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியின் தலைமையில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.


மன்றின் கட்டளைப்படி
செ.செல்வநாயகம்
பதிவாளருக்காக தேர்தல் பொறுப்பு உத்தியோகத்தர்

(14279)(6-7-8)

## கோலாகல திறப்புவிழா

### பாலா வாகன சுத்திகரிப்பு நிலையம்

கொடிகாம வீதி, மந்திகை, புலோலியில்




இன்று [09-02-2012] வியாழக்கிழமை காலை 7-8.30 மணிவரையான சுபவேளையில்.

திரு. முரளிதரன்
[முகாமையாளர், H.N.B நெல்லியடி]

அவர்களால் திறந்து வைக்கப்படுகிறது.

வடமராட்சியில் முதன்முதலாக மூன்று வாகனங்கள் ஒரே நேரத்தில் சுத்திகரிக்கும் நிலையம் திறப்பதனையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன் அந் நிலையம் உயர்ச்சியடைய வாழ்த்துகின்றோம்.

உரிமையாளர்:
திரு. சு.பாலச்சந்திரன்.
077-6192927,
021-2262847.

வாழ்த்துவோர்
சி. ஜெகதீஸ்வரன்,
நாகர்கோயில்.

(C\8867) (6.7.10)




## மெய்வன்மைப் போட்டிகள்

சுழிபுரம்,பெப்.9

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் ச.கணேச தாசன் தலைமையில் நடை பெறவுள்ளது. பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்குப் பிரதேசசெயலர் ஆ.சோதிநாதன் கலந்துகொள்வார். (வ-28)

***

தென்மராட்சி, பெப்.9

கச்சாய் அ.த.க.பாட சாலை இல்ல மெய்வன் மைப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் க.உதய குமாரன் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தராசாவும், சிறப்பு விருந்தின ராக பாடசாலை யின் முன்னாள் அதிபரும் தற்போதைய வரணி மகா வித்தியாலய அதிபருமாகிய க.மங்களேஸ்வரனும் கலந்து கொள்வார்கள். (வ-92)

சுன்னாகம்,பெப்.9

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவர் சங்க இணைப்பாளர் செ.சிறீகாந்தனும், சிறப்பு விருந்தினராக அளவெட்டி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி டபிள்யு.ஜீ.சுசந்தவும், கௌரவ விருந்தினராக பழயைமாணவர்சங்க கொழும்புக் கிளை உப தலைவர் செ.செல்வநேசனும் கலந்து கொள்வர். (38)

***

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல்லூரியின் விளையாட்டு மைதானத் தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி கமலவேணி விஜயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லண்டனில் வசிக்கும் மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் குழந்தைவேல் நித்தியானந்தன், திருமதி இந்திராணி நித்தியாந்தன் ஆகியோர் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய உடல்கல்விப் பயிற்சி ஆசிரிய ஆலோசகர் வ.செந்தூரன், உரும்பிராய் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சண் முகம் ஏகாம்பரநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (38)

***

நாவற்குழி, பெப். 9

நாவற்குழி மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திருமதி வி.மேகலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் கு.பிரேமகாந்தன் கலந்துகொள்வார். (வ-9)

## கலந்துரையாடல்

பருத்தித்துறை கோட்ட மட்ட மெய் வன்மைப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் போட்டி சம்பந்த மான குழுவும் தெரிவு செய்யப்படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவரை கலந்துரையாடலுக்கு அனுப்பி வைக்குமாறு பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் இரகுநாதன் அறிவித்துள்ளார். (வ-90)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### வலன்ரைன் ஜெயஅனிதா

(கிளி/வட்டக்கச்சி ம.வி.மாணவியும்,
கோவில்குளம் இந்துக்கல்லூரி
பழைய மாணவியும்,
கிளி/ வட்டக்கச்சி ம.வி.ஆசிரியையும்)

மண்ணுலகில்: 03-05-1988
விண்ணுலகில்: 09.02.2009

எனது சுமைகளை
உன்னுள் சுகமாக்கும்போது
தாயாக எனதருகில் இருந்தாய்
கடற்கரையில் காதலர்
கால் தடம் பார்க்கும்போது
காதலியாக எனதருகில் இருந்தாய்
உனது பெண்மைக்கு அடையாளமாக
ஆண் குழந்தை தந்து
தாயாக இருந்தாய்
உலகம் உன்னைப் புகழ
வேண்டும் என்று எண்ணும்போது
ஆசிரியையாக இருந்தாய்
குடும்பத்தில் குலவிளக்காய்
நீ இருக்க வேண்டுமென எண்ணும்போது
மனைவியாய் எனதருகில் இருந்தாய்
எனது ஆசைகளை நிறைவேற்றிவிட்டு
நீ சென்று விட்டாய்
எனது குழந்தையின் ஆசைகளை
தாயாக நிறைவேற்ற நீ இல்லையே.

கணவன், மகன் தமிழ்க்கீரன்.
இல. 06, சிவிக்சென்றர்,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

(11087)(6-8-7)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி சிவகாமிப்பிள்ளை



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகாமிப்பிள்ளை இளையதம்பி 05.02. 2012 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான ஆறுமுகம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சபாபதி இளைய தம்பியின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சபாபதிப்பிள்ளை-பொன்னாச்சன் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி, கனகம்மா, நடராசா, செல்லையா மற்றும் இராசம்மா, பொன்னம்மா, சோமசுந்தரம் ஆகி யோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இரத்தின சபாபதி மற்றும் பொன்மலர், சபாகுணசிங்கம், புஸ்பராணி (ஆசிரியை, தெல்லிப்பழை-யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், நடேசன், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியும், பிரபா, கோமதி, வசீகரன், தயாபரன், செந்தூரி ஆகியோரின் பேர்த்தியும், சிவானி, லெஷானி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (09.02.2012) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
சபாகுணசிங்கம் (குலம்) மகன்,
பொன்மலர் (மகள்),
புஸ்பராணி இளையதம்பி (மகள்)

(14206) (6,7,10)

### தம்பிராஜா தியாகராஜா



மலேசியா, போனியாவைப் பிறப்பிடமாகவும் ஆலங்குளாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை வீமன்காமம் ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் தற்போது லண்டன் Liverpool ஐ வதிவிடமாகவும் கொண்ட தம் பிராஜா தியாகராஜா கடந்த (03.02.2012) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சர்வேஸ்வரியின் அன்புக் கண வரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி (V.T.K), விமலாதேவி மற்றும் மகேஸ்வரி, புஸ்பலீலாவதி, தர்மலிங்கம், யோகராஜா, ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமித்தா, சுபாஜினி, சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரகாஷ், கிரி தரன், ஆரூரன் ஆகியோரின்அன்பு மாமனும் அபிலக்ஷன், நிலக்ஷி, நிரோஜன், தனுஷன் ஆகியோரின் அன்புப் பேர னும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2012) வியாழக்கிழமை லண்டனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் லண்டனில் உள்ள Liver pool இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
பிரகாஷ்- பிரித்தானியா.
தொலைபேசி:- +0441516389576
செல்லிடப் பேசி:- +447949039347
ரஞ்சன்- பிரித்தானியா.
செல்லிடபேசி:- +447884364097

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணத்தில் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும். ஏனைய நான்கு மாவட்டங்களிலும் கடும் காற்று வீசலாம்.

# வடமாகாணத்துக்கு 40 ஆய்வுகூடங்கள்

வடமாகாணத்தின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு 40 புதிய மருத்துவ ஆய்வு கூடங்களையும் 2 பிராந்திய பயிற்சி நிலையங்களையும் 5ஆண்டுகள் இலக்காக வைத்து அமைப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக சர்வதேச நிதியம் 2 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளது. சுகாதாரத்துறையை மேம்படுத்தும் நோக்குடன் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு வரை கடந்த வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.**

இதற்கமைவாக 20 புதிய வெளிநோயாளர் பிரிவுகளையும் 10 சுகாதார அலுவலகங்களையும் 40 புதிய மருத்துவ ஆய்வுகூடங்களையும் இரண்டு பிராந்திய பயிற்சி நிலையங்களையும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.


மக்களின் சிறந்த சுகாதார சேவையை மேம்படுத்தும் நோக்குடன் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளன என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-14)

# வீடு பேறினை எவ்வாறு அடையலாம்?

வீடுபேறினை அடைய அல்லது ஆத்மாவை உணர்ந்து கொள்வதற்கு 'நான்' என்கின்ற ஆணவம் அல்லது அகங்காரத்தை அகற்றிவிடவேண்டும்.

மனிதனது அகங்காரம் புத்தியை மறைக்கின்றது. மறைத்து 'தான்' என்றதை-அல்லது ஆத்மாவை- உடம்புடன் பூரணமாக ஒருமைப்பாடுகொள்ள வைக்கிறது. (இனங்காணுதல்) எனவே 'நான்' அல்லது அகங்காரம் விலகிவிட்டால் தன்னை உடம்புடன் பூரணமாக ஒருமைப்பாடு கொள்ளுதல் விலகிவிடும். அப்போது வீடுபேற்றை அடையலாம்.



சாயி சிந்தனை

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு நிரந்தரப் பொலிஸ் பிரிவு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிரந்தர பொலிஸ் பிரிவு அலுவலகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வருகைதந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கேட்டுக்கொண்டதையடுத்து ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர பொலிஸ் பிரிவு அலுவலகம் திறக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் நிர்வாகத்தில் 24 மணி நேரமும் செயற்படக்கூடிய பொலிஸ் பிரிவில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலைக்கு வரும் குற்றவியல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் இந்தப் பொலிஸ் பிரிவினரால் உடனுக்குடன் கையாளப்படவுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அடுத்ததாக யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் நிரந்தர பொலிஸ் பிரிவுக்கான அலுவலகம் சாவகச்சேரி வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ந-207)

# வடக்கிலிருந்து படைகள் வெளியேறட்டும்: நாம் இலங்கையர்

யாழ்ப்பாணம், பெப்.9

வடக்கில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதுடன் வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. எனவே வடக்கில் இருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும் என நாம் இலங்கையர் அமைப்பில் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் உத்துல் பிரேமரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் யாழ். மாவட்டத்தில்ஆறு படுகொலைச் சம்பவங்களும், இரண்டு தற்கொலைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ள அவர் இத்தகைய சம்பவங்கள் இராணுவம் இருக்கும் இடங்களிலேயே இடம்பெற்றுள்ளன என்றார்.

பெருமளவு இராணுவத்தினர் வடக்கில் குவிக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

எனவே இராணுவத்தினர் அங்கிருந்து உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-14)

# வடமராட்சி கல்வி வலயத்தில் பண்டிகை முற்பணம் வழங்கல்

வடமராட்சிக் கல்வி வலயத்தில் இந்த வருடத்துக்கான பண்டிகை முற்பணத்தைப் பெறவிரும்பும் அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்களிடமிருந்து விண்ணப்பத்தை பாடசாலை ரீதியாக வடமராட்சி கல்வி அலுவலக நிதிக்கிளை கோரியுள்ளது.

பண்டிகை முற்பணத்தைப் பெற விரும்புபவர்களின் விவரம் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக நிதிக் கிளையில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. ஆசிரிய உதவியாளர்களுக்கு பண்டிகை முற்பணம் வழங்கப்படமாட்டா என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-190)

## நீங்காத நினைவுகளுடன்...

தோற்றம் - 01-05-1918 மறைவு - 04-11-2004



யாழ்ப்பாணம் கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
**இளையதம்பி இராசதுரை**

அன்னை மடியில் 14-03-1925 இறைவன் அடியில் 21-01-2011



இருபாலை சின்னக்கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி **இராசதுரை செல்லம்மா**

### அன்னையின் முதலாம் ஆண்டில்

கண்ணியமும் நற்குணமும் பெற்றவராய் இப்பூமியிலே
நல்ல புண்ணியம் செய்திருந்தாய்
கண்ணிமைக்கும் மாலையிலே வந்தானே காலன்
உன்னைக் கொண்டு செல்ல
அருமையான சித்திரத்தை ஆண்டவனும் அறிந்திடாமல்
அழைத்ததென்ன கொடுமையம்மா?
புரிந்திடாரே அவர்க்கும் தீமை - அவர்கே
இக்கொடுமையம்மா
விண்ணிலே நீ இறைவனுடன் சேர்ந்து விட்டாய்
எம்மை விழி நீரோடென்நாளும் நிலைக்கவிட்டாய்

*ஓம் சாந்தி!*

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
லலிதாம்பிகை லோகசிங்கம் (மகள்),
செல்விகள் அபிராமி, வைஸ்ணவி (பேரர்கள்).

ஜேர்மனி/
முரசுமோட்டை.

(6,7,10)

## முதல் வருட நினைவேந்தல் பத்தாம் ஆண்டின் நினைவுகூரல்



**மகேந்திரன் அன்ரன் லோகர்சன்**



**சோபியா ஜொய்சி மகேந்திரன்**

13.06.1977 பிறப்பு 01.10.1982
09.02.2011 இறப்பு 25.12.2002

இன்றும் எம்மால் நம்பமுடியவில்லை - நீங்கள்
சற்றே விலகியிருப்பதைப் போன்ற உணர்வுதான்
உங்கள் நினைவுகளை தாங்கி வாழுகின்றோம்
கண்ணீர் பூக்களையே காணிக்கையாக்குகின்றோம்

அன்னாரின் இறப்பின் முதல் வருட நினைவேந்தல் சிறப்புவழிபாடு தூய, யோவான் ஆலயம், சுண்டுக்குளியில் இன்று (09.02.2012) வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும். தயவுசெய்து இதையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

148, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி.

திரு.திருமதி சின்னத்தம்பி மகேந்திரன் (பெற்றோர்),
திருமதி சசி பமிலா அரியரட்ணம் (சகோதரி),
அருட் திரு.ம.யூட் சுதர்சன் (சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நேரம் காலம் பார்க்காமல், தொழிலில் அக்கறையோடு செயற்படுவீர்கள். உறவினர்கள் சிலர் மனம் உவந்து உங்களைப் பாராட்டுவர். இழுத்தடிக்கலாம் என்று நினைத்த வேலை ஒன்று, சுலபமாக முடியலாம். பெண்கள் சிலர் வழியில் சிறு உதவிகள் கிடைக்கலாம். அரசியல்வாதிகள் மகிழ்ச்சி, உற்சாகமாக காணப்படுவர். வாக்குத் தவறலாம்.

**இடபம்:** கடும் முயற்சிக்குப் பின்னர், சில காரியங்கள் முடிவுக்கு வரும். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களின் உதவிகள் நாடி வரலாம். மாமன், மைத்துனர்களின் அன்புத்தொல்லைகளைச் சந்திக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்வதற்காக முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். வீண் பிடிவாதங்களைத் தவிர்க்கவும். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** உறவினர்கள் தொடர்பான விவகாரங்களில் தலையிட்டு விட்டு மண்டைகுடைச்சலை சந்திக்கலாம். உத்தியோகத்தர்கள், மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறலாம். சக ஊழியர்கள் சிலர், உங்களிடம் யோசனை கேட்டு செயற்படலாம். இரண்டு நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று, மாலை நேரத்தில் வரலாம். ஊக்கம், உற்சாகம் கூடும்.

**கடகம்:** உங்களுக்காக அல்லது மற்றவர்களுக்காக ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். சிறிய பிரச்சினைகளுக்காக பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள். சிலரை விமர்சனம் செய்து அல்லது பரிகாசம் செய்வதன் மூலம், பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

**சிங்கம்:** பிறரை நம்பி மற்றவர்களுக்கு வாக்குக் கொடுக்க வேண்டாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களை தொலைபேசியில் தொடர்பு கொள்வதால் பதற்றம் அடையலாம். கடிதங்கள் மூலம் முக்கியமான செய்திகள் வரலாம். நினைத்தது நடப்பதன் மூலம், மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும் நாள். எதிர்பாராத பணவரவுகளுக்கு வாய்ப்புகள் உண்டு.

**கன்னி:** உறவினர்கள் வீட்டு சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேரிடலாம். யாரைச் சந்திக்க வேண்டும் என நினைத்தீர்களோ, அவர்களை எதிர்பாராமல் சந்திக்கலாம். காலையில் வந்த பணவரவு ஒன்றுக்கு, மாலையில் செலவு ஏற்படலாம். நீங்கள் சில தவறுகளைச் செய்து விட்டு, அது தெரியாமல் குடும்ப உறுப்பினர்களிடம் சண்டை போடலாம்.

**துலாம்:** உங்களின் பெருமையான செயல் ஒன்றை, மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கும் வாய்ப்பு உருவாகும். யாராவது உங்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். நண்பர்கள் சிலர், உங்களுக்கு அவசர உதவி செய்யலாம். சக ஊழியர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**விருச்சிகம்:** சோர்வின்றி சுறுசுறுப்பாகச் செயற்பட்டு, உங்களின் திறமையை வெளிக்காட்டுவீர்கள். சக ஊழியர்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிட்டும். தம்பதியர் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி, பாசம் அதிகரிக்கும். பெண்கள் உடல் நலக்குறைவுகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவர். தொழில் ரீதியான பணவரவு உண்டு.

**தனுசு:** மலைபோல் நம்பிய ஒருவர் உங்களை கைவிடலாம். சுயதொழில் புரிவோர், கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். பெண்கள் பிறந்த வீட்டு விவகாரங்களில், அக்கறை காட்ட நேரிடலாம். மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், சில வேலைகளைச் செய்வீர்கள். பிள்ளைகள் வழியில், மருத்துவ செலவுகளைச் சந்திக்கலாம்.

**மகரம்:** என்னதான் பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும், ஏதாவது ஒரு வழியில் சிலர் குறை சொல்வர். மற்றவர்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். சபலங்களுக்கு ஆள்படாமல் இருப்பது நல்லது. சக ஊழியர்கள் எடுக்கும் திடீர் விடுமுறையால், கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். பயணத் தடைகள் நேரும்.

**கும்பம்:** அவசரமாக முடிக்க வேண்டிய வேலைக்காக, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலையலாம். உறவினர்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களைப் பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிட்டும். விருந்தினர்கள் வருகையால், வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும்.

**மீனம்:** நண்பர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். சில வேலைகளை நேரத்துக்குச் செய்ய முடியாமல், காலதாமதமாகச் செய்யலாம். தந்தை வழியில், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் திடீர் பயணங்கள் செல்லும் வாய்ப்பு உருவாகும். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். ஆதாயகரமான நாள்.

**நாளை**

தை 27 வெள்ளிக்கிழமை 10.02.2012
திதி: திருதியை பி.இ. 11.46 வரை
நட்சத்திரம்: பூரம் பி.ப. 12.19 வரை
சுபநேரம்: 06.34 - 08.04 வரை,
ராகு காலம்: 11.04- 12.34 வரை

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 6 | | 2 | | | | |
| 9 | | 5 | | 6 | 4 | | 8 | |
| | | | 9 | | 3 | | | 6 |
| | 9 | | | | 6 | 8 | | 4 |
| 6 | 8 | | 4 | | 7 | | 1 | 9 |
| 1 | | 7 | 5 | | | | 2 | |
| 8 | | | 3 | | 2 | | | |
| | 2 | | 6 | 7 | | 4 | | 5 |
| | | | | 4 | | 2 | | 8 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 5 | 8 | 9 | 1 | 2 | 6 | 7 |
| 1 | 6 | 7 | 3 | 2 | 5 | 9 | 8 | 4 |
| 8 | 9 | 2 | 7 | 6 | 4 | 5 | 1 | 3 |
| 6 | 5 | 4 | 2 | 1 | 7 | 3 | 9 | 8 |
| 9 | 8 | 1 | 5 | 4 | 3 | 6 | 7 | 2 |
| 2 | 7 | 3 | 6 | 8 | 9 | 1 | 4 | 5 |
| 3 | 2 | 9 | 1 | 7 | 8 | 4 | 5 | 6 |
| 7 | 1 | 6 | 4 | 5 | 2 | 8 | 3 | 9 |
| 5 | 4 | 8 | 9 | 3 | 6 | 7 | 2 | 1 |


**யா/மகாஜனாக் கல்லூரி**
**தெல்லிப்பழை**
**வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி - 2012**

**கனிஷ்ட பிரிவு**

தலைவர் : - திரு.கு. வேல்சிவானந்தன் (அதிபர்)
இடம் : - கல்லூரி மைதானம்
காலம் : - 10.02.2012 பிற்பகல் 1.30 மணி

**பிரதம விருந்தினர்**
திரு. இரா. மருதயினார்
குழந்தை வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

**சிறப்பு விருந்தினர்**
திருமதி கோசலை குலபாலசிங்கம்
ஆசிரிய ஆலோசகர் உடற்கல்வி,
வலிகாம வலயம், மருதனார்மடம்.

**சிரேஷ்ட பிரிவு**

தலைவர் :- திரு.கு.வேல்சிவானந்தன் (அதிபர்)
இடம் :- கல்லூரி மைதானம்
காலம் :- 11.02.2012 பிற்பகல் 1மணி

**பிரதம விருந்தினர்**
திரு. மார்க்கண்டு இராமதாசன்
B.Sc. (Eng) Hons, Managing Director,
Euroville Engineers and
Constructors (PVT) LTD.

**சிறப்பு விருந்தினர்**
திரு. சற்குணானந்தன் கைலாசநாதன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
தெல்லிப்பழைக் கோட்டம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை மேம்பாட்டுக்குழு,
(சி/8844) 45-6-7) நலன்விரும்பிகள்.

**கடை விற்பனைக்குண்டு**
யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் No. 328, New No. 414, 1½ பரப்புக் காணியும் கடையும் விற்பனைக்குண்டு.
(14175)(6-7-8) தொடர்பு : 077 7498920

**விற்பனைக்கு**
58 - xxxx என்ற இலக்கமுடைய ஹயஸ் வான் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 2373419

**பிறீமா நம்ப 01கோழிக் குஞ்சு**
பிறீமா முட்டைக் குஞ்சு (வெள்ளை, சிவப்பு) இறைச்சிக் கோழிக் குஞ்சு. ஒரு குஞ்சு 100/= ஓடர்களை முன் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இல:
077 9337287 / 077 4164734

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பம், மாநிறம் 5'8'' உயரம், கனடாவில் கம்பியூட்டர் Engineer ஆகப் பணிபுரியும், தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள 36 வயதுடைய மணமகனுக்கு, படித்த அழகான 30 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.
தொடர்பு : 0771286724, 0212221450

**வாடகைக்கு**
திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் 72/9, பணிக்கர் ஒழுங்கையில் 4 அறைகள் உள்ள சகல வசதிகளுடைய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், காரியாலயங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 021 222 3086, 077 9695818

**சாரதி தேவை**
Tipper வாகனம் ஓடக்கூடிய சாரதி தேவை. உடன்தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு : 077 9589718
(14268)(6-7-8)

**தேவை**
கொழும்பில் வீடு ஒன்றுக்கு சமைக்கத் தெரிந்த பெண்கள் தேவை. அத்துடன் தாதியர் வேலை தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.
077- 4320362 (C/4267)(6-7-8)


**கண்ணீர் அஞ்சலி**



**இராசேந்திரம் கார்த்திக்**
(யாழ். செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழக உறுப்பினர்)

சங்கானை, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக்கழக உறுப் பினர் இராசேந்திரம் கார்த்திக் அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், கவலையும் அடைந்துள்ளோம்.

அன்னாருக்கு எமது கழகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தாருக்கும் எமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி !!!

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு
நிறுவன விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.
(14172)(45-)


**Vacancies**

புதிதாக நல்லூரில் ஆரம்பிக்கப்படவிருக்கும் கணனி மற்றும் ஆங்கில கல்வி நிலையத்திற்கு கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Course Counselor - Female
- Customer Relation Officer - Female
- Computer Instuctor - Male / Female
- English Language Lecturer - Male / Female
- Multimedia & Tally Lecturer - Male / Female
- C, C++, Java Lecturer - Male / Female

நேரடியாக, தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

**ASIAN COMPUTER EDUCATION**
#2G, Stanley Road, Jaffna.
e-mail : asianedu@dialogsl.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூறையாடப்படும் இயற்கை வளங்கள்

**பூநகரி, முட்கொம்பன், கண்ணகைபுரம், வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர் போன்ற பிரதேசங்களில் சட்டவிரோதமாக பெறுமதி வாய்ந்த அரிய காட்டு மரங்கள் பலகை மற்றும் விறகுத் தேவைகளுக்காக அதிகாரிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தித் தறிக்கப்படுகிறன.**

யாழ்ப்பாணம், பெப்.9

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவு இயற்கை வளங்கள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களாலும் பொதுமக்களாலும் சூறையாடப்பட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.


கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் எந்தளவுக்கு மேற்கொள்ளப்படுகின்றதோ அந்தளவுக்குப் பிரதேச வளங்களும் சூறையாடப்பட்டு வருகின்றன.

குறிப்பாக பூநகரி, முட்கொம்பன், கண்ணகைபுரம், வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர் போன்ற பிரதேசங்களில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடவடிக்கைகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

இவை குறிப்பாக காட்டுப் புறங்களிலும் வாய்க்கால், சிறுகுளங்கள் போன்ற இடங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, ஜெயபுரம், வன்னேரிக்குளம், முழங்காவில், ஆனைவிழுந்தான் போன்ற இடங்களில் பெறுமதி வாய்ந்த அரிய காட்டு மரங்கள் பலகை மற்றும் விறகுத் தேவைகளுக்காக அதிகாரிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி தறிக்கப்படுகின்றன என பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (எ-14)

# கவிதை தொகுதி வெளியீடு



யாழ்ப்பாணம், பெப்.9

ஆழியூர்-ரதிசனின் ''ஒரு நெஞ்சத்தின் நெருடல்கள்'' என்னும் கவிதைத் தொகுப்பு வெளியீடு கடந்த திங்கட்கிழமை யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியின் பீற்றோ மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் அருட்பணி என்.ஜே.ஞானப்பொன்ராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கவிதை நூல் வெளியீட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வு ஹிமாலயா நடனப்பள்ளி மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமானது.

நிகழ்வின் ஆசியுரையை இலங்கைத் திருச்சபை யாழ். குருமுதல்வர் அருட்பணி ஜெயந்ஜெய வீரசிங்கனும், நூலின் நயப்புரையை பருத்தித்துறை உதவி அரச அதிபர் த.ஜெயசீலனும், பிரதம விருந்தினர் உரையை வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து ''ஒரு நெஞ்சத்தின் நெருடல்கள்'' கவிதைத் தொகுப்பு நூலை வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டுவைக்க முதல் பிரதியை இலங்கைத் திருச்சபை யாழ்.குருமுதல்வர் அருட்பணி ஜெயந்ஜெய வீரசிங்கன் பெற்றுக் கொண்டார்.

இந்த நூல் ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்து வெளியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் பாடசாலை அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொண்டார். (ந-14)

# பண்ணாகம் வீதிகளுக்கு மின்குமிழ்கள்

சுழிபுரம், பெப்.9

பண்ணாகம் ஆண்கள் கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்கத்தினர் பண்ணாகம் கிராம பிரதான வீதியிலுள்ள சந்திக்கு அண்மையில் மின்குமிழ்களைப் பொருத்தியுள்ளனர். பிரதானமான 14 இடங்களுக்கு பிரதேச சபையினர் மூலமாக இந்தப்பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. மின் இணைப்பு உபகரணங்கள் அனைத்தும் வெளிநாட்டில் வாழும் திரு.ஆ.கணேசலிங்கம் வழங்கிய நிதி உதவியில் வழங்கப்பட்டவை.

கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு திரு.ஆ.கணேசலிங்கம் காலத்துக்கு காலம் நிதி வழங்கி உதவுவது குறிப்பிடத்தக்கது. (ந-8)

# சாதாரண தர அழகியல் பாட மாணவருக்கு செயல் முறைத்தேர்வு

பருத்தித்துறை, பெப்.9

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் அழகியற் பாடங்களுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் மார்ச் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை நடைபெறவுள்ளது எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் ஆகிய அழகியற் பாடங்களின் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கே இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட அழகியற் பாடங்களின் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் இறுதிப் பெறுபேற்றைத் தீர்மானிப்பதற்கு செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றியிருப்பது கட்டாயமாகும்.

எனவே டிசெம்பர் மாதம் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களையும் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்ற நடவடிக்கை எடுக்குமாறு பரீட்சைத் திணைக்களம் அதிபர்களைக் கோரியுள்ளது.

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பாடசாலைகளுக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படவுள்ளன. (ந-190)

## சொற்பொழிவு

தொண்டமானாறு, பெப்.9

வடமராட்சி, தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''தீநெறி'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும். சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் இந்தச் சொற்பொழிவை பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா நிகழ்த்துவார். (ந-8)

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Care
Hair and Pimple Clinic
முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு

எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.
வவுனியாவில் 12,13 ஆம் திகதியில்.... முன்பதிவுகளுக்கு - 021 - 4923416
V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 2220288.

# கடும் குளிரால் இலங்கையர் மரணம்

இத்தாலியின் கடும் குளிரில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வர்ணகுல பெர்ணாண்டோ (வயது 37) என்பவரே அவ்வாறு உயிரிழந்தவர்.

நெதர்லாந்தில் இருந்து குடும்பத்துடன் சட்டவிரோதமாக இத்தாலியில் குடியேறியவர்.

இத்தாலியில் இவரது சகோதரர் ஒருவர் காணமல் போய் உள்ளார் என்றும் அவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கே இவரும் குடும்பத்தினரும் வந்திருந்தனர் என்றும் தெரிய வருகின்றது.

Tuscany என்கிற இடத்தில் இருந்து இவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. (ந)

## மூன்றாம் ஆண்டு நினைவுப் பகிர்வு



பிறப்பு 1972-12-19

இறப்பு 2009-02-09

அமரர்

**கலக் சண்முகநாதன் சசிசராஜ்**

ஆசிரிய நண்பா!
சாவுண்டு மூன்று கடந்ததையா
ஆறுதல் கூற யாருமில்லை
எமது கல்விக் கூடத்தில்
நீ செய்த பணி
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
மற(று)க்க முடியாதையா

அன்னாரின் 3ஆம் ஆண்டு நினைவு நாளில் நினைவு கூருகின்றோம்.

நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஐடியல் கல்வி நிலையம்,
கனகாம்பிகைகுளம், கிளிநொச்சி.
(11029)(6,7,10)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 ★ 01 ★ 1968



உதிர்வு 11 ★ 02 ★ 2009

திருமதி **சாந்தி கதிரவேற்பிள்ளை**

ஆண்டுகள் மறைந்தாலும்
அன்பான உன்முகம்
மீண்டும் மீண்டும் வந்து எம்மை
மிகவும் வருத்துதம்மா

குடும்பத்தினர்

சோலை,
பல்லவராயன்கட்டு.

(11030) (6-7-45)

ஜெயந்தி தனபாலசிங்கம்,
அதிபர், புனித பெண்கள்
திரேசா கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி



மாதகலைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட

**இராசேந்திரம் கார்த்திக்**

அன்னாரின் மரணத்தைக் கேள்வியுற்று நாம் ஆற்றொணாக் கவலை கொள்கின்றோம். எமது செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் (Rood) உறுப்பினரும் எமது Rood வளர்ச்சிக்காக அயராது உழைத்தவருமான இவர் மறைவையொட்டி எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
[illegible]
செவிப்புலன் புனர்வாழ்வு நிறுவனம்.

26/4, [illegible],
சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**இராசரத்தினம் புஸ்பராசா (வசந்தன்)**

மண்ணுலகில்: 13-04-1978

விண்ணுலகில்: 09.02.2007

திதி: அபரபக்க ஸப்தமி

புன்னகை பூத்த திருவதனம்
தன்னலமே இல்லாத சேவையுள்ளம்
எண்ணாத நேரத்தில் இடைநடுவில்
எமைப் பிரிந்து இறைவனடி சேர்ந்தாயே!
ஐந்தாண்டல்ல, ஐயாயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
எம்மில் நீ என்றும் வாழ்வாய்
ஓம் சாந்தி! சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உன் நினைவில்:
சி.இராசரத்தினம் (தந்தை)
குடும்பத்தினர்.

மட்டுவில் வடக்கு,
வைத்தியசாலை வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது மொபிற்றல் வழங்கும் அதிரடி சலுகை
7.2 வேகம் HUAWEI MULTI DONGLE
Rs. 2490/= மட்டுமே
நீங்கள் வாங்கும் Mobital Dongle உடன்
மொபிற்றலின் அதிவேக Data Sim இலவசம்!!!
மாதாந்த விசேட பொதிகள்
475/= or 590/= or 890/= or 1290/=




திருமுருகன் கொம் நெற
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 222 7835
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
நிபந்தனைக்குட்பட்டது.

# மரண அறிவித்தல்

## தம்பிஐயா செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - புகையிரத திணைக்களம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கைதடி வடக்கையும், கொக்குவில் கிழக்கையும் வசிப்பிடமாகக் கொண்ட தம்பிஐயா செல்வரத்தினம் நேற்று (8.02.2012) புதன்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரட்ணம்-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசமணி, இராசரத்தினம், கனகரத்தினம், இலட்சுமி அம்மாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தையல்நாயகி, கமலநாயகி, காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் சகோதேவன் ஆகியோரின் மைத்துனரும், ரதிகா, ரேணுகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற விஜயவர்மனின் (Expo வீடியோ உரிமையாளர்) அன்பு மாமனும், லருஷனின் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்) பேரனுமாவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2012) வியாழக் கிழமை கொக்குவில் கிழக்கு குளப்பிட்டி லேனில் உள்ள அவரின் இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(14210) (6,7,45)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு சுயதொழில் பொருள்கள்

தென்மராட்சி, பெப்.9

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி மகா சங்கத்தினர் சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டம் -2011 இன் கீழ், சுயதொழில் உதவி கோரிய மேலும் 342 சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிப் பொருள்களை வழங்கி வருகின்றனர்.

இதன்படி அண்மையில் 16 பேருக்கு குளிர்சாதனப் பெட்டிகளையும் 17 பேருக்கு மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்களையும் 35 பேருக்குத் தெளிகருவிகளையும் 69 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்களும் 5 பேருக்கு மீன்பிடிக்கும் வலைகளையும் 190 பேருக்குத் துவிச்சக்கர வண்டிகளையும் வழங்கி வருகின்றனர். ஏற்கனவே 84 சமுர்த்திப் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களையும், 40 பயனாளிகளுக்குத் தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழி வளர்ப்புப் பொருள்களையும் வழங்கியுள்ளனர்.

சமுர்த்தி அதிகாரசபையின் நிதி உதவியுடன் வழங்கப்பட்ட உதவிப் பொருள்கள் மூலம் பயன்பெறும் காலத்தில் 50 வீத மானியத்துடன் கட்டம் கட்டமாக மீளச்செலுத்தப் படல் வேண்டுமெனப் பிரதேச சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-9)

## கொக்குகளால் வெங்காயப் பயிர்கள் நாசம்

வலிகாமம் கிழக்குப் பகுதி யில் வெங்காயப் பயிரை கொக்குகள் சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் மிகப் பெரியளவில் நட் டத்தை சந்தித்துள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து குறிப்பிட்ட பருவ காலத்தில் இங்கு வரும் பல நூற்றுக் கணக்கான கொக்குகளால் வலிகாமம் கிழக்குப் பகுதியில் குறிப்பாக அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், கோப் பாய் போன்ற இடங்களி லுள்ள தோட்டங்களில் உலா வுவதால் வெங்காயப் பயிர்கள் சேதமடைந்துள்ளன. இதனால் வெங்காயப் பயிர்களின் தாழ்கள் முறிவடைந்து மேற் கொண்டு வளர முடியாது உள்ளன என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ந-8)

யாழ்ப்பாணம்

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத

# ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி

தேவஸ்தானம்

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்

## பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

கிரியை ஆரம்பம்: 10.02.2012 வெள்ளிக்கிழமை காலை 6.07 மணியளவில் பாலஸ்தாபன கிரியைகள் ஆரம்பம் மாலை யாகாரம்பம்.

11.02.2012 சனிக்கிழமை காலை, மாலை யாகபூஜைகள்

கர வருடம் தை மாதம் 29ஆம் திகதி (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை சித்திரை நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய மு.ப 10 மணிமுதல் 11 மணிவரையுள்ள மேஷ லக்கின சுபமுகூர்த்தத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற சிவன் திருவருள் கைகூடியுள்ளது.

பாலஸ்தாபன சர்வபோதகர்
சிவஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தா.மகாதேவ குருக்கள்
காயத்ரி பீடம், இணுவில் .

பாலஸ்தாபன பிரதம குரு
சிவகாம ஞான சாகரம் சிஸ்ரீ சொ.இ. விக்னேஸ்வர குருக்கள்
ஆலய பிரதம குரு.

க.வைத்திலிங்க செட்டியார் (தர்மகர்த்தா),
வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்.

(14288) (6,7,10)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சுப்பிரமணியம் நடேசபிள்ளை (J.P)

அன்பினால் எம்மை அரவணைத்த தந்தையே!
பண்போடு வாழ்ந்த பாசமான உயிரே!
கண்ணுக்குள் எம்மை காத்து வளர்த்திர்களே!
களிப்பான எம் வாழ்வில் கண் பட்டுப் போனது
போல கயவர்கள் உங்கள் உயிரை கொன்று
குடித்தனரே!
நெஞ்சு துடிக்குதப்பா!
நித்தம் உங்களை நினைக்கையிலே
உங்கள் ஆத்மா சாந்தியடை இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில்: 22.08.1946
விண்ணில்: 24.01.2008

**09.02.2012**

யோகபுரம், நாவற்காடு, வரணி.

குடும்பத்தினர்.

# அரசாங்க அறிவித்தல்

## சமுர்த்தி முத்திரைக்குரிய உலர் உணவு விநியோகத்திற்கான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான அவசரமான கூறுவிலை கோரல்

யாழ். மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளிற்கு மூன்று மாதங்களுக்குரிய உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்காக பின்வரும் பொருள்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன.

01. சிவப்பு நாட்டரிசி
02. கோதுமை மா
03. சீனி
04. பருப்பு

இப் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப் பொருள்களை விற்பனை செய்யவிரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா. 5,000.00 உம், மீளளிக்க கூடியதான வைப்பாக ரூபா 50,000.00 உம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை மாவட்ட சமுர்த்தி கிளையில் பெற்று தபால் உறையின் இடதுப்க்க மேல் மூலையில் *"சமுர்த்தி உலர் உணவு விநியோகத்திற்குரிய பொருள்களுக்கான கூறுவிலை"* எனக் குறிப்பிட்டு 17.02.2011ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும் போது அப்பொருள்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருள்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பொருள்களின் தரம், கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு 09.02.2012ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளமுடியும்.

கூறுவிலைகள் 17.02.2012ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும். பொருள்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினை கொள்வனவு கட்டளை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒருவாரத்தினுள் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிடம் எம்மால் குறிப்பிடப்படும் அளவுகளிற்கு இணங்க போக்குவரத்து கூலியின்றி ஒப்படைத்தல் வேண்டும்.

**கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.**

**திருமதி இமெல்டா சுகுமார்,**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,**
**யாழ். மாவட்டம்.**

# மரண அறிவித்தல்

## திருமதி ஆறுமுகம் பரிமளம்



வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 39/22, மூத்த விநாயகர் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பரிமளம் நேற்று (08.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு - செல்லம்மா தம்பதியரின் மருகளும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற தம்பு பாக்கியத்தின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி (நோர்வே), ஆனந்தன் (சுருவில்), நாகலட்சுமி (பிரான்ஸ்), யோகேஸ்வரன் (நல்லூர்), யோகலட்சுமி (பாண்டியன் தாழ்வு), காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் யோகராசன் (நாகபடுவான்) ஆகியோரின் அன்புத் தாயும், பாலசுப்பிரமணியம், வடிவாம்பிகை, சண்முகநாதன், அமிர்தா, பாலசுப்பிரமணியம் (கிளி), மதியோகராணி ஆகியோரின் பாசமிகு மாமியும், பாலமுகுந்தன் - சுடர்விழி (நோர்வே), கிரிஜா - குலேந்திரன் (கனடா), ஜெயந்தன் - தாரணி (லண்டன்), சத்தியா - யூஜின் றோமண்ட் ராஜேந்திரன் (நோர்வே), அனுசியா - சீலன் (பூநகரி), ஐங்கரன் (சுருவில்), பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் இந்துமதி - துஷ்யந்தராசா (பிரான்ஸ்), பொன்மதி - கிரு (பிரான்ஸ்), சிவதா - நிஜாந்தன் (நல்லூர்), காலஞ்சென்ற தரணிகா, மற்றும் சிந்துஜன் (பிரான்ஸ்), லவண்யா, அபிராஜன், சௌமியன், அன்பரசன் - கீதா (பிரான்ஸ்), அரவிந்தன் (பிரான்ஸ்), துஷ்யந்தன் (பிரான்ஸ்), சிபோசினி, சாளினி, தர்சிகா, தர்சன் (கொழும்பு), யதுஜன், யதுசிகா, கயந்தன் (நாகபடுவான்) ஆகியோரின் பேர்த்தியும், யதுஜா, விதுஷன், கீர்த்திகா, கிறீஸ்னி, கைலி, ஜெய்ரன், ஐஸ்வினி, தர்சன், மிதுரன், துவிசன், சன்ஜே, ஒனேசியா, பியூலா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2012) வியாழக்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39/22, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்.

தகவல்:
*ஆ. யோகேஸ்வரன் (மகன்),*
*க. பாலசுப்பிரமணியம் (மருமகன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவான அணிகள்

யாழ்ப்பாணம்,பெப்.9
வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்தவாரம் வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் அல்மதீனா விளையாட்டுக்கழக அணி, அல்கிஜிரா விளையாட்டுக்கழக அணி ஆகியன வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.


முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் அல்மதீனா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அல்கிஜிரா விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில், அல்மதீனா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சீர் திருத்தம் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்ட முடிவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் அல்மதீனா விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)



கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை மரதன் ஓட்ட நிகழ்வில் பங்குபற்றிய மாணவிகளுக்குப் பாடசாலை அதிபர் சு.திருநாவுக்கரசு கைலாகு கொடுத்து ஊக்குவிக்கின்றார். (ம-405)

# சம்பியனானது மலர்மகள் வி.க.



யாழ்ப்பாணம்,பெப்.9
வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில், மலர்மகள் விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

கடந்தவாரம் வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில், மலர்மகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மலர்மகள் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட் டிச் சம்பியனானது. (ம-23)

# இளையோர் தெரிவு சதுரங்கத்தில் வெற்றியீட்டியோர் விவரம்

இலங்கை சதுரங்க சம்மேளனம் நடத்திய வட மாகாண இளையோர் தெரிவு சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டிய ஆண், பெண் போட்டியாளர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

ஆண்கள் பிரிவு

8 வயதுப் பிரிவு - ஆர்.சதுர்சன் (முதலாமிடம்), ஜெ.ஐதுசன் (இரண்டாமிடம்), ச.ரோபிகன் (மூன்றாமிடம்).

6வயதுப் பிரிவு - அ.ரேணுஜன் (முதலாமிடம்), டீ.அஸ் வின் (இரண்டாமிடம்), ஆதரன் (மூன்றாமி டம்).

10 வயதுப் பிரிவு -
எ.ருக்ஷன் (முதலாமிடம்), ரி.போல்றொசன் (இரண்டாமிடம்), பா.மனோஜ் (மூன்றாமிடம்).

12 வயதுப் பிரிவு -
ப.சிவபாலஸ்ரீ (முதலாமிடம்), சு.சுமன் (இரண்டாமிடம்), பா.மிசோதன் (மூன்றாமிடம்).

14 வயதுப் பிரிவு
ஐன்ஸ்டீன் (முதலாமிடம்), கே.இலக்கணன் (இரண்டாமிடம்), டினோஜன் (மூன் றாமிடம்).

16 வயதுப் பிரிவு
ஆர்.மதுஷன் (முதலாமி டம்),சோ.சஞ்ஜெலன் (இரண்டாமிடம்), இ.மகிந்தன் (மூன்றாமிடம்).

18 வயதுப் பிரிவு.
அ.அனட்ரூ - முதலாமிடம், எஸ்.மதுசாந் (இரண்டாமிடம்), எஸ்.விதுர்சன் (மூன்றாமிடம்).

பெண்கள் - 6வயதுப் பிரிவு
அ.அக்ஷயா (முதலாமிடம்), கி.சோபிகா (இரண்டாமிடம்), சு.சுருதி (மூன்றா மிடம்).

8 வயதுப் பிரிவு
கு.ரிலக்ஷனா (முதலாமிடம்), பா.செம்பூவினி (இரண்டாமிடம்), கு.தாரங்கா (மூன்றாமிடம்)

10 வயதுப் பிரிவு
சி.மதுமிதா (முதலாமிடம்), சிறி.கேதா (இரண்டாமிடம்), சிறி.சாரங்கா (மூன்றாமிடம்).

12 வயதுப் பிரிவு
ம.துசாரா (முதலாமிடம்), சு.மிருதி (இரண்டா மிடம்), செ.மதுசாயினி (மூன்றாமிடம்).

14 வயதுப் பிரிவு
லோ.லாவண்யா (முதலா மிடம்), ப.சௌந்தர்யா -(இரண்டாமிடம்), யூ.சுமித் திரா தேவகி (மூன்றாமிடம்).

16 வயதுப் பிரிவு
ரி.உமையாழினி (முதலாமிடம்), எஸ்.பிரேமினா( இரண்டாமிடம்), ஆர்.இனோசா (மூன்றாமிடம்).

18 வயதுப் பிரிவு
க.சாரங்கி (முதலாமி டம்), சு.வவித்திரா (இரண்டாமிடம்), வி.பிரவீனா (மூன் றாமிடம்). (ம-23)


## மரண அறிவித்தல்

## இளையதம்பி வீரகத்தி



குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வீரகத்தி கடந்த திங்கட்கிழமை (2012.02.06) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இளையதம்பி - பார்வதி தம்பதியினரின் அன்புமகனும், நாகம்மாவின் அன்புக்கணவரும் கனகரத்தினம் (சுவிஸ்), குணரத்தினம் (சுவிஸ்) காலஞ்சென்ற இராசமணி மற்றும் நாகேஸ்வரி(கனடா), செல்வரத்தினம்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகரத்தினம் (சுவிஸ்), கமலராணி (சுவிஸ்), தம்பிராசா (அச்சுவேலி), பரமானந்தம் (கனடா), கீதாஞ்சலி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் சுகிர்தா (லண்டன்), பகிர்தா (இத்தாலி), சுதர்சன் (கனடா), சுகிதரன் (சுவிஸ்), சுவிதா (கனடா), றஜிதா (சுவிஸ்), சயிதா (சுவிஸ்), விஜிதா (சுவிஸ்), சசிகலா, சுசிகலா (சுவிஸ்), சுதாகரன் (லண்டன்), ஜெயவதனி (கனடா), மதிவதனி (கனடா), ஜெசிந்தா (கனடா), நிசாந்தா (கனடா) மற்றும் காலஞ் சென்ற தயானா மற்றும் லதுர்சன் (சுவிஸ்), அபிசா (சுவிஸ்), டினேசன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் நடேசு, காலஞ்சென்ற இரத்தினம் ஆகியோரின் சகோதரனும் காலஞ் சென்ற வைரமுத்துவின் உடன்பிறவா சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் புத்தூர் அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.
(14209)(6-7-8)

தகவல்:
நாகம்மா(மனைவி)
பிள்ளைகள்.



## வேலைக்கு ஆள் தேவை

(கணினி விற்பனையாளர்) கணினியில் அனுபவமுள்ள, பழக விரும்பும் விற்பனையாளர் பெண் பிள்ளைகள் வேலைக்கு வேண்டப்படுகின்றனர். நேரில் வரவும். இன்று மாலை 5 - 6.30 மணி வரை. நாளை காலை 8.30 - 10.00 மணிவரை.
தொடர்புகளுக்கு:
அபிஷேக் மல்ரி ஸ்பொட் & நெற்கபே
இராமநாதன் கல்லூரி முன்பாக,
மருதனார்மடம்.
0718565540, 0217200882,
0779005856

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் இயந்திரம் கொம்பிறேசருடன் விற்பனைக்குண்டு.
T.P. 0778759584

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழையுங்கள் 0779086737
அழகழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன.

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: சித்தி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
55, 57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2901



## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடத்தப்படு கின்றன.

6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்கு தோற்றலாம்.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093
E-mail: alliance jaffina@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)

மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(14282) (2-6-7)



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்
29
★
04
★
1928



மறைவு
07
★
01
★
2012

## அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற கட்டை வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளர்)

கடந்த 07.01.2012 ஆம் திகதி சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (09.02.2012) வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமகள் சோதி வீதி,
நவிண்டில், கரவெட்டி.
(12686) (2-6-7)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத் தமிழனிடம் தடுமாறிய இலங்கை சிங்கங்கள்



இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான நேற்றைய ஆட்டத்தில் இந்திய அணி 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணி சார்பில் பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் தமிழக வீரர் அஸ்வின் அசத்தி இலங்கையின் வெற்றியை இலகுவாகத் தட்டிப்பறித்தார்.

ஆஸ்திரேலியாவில், கொமென்வெல்த் முக்கோண கிரிக்கெட் சுற்றுத் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதன் இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை மற்றும் இந்திய அணிகள் பேர்த்தில் நேற்று மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இந்திய அணியில் நேற்றைய தினம் சேவாக் மற்றும் சகீர்கான் இணைத்துக் கொள்ளப்பட்டது டன், கம்பீர் வெளியேற்றப்பட்டார்.

இலங்கை அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக தரங்க மற்றும் டில்ஷான் களமிறங்கினர். ஆரம்பத்திலேயே சகீர் அசத்தலாக பந்து வீசி தரங்கவை 4 ஓட்டங்களுடன் பவிலியன் அனுப்பினார். சங்ககார அடுத்து களமிறங்கி டில்ஷானுடன் இணைந்து துடுப்பெடுத்தாடினார். இருவரும் நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்தனர். இருவரிடையேயும் 84 பந்துகளில் 62 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் சங்கா 26 ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்து வீச்சில் வெளியேற்றப்பட்டார்.

சந்திமால் களமிறங்கி துடுப்பெடுத்தாடத் தொடங்க மறுமுனையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த டில்ஷான் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 24.3 பந்து பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களில் மூன்றாவது இலக்கை இழந்தது. அடுத்து அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன களமிறங்கினார். இளம்வீரர் சந்திமாலும், அனுபவ வீரர் மஹேலவும் இணைந்து வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முனைந்தனர். இருப்பினும் இந்தியாவின் பந்து வீச்சை சமாளித்து களத்தடுப்பை உடைத்தெறிவதற்கு போராட வேண்டியிருந்தது.

நான்காவது இலக்குக்காக 68 பந்துகளில் 52 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் மஹேல 23 ஓட்டங்களுடன் அஸ்வினின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். சிறப்பாக ஆடிய இளம் வீரர் சந்திமால் 66 பந்துகளில் 5 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மஹேலவைத் தொடர்ந்து களமிறங்கிய பெரேரா 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 39.4 பந்து பரிமாற்றங்களில் 172 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் மத்தியூஸ், சந்திமாலுடன் இணைந்து அணியின் ஓட்ட வேகத்தை அதிகரிக்க எத்தனித்தார். இருப்பினும் அணி 189 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சந்திமால் 64 ஓட்டங்களுடன் அஸ்வினின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் திரிமன்னே, குலசேகர தலா 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இறுதிவரையில் போராடிய மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 28 பந்துகளில் 33 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். 50 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் இலங்கை அணி 8 இலக்குகளை இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் இந்தியா சார்பில் அஸ்வின் 32 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சகீர்கான் 44 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஜடேஜா 41 ஓட்டங்களுக்கும், வினய்க்குமார் 56 ஓட்டங்களுக்கும் தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர்.

எட்டக் கூடிய இலக்கை விரட்டத் தொடங்கிய இந்திய அணிக்கு சேவாக், சச்சின் ஆரம்பத்தை கொடுத்தனர். சேவாக் அதிரடியாய் 2 நான்கு ஓட்டங்கள் விளாசி கணக்கை தொடக்கிய போதும் 10 ஓட்டங்களுடன் மலிங்கவின் வேகத்தில் சரிந்தார். அதன் பின்னர் களமிறங்கிய ஹோக்லி, சச்சினுடன் இணைந்து ஆட்டத்தை தொடங்கினார். இருவரும் தேவையுடன் அதிரடியை பாவித்து அணியின் ஓட்ட வேகத்தை குறைய விடாமல் பார்த்துக் கொண்டனர். சச்சின் பெரும்பாலும் சதத்தில் சதம் கடப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மத்தியூஸின் பந்து வீச்சில் 'போல்டாகி' வெளியேறினார். தொடர்ந்து ரோகித் சர்மா களமிறங்க மறுமுனையில் கலக்கிய ஹோக்லி 66 பந்துகளில் 20 ஆவது அரைச்சதத்தை விளாசினார். ரோகித் சர்மா 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 25.5 பந்துப் பரிமாற்றங்களில் 122 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து களமிறங்கிய சுரேஷ் ரெய்னா வேகமாக ஓட்டங்களைக் குவித்தார். ஹோக்லியும் வேகமாக ஆட இந்திய அணி வெற்றியை நோக்கி தளம்பல் இல்லாமல் பயணித்தது. இருப்பினும் ரெய்னா 24 ஓட்டங்களுடன் மத்தியூஸ் பந்து வீச்சிலும் அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் டோனி 4 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். 33.4 பந்து பரிமாற்றங்களில் 167 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள் இழந்து தடுமாறிய நிலையில் ஹோக்லி 77 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டாக' இந்திய அணி 181 ஓட்டங்களுக்கு 6 ஆவது இலக்கையும் இழந்தது. வெற்றி மெதுவாக இலங்கையின் பக்கம் திரும்பிய நிலையில் ஜடேஜா, அஸ்வின் ஜோடி இணைந்தது. 84 பந்துகளில் 53 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் இணைந்த ஜோடி நிதானமாக ஆடத் தொடங்கியது. மெதுவாக ஆட்டத்தின் போக்கிற்கு ஏற்ப துடுப்பெடுத்தாடி இலங்கையின் வெற்றிக் கனவை சிதறடித்தது. புதிய அணித்தலைமையில் இலங்கை அணி வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் ஜடேஜா, அஸ்வின் இணைப்பில் அது தவிடு பொடியானது.

20 பந்துகள் மீதமிருக்கையில் இந்திய அணி 234 ஓட்டங்களைப் பெற்று 4 இலக்குகளால் வெற்றி பெற்றது. அஸ்வின் 30, ஜடேஜா 24 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் மத்தியூஸ் 31 ஓட்டங்களுக்கு 2, மலிங்க, தம்மிக்க பிரசாத், பெரோ தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். ஆட்டநாயகனான ரவிசந்திரன் அஸ்வின் தெரிவு செய்யப்பட்டார். (5)



பட்டையை கிளப்பும் சந்திமால்



மச்சான் இவங்கள மாதிரி ரீம் கிடைச்சா நாங்களும் பட்ஸ்மனா போர்மாயிடலாம்.
வெற்றியுடன் வெளியேறும் ஜடேஜா, அஸ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரத்தில் வலைப்பந்து

## தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு தேசிய ரீதியில் இடம்பெறவுள்ளது

யாழ்ப்பாணம், பெப்.9

தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி தேசிய ரீதியில் அநுராதபுரம் ஒயாமடுவ விளையாட்டு மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வலைப் பந்தாட்ட அணி இன்று புறப் படுகின்றது.

இந்த அணியின் முகாமையாளராக திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் செல்லவுள்ளார்.

இவருடன் வலைப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளர் செல்வி எஸ். மனோன்மணியும் அணியின் தலைவராக கே.கீர்த்திகா, உபதலைவராக பி.நளாயினி மற்றும் எஸ். மேனகா, பி.வேணுகா, எஸ். சுகன்யா, பி.திவ்வியா, எஸ். ஜெயதர்சினி, ரி.யாழினி, ரி. பிக்காசிக்கா, ஆர்.துஷாதா, ஆர்.தமிழ்ச்செல்வி, எஸ்.தர்ஷிகா ஆகியோர் செல்லவுள்ளனர். (ம-325)

# சேவாக்கை விமர்சிக்கும் கவாஸ்கர்



ஆஸ்திரேலியாவில் நடைபெறும் முக்கோண ஒருநாள் தொடரில் இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு சுழற்சி முறையில் ஓய்வளிக்கும் திட்டத்தை அந்த அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் விமர்சித்துள்ளார்.

இந்தத் தொடரின் முதல் ஆட்டத்தில் வீரேந்தர் சேவாக் விளையாடவில்லை. இலங்கையுடனான ஆட்டத்தில் கம்பீருக்கு ஓய்வளிக்கப்படும் என்று சேவாக் தெரிவித்தார். ஆனால் இந்தத் திட்டத்தை விமர்சித்துள்ள கவாஸ்கர், முதல் சுற்று முடியும் வரை சிறந்த வீரர்களே களமிறக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

சமநிலையான வீரர்களை களமிறக்கி, ஆட்டங்களில் வெல்வதே அடிப்படையான விடயம். வீரர்களை சுழற்சி முறைக்குள்ளாக்குவது அவர்கள் திடநிலையில் இல்லை என்று கருதச்செய்கிறது. ஒரு வீரர் தொடர்ந்து 8 போட்டியில் விளையாடினாலும் சிறந்த அணியே களமிறக்கப் பட வேண்டும். அனைவரும் திட நிலையில் இருந்தால் தேர்வில் அனைவரும் இருக்க வேண்டும்' என்று கவாஸ்கர் கூறியுள்ளார்.

வீரர்களைச் சுழற்சிக்குள்ளாக்கினால், நீங்கள் வீரர்களுக்கு ஓய்வளிக்கிறீர்கள், ஆனால் ஆட்டங்களில் வெல்வது குறித்துச் சிந்திக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட வீரர்களுக்கு ஓய்வளிப்பதன் மூலம் 2015 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடவுள்ள வீரர்களுக்கு வாய்ப்பளிக்க முடியும் என்ற வாதத்தை கவாஸ்கர் ஏற்க மறுத்துள்ளார்.

அப்படியானால் சிரேஷ்ட வீரர்களைத் திருப்பி அனுப்ப வேண்டும். அவர்களை ஏன் தெரிவு செய்திருக்க வேண்டும்? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

உலகக் கிண்ணத் தொடரின் போது, முதல் 3 வீரர்களாக சேவாக், டெண்டுல்கார், கம்பீர் ஆகியோரே களமிறங்கினர். அந்த வரிசையே உலகக் கிண்ணத்தை இந்தியாவுக்கு வென்று கொடுத்தது. இந்த நிலையில் அந்த வரிசையை ஏன் மாற்ற வேண்டும் என்றும் கவாஸ்கர் கேள்வி எழுப்பியுள்ளார். (த-5)

**பணியாளர்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் புடவை நிறுவனத் துக்கு தொழில் அனுபவம் உள்ள ஆண்/பெண் ஊழியர்கள் தேவை. தொடர்பு: 0772850753

## யா/ கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலய மாணவிகளுக்கான பாராட்டு

கடந்த 2011 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் தீவகக் கல்வி வலயத்தில் முதல் இடத்தைப் பெற்ற

செல்வி வி. மேகலா A 2B மாவட்ட நிலை 67 என்பவரையும்

செல்வி இ. வனிஸ்ரா A 2B

செல்வி ஜா. சயானா A 2B

செல்வி ஸ்ரீ. சிந்துஜா A B C ஆகியோரையும்,

அகில இலங்கை சைவநெறித் தேர்வில் தமிழ், இந்துநாகரிகப் பாடங்களில் தங்கப்பதக்கங்களை முறையே பெற்றுக் கொண்ட செல்வி வி. மேகலா, செல்வி இ. வனிஸ்ரா ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களது கல்வி உயர்ச்சிக்காக அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்.

**College of IT**
Your bright future starts here.
**Computer Educations**
Company Reg No:NAL/DS/1112

## பணி நிலை வெற்றிடம்

பின்வரும் துறைகளில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

MS office — Accounting Packages,
DTP — Web Designing
Photoshop — Hardware Technitions
Video Editing — AutoCAD.

6 மாத பயிற்சி வழங்கப்படும் பயிற்சியின் போது கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும். ஆர்வமுடையவர்கள் உங்கள் சுயவிபரக்கோவையை 16.02.2012 அன்று அல்லது அதற்கு முதல் விண்ணப்பிக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி:
HRM
College of IT.
No 145, K.K.S Road,
Kokuvil Junction,
Kokuvil.

## பட்சன் மீண்டும் அணியில்

ஆஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சன் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இந்திய, இலங்கை மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் மும்முனைச் சுற்றுத் தொடருக்கு அவர் அழைக்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக கடந்த ஆட்டங்களில் ஜேம்ஸ் பட்டின்சன் ஆட்டங்களில் விளையாடியிருக்கவில்லை.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டங்களில் ஜேம்ஸ் பட்டின்சன் சிறப்பாக விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## பளு தூக்கும் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.மாவட்ட வீரர்கள், வீராங் கனைகளுக்கான பளு தூக்கும் போட்டி யாழ். மாவட்ட ரீதியாக நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளவிரும்பும் வீர,வீராங்கனைகளை யாழ். மாவட்டச் செயலக. விளையாட்டுப் பகுதியில் 20 ஆம் திகதிக்கு முன்பு பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் தெரிவித்துள்ளார். (ம-325)



துணுக்காய் அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் பாடசாலையின் பழைய மாணவன் தி. தவேந்திரன் மாணவர் ஒருவருக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்குகிறார். (ம-415)

## தென்மராட்சிப் பிரதேச வருடாந்த விளையாட்டு

தென்மராட்சி, பெப்.9

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இந்த வருடத் துக்குரிய விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.


குழுநிலைப் போட்டிகளில் எல்லே போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

எல்லே போட்டிக்கு விண்ணப்பித்த விளையாட்டுக் கழகங்களை உரிய நேரத்துக்கு முன்னர் வருகை தருமாறு பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ம-9)

## மரண அறிவித்தல்

### இராசையா சின்னையா (கந்தசாமி)

சாயுடை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சின்னையா நேற்று (08.02.2012) புதன்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பொன்னுச்சாமி மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும், சிவநேசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவகரன் மற்றும் சிவயோக்ன் (பிரான்ஸ்), சிவபதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாமதி (பிரான்ஸ்), ஜெயமகள் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் தயூரா (லண்டன்), தயூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் தெய்வநாயகி, தவமணிதேவி (டென்மார்க்), ஆறுமுகம், கதிரமலை, வேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியநாதன் (கனடா), சத்தியசீலன் (பிரான்ஸ்), சத்தியபவான், சத்தியபிரேமா, சத்தியஜெயன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.02.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா கனகம்மா



நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கனகம்மா நேற்று (08.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம் தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பலம் செல்லையாவின் அன்பு மனைவியும் மஞ்சுளாதேவி, அமிர்தாதேவி, நாகரூபன், கமலநந்தினி, கலாமாலினி, காலஞ்சென்ற கிருஸ்ணரூபன் ஆகியோரின் அன்பு தாயும் அம்பிகைபாலன், சிவபாலன், ஜெயலோயினி, காலஞ்சென்ற பரமசிவன் மற்றும் ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியும், சந்திரவதனி, இந்திரபாலன், துசிக்குமார், தேனுஜன், துவாரகன், கயேந்திரன், கபில்ராஜ், டயானா, நேருஜா, பிரசாந், நிருஜா, நிருபன், ஜரூயா, சங்கீதா, துவாரகா, திரிஷிகா, ஜனார்த்தனன், பிரவீணா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2012) வியாழக்கிழமை அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி கோயிலடி,
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
க.சிவபாலன் (மருமகன்)

## கருணைதாசன் மேரிமாக்கிரட் (தங்கா)

(முன்னாள் ஆசிரியை யா/ அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்)



நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கருணைதாசன் மேரிமாக்கிரட் (தங்கா) (முன்னாள் ஆசிரியை யா/ அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்) நேற்று 08.02.2012) புதன்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் கருணைதாசனின் (யா/ கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி நூலக அலுவலகர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்தி- ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், அற்புதம், சத்தியசீலன், லோறன்ஸ் (மின்சார சபை - சுன்னாகம்), சிறில் (சுவிஸ்), றெஜினா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவபாக்கியத்தின் அன்பு மருமகளும், பரராயசிங்கம், சர்வானந்தசிவம், கருணாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அன்ரனி டென்சிலின் பாசமிகு சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று, இன்று (09.02.2012) வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் திருவுடல் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்றவீதி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னவர் கிருஷ்ணர்

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்- புங்குடுதீவு)



வட்டு வடக்கு, சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவர் கிருஷ்ணர் நேற்று (08.02.2012) புதன்கிழமை தனது 104ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவர்- வியாழி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர்- பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகபூசனியின் அன்புக் கணவரும், ஐயாத்துரை(கட்டட ஒப்பந்தகாரர்), நடராசா (கட்டட ஒப்பந்தகாரர்), சதாசிவம் (ஓய்வு பெற்ற சுங்க அதிகாரி), சேனாதிராசா(கட்டட ஒப்பந்தகாரர்), சண்முகலிங்கம்(கட்டட ஒப்பந்தகாரர்- வவுனியா), அருந்தவச்செல்வி, சிவநேசச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகரெத்தினம், மீனாட்சியம்மா, நிர்மலேஸ்வரி, பத்மாவதி, கமலநாயகி, கணேசராஜா (லண்டன்), தவராஜா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2012) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்துப்பிள்ளையார் கோயிலடி,
தொல்புரம் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.


# நேருக்குநேர் மோதிய வாகனங்கள்

வவுனியா,பெப்.9

இரு கனரக வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதில் சாரதிகள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

மாங்குளத்துக்கும், கொக்காவிலுக்குமிடையில் நேற்றுக்காலை 6.20 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வாகனமும், யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற வாகனமுமே நேருக்கு நேர் மோதிக் கொண்டன. வவுனியாவிலிருந்து சென்ற வாகனம் மோசமான சேதங்களுக்குள்ளாகிய நிலையில் காணப்பட்டது.

இந்த வாகனத்தின் சாரதி படுகாயங்களுடன் வாகனத்தினுள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார். அங்கு திரண்ட பொதுமக்கள் சுமார் ஒரு மணிநேரப் போராட்டத்தின் பின்னர் அவரை வெளியில் எடுத்துக் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வாகனச் சாரதியும் காயமடைந்த நிலையில்



வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

பொதுமக்களின் மின்னல் வேகச் செயற்பாட்டினால், இந்த இரு வாகன சாரதிகளும் உயிர் பிழைத்தமை குறிப்பிடத்தக்கது. (க-421)

# மீளக்குடியமர்த்தப்படாத 3,300 குடும்பங்கள்

வவுனியா, பெப்.9

இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலுள்ள 3 ஆயிரத்து 300 குடும்பங்கள் இதுவரை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கட்டப் போரின்போது, இடம்பெயர்ந்து ஆனந்த குமாரசுவாமி மற்றும் கதிர்காமர் நலன்புரி முகாம்களிலுள்ள 3 ஆயிரத்து 300 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களே இவ்வாறு மீளக்குடியமர்வு செய்யப்படாத நிலையில் உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிழக்கு, மேற்கு, மந்துவில், சிவநகர், கைவேலி, மல்லிகைத் தீவு ஆகிய பகுதிகளும், கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளுமே இதுவரை மீள்குடியமர்வு இடம்பெறாத நிலையிலுள்ளன.

இதேவேளை கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட சுமார் 134 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 438 பேர் கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு கோம்பாவில் திம்பிலிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். (க-400)

# இதுவரை வழங்கப்படாத வாழ்வாதாரக் கொடுப்பனவு

முல்லைத்தீவு,பெப்.9

தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஐ.ஓ.எம் நிறுவனத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதியின் பிரகாரம் 7 மாதங்கள் கடந்த போதிலும், இந்தக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

கடந்த மே மாதத்திலும் அதற்கு முன்பும் விடுவிக்கப்பட்டவர்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் வழங்குவதாகக் கூறி விவரங்களையும் திரட்டியது.

மேலும் அந்தந்த மாவட்டங்களிலுள்ள தமது கிளை அலுவலகங்களில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் எதுவுமே நடக்கவில்லை. இவர்கள் பலமுறை அலைந்து திரிந்ததுதான் கண்டபயன். அலுவலகங்களில் உள்ள பணியாளர்கள் பொறுப்பான முறையில் நடந்து கொள்ளவில்லையெனவும், தமக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் அழைப்பு எடுக்கும் போது துண்டிக்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கின்றனர். (க-500)

# வேலை ஆள்கள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள கொழும்பை தலைமையகமாக கொண்ட உல்லாச விருந்தினர் விடுதிக்கு கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் பின்வரும் வேலை ஆள்கள் வேண்டப்படுகின்றனர்

01. Chief Accountant- (தலைமைக் கணக்காளர்)
02. Accountant (கணக்காளர்)
03. Room boys- (அறை பராமரிப்பாளர்கள்)
04. Stewards- (உணவு பரிமாறுபவர்கள்)
05. Cooks- (சமையலாளர்)
06. Receptionist- (வரவேற்பாளர்கள்)
07. Gardener (தோட்டப் பராமரிப்பாளர்.)

இல.51, சிவன் வீதி, திருநெல்வேலி. (தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்பாக.) 0212221889, 0214922334

நேர்முகப் பரீட்சை (09.02.2012) வியாழக்கிழமை, (10.02.2012) வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை இடம்பெறும். (தகுதியுடையோர் தமது சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியையும், பகுதித் தலைவருமாகிய செல்வி. ம. இளையதம்பி அவர்களின் தாயார்

அமரர் திருமதி சிவகாமிப்பிள்ளை இளையதம்பி

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடு, அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

# மரண அறிவித்தல்

## கந்தையா இராமச்சந்திரன்



வழக்கம்பரை அம்மன் கோயிலடி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் சுப்பர்வளவு, அல்வாய் கிழக்கு, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராமச் சந்திரன் நேற்று (08.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தனலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஜானகியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயகௌரி, ஜெயரூபன், ஜெயதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சயந்தன், கமலலோஜினி, கபில்ராஜ் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற சிவஞானபூங்கோதை (தொல்புரம்) பாலசந்திரன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜேனுஜா, கவின்சன், கவின்சிகா, லக்சிகா, ஜெனிபன், ஜனுசன், திருமாளவன், அபிசன், அபினயா, அபர்னா ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02 .2012) வியாழக்கிழமை மு.பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மந்திகை கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுப்பர் வளவு,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்:
இ.தனலட்சுமி
(மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரவன்ஸ, சம்பிக்கவை அரசிலிருந்து விரட்டினால் மட்டுமே சாத்தியம்

## விக்கிரமபாகு காட்டம்

கொழும்பு, பெப்.9

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதென்பது வெறும் பெயரளவில் மட்டுமே உள்ளது. இலங்கையின் 64 ஆவது சுதந்திர தின வைபவத்தின்போது சிங்களமொழியில் மட்டும் தேசியகீதம் பாடப்பட்ட சம்பவம் இதனை அப்பட்டமாக வெளிக்காட்டுகின்றது. மனமிருந்திருந்தால் தமிழ் மொழியிலும் தேசிய கீதத்தை இசைத்திருக்கலாமே?

தேசிய பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் தொடர்ந்தும் கடும்போக்கையே கையாண்டுவரும் விமல், சம்பிக்க ஆகியோரை அரசிலிருந்து விரட்டியடித்தால் மாத்திரமே தீர்வை சாதகமான பாதையை நோக்கி நகர்த்த முடியும்.

- இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவோம் என ஜனாதிபதி இலங்கையின் 64ஆவது சுதந்திர தின வைபவத்தின்போது முழக்கமிட்டார். முழக்கமிட்ட மறுகணமே தீர்வு எட்டப்படுமா? என எல்லோர் மனதிலும் கேள்வி எழுப்பும் வகையில் தேசிய கீதம் சிங்களமொழியில் மட்டும் இசைக்கப்பட்ட சம்பவம் அமைந்துள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் முழுமனதோடு ஒன்றுபட்டு செயற்படுவார்களாயின், தமிழ்மொழியிலும் தேசிய கீதத்தை இசைத்திருக்கலாமே? இதுதான் தீர்வுக்கு அரசின் அர்ப்பணிப்பா? தீர்விற்காக ஏங்கித் தவிக்கும் உள்ளங்களில் ஒரு பேரிடி விழும் முகமாக இச்சம்பவம் அமைந்துள்ளது.

அரசினது இந்தச் செயல் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் கடும்போக்கை கையாள்வதையே சுட்டிக்காட்டுகின்றது. அதுமட்டுமல்லாது, அரசு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முழுமனதோடு இணங்கவில்லை என்பதையும் வெளிக்காட்டியுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் நம்பிக்கை ஏற்பட வேண்டுமானால், ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். அறிக்கையை புறந்தள்ளிவிட்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்க முடியாது. தெரிவுக்குழு அமைப்பதாயின், ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்தவேண்டும்.

ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பை வெளியிடும் அமைச்சர்களை அரசிலிருந்து நீக்கவேண்டும். அப்போதே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு சாதகமான பாதையை உருவாக்க முடியும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டைகளாகச் செயற்பட்டு வருகின்ற விமல், சம்பிக்க ஆகியோரை அரசிலிருந்து நீக்க வேண்டும். நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுவதைத் தடுத்துநிறுத்துவதற்காகத் தொடர்ந்தும் கடும்போக்கை கையாள்கின்ற இவர்களின் அழுத்தமே தீர்வுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

தேசப்பற்றாளர்கள் என்ற பெயரில் தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தமது எதிர்ப்பை வெளிக்காட்டியே வருகின்றனர். ஆணைக்குழு அறிக்கைக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டுவரும் இவர்களை வைத்துக்கொண்டு எவ்வாறு தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது? - என்றார். (த-சி)

# ராஜதந்திர நடவடிக்கை மூலம் மீனவர்களை மீட்கமுடியாது

»1

ஒன்றை முன் வைத்தார். இதன்போது கடந்த ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி காணாமல் போன ஆறு மீனவர்கள் தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று கேள்வி எழுப்பினார்.

தொழிலுக்குச் சென்ற ஆறு மீனவர்களும் படகும் காணாமல் போய் விட்டதாக படகின் உரிமையாளரும் காணாமற்போன மீனவர்களின் குடும்பத்தவர்களும் முறைப்பாடு செய்தனர்.

இதன் அடிப்படையில் வெளிநாட்டு அமைச்சின் மூலம் சகல தூதரங்களுக்கும் அறிவித்தோம்.

இதன் பயனாக காணாமல் போன மீனவர்கள் சோமாலிய கடற்கொள்ளையர்களினால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர் என்ற விவரம் கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி எமக்கு கிடைத்தது. என்றும் இராஜதந்திர அணுகுமுறை மூலம் இவர்களை விடுவிக்க முடியாது. சர்வதேச மட்டத்தில் கடற்கொள்ளையர்கள் தொடர்பான விடயங்களை பரிசீலனை செய்யும் மத்திய நிலையத்தின் மூலம் இவர்களை விடுவிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் பாதுகாப்பாக இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் கூறினார். (10-2)

# தமிழருக்கு நீதி வேண்டும் அமெரிக்கா அதில் உறுதி

»1

தினம் மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தினார்.

கொழும்பில் சுமார் ஒன்றரை மணித்தியாலமாக இடம்பெற்ற இச்சந்திப்பில் யுத்தக்குற்ற விவகாரம், ஜெனிவா மாநாடு, தீர்வு விடயம் உட்படச் சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது

தமிழர் பிரச்சினைகளை அமெரிக்கத் தூதுவரிடம் எடுத்துரைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போர்க்குற்ற விசாரணை, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை ஆகியன தொடர்பில் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது.

கூட்டமைப்பினர் கூறியவற்றை மிகவும் அவதானத்துடன் கேட்டறிந்த ஸ்டீபன், இறுதியுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவே உள்ளோம். இது தொடர்பில் நாம் முழு அளவிலான அவதானத்தை செலுத்தியுள்ளோம் என்றும், தமிழர்களுக்கு நிரந்தரமானதொரு தீர்வு கிடைக்கவேண்டும் என்ற விடயத்திலும் அமெரிக்கா பூரண கரிசனையைக் கொண்டுள்ளது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு நேரடியாகவே பயணம் செய்து அங்கு வாழும் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அது தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை, ஜெனிவாத் தொடர்பில் இலங்கைக்கு எதிரான பிரேரணை, போர்க்குற்ற விசாரணைக்கான சுயாதீனப் பொறிமுறை, தீர்வு விடயத்தில் அரசின் அசமந்தப்போக்கு உட்பட முக்கியமான சில விடயங்கள் குறித்துக் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்று அறியமுடிகின்றது.

## நாட்டில் குண்டுப் புரளியை அரசுதான் கிளப்பி விடுகிறது

»1

கூறினார்.ஜயந்த கொட்ட கொட தொடர்ந்து உரையாற்றும் போது:-

அரசு மக்களால் நடத்தப்படும் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் தடுக்கப் புதிய யுக்தி ஒன்றைக் கடைப் பிடிக்கின்றது.

அதாவது அங்கே தற்கொலை அங்கிகளையும், இங்கே குண்டுகளையும் மீட் எடுத்துள்ளோம் என்று காட்டி நீதிமன்றங்களுக்குப் போய் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை உத்தரவு கோருகின்றது.

இப்படியான செயல்களினால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வந்து முதலீடு செய்யத் தயங்குகின்றனர்.

அரசின் தவறான நடவடிக்கைகளினால் இன்று நாட்டின் பொருளாதாரம் குட்டிச்சுவராகி விட்டது என்றும் சுட்டிக்காட்டினார். (த-2)

## இலங்கைக்கு எதிரான தீர்மானம் தளம்பல் நிலையில் இந்தியா

»1

புக்குப் பக்கபலமாக இந்தியா இருக்கும் என்ற உறுதிமொழியை இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. எனினும் இந்தியாவின் இறுதியான முடிவு குறித்த அதிகாரபூர்வமான தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தகவல் வெளியிட்ட, தனது பெயரைக் குறிப்படவிரும்பாக இலங்கை அரசஅதிகாரி ஒருவர், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைத் தோற்கடிக்க இந்தியா உதவும் என்று உறுதிபடக் கூறியிருந்தார்.

அதேவேளை, தென்அமெரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகளில் மேற்கொண்ட பரப்புரைகளின் மூலம் பெற்றுள்ள ஆதரவைக் கொண்டு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஜெனிவாவில் முறியடிக்க முடியும் என்ற நம்பிக் கையில் இலங்கை இருப்பதாகவும் கொழும்பு ஊடக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (த)

# காணாமற் போனோர் தொடர்பில் ஸ்ரீபன் ராப் கேட்டறிந்தார்

»1

துக்கு இரண்டு நாள் பயணமாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதி விசாரணைக்கான தூதுவர் ஸ்ரீபன் ராப் மற்றும் அவரது உதவியாளர் டீன் கப்ளான் ஆகியோர் நேற்று வருகை தந்தனர்.

கிளிநொச்சி இரணைமடு விமான நிலையத்தை வந்தடைந்த அவர்கள் பின்னர் தரைமார்க்கமாக யாழ். மாவட்டத்துக்கு வந்தனர். இந்தக் குழுவினர் பிற்பகல் 1.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருடன் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்து கொண்டனர். மேலும் யாழ்ப்பாணத்தின் முன்னைய சனத்தொகை மற்றும் தற்போதைய சனத்தொகை தொடர்பாகவும் அவர்கள் கேட்டறிந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்வு தொடர்பான விடயங்களையும் மற்றும் மக்கள் மீளக்குடியமர வேண்டிய இடங்கள் தொடர்பிலும் அவர்கள் விவரங்களைப் பெற்றனர்.

மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு வீடுகள் இல்லாமை மற்றும் வேலைவாய்ப்புக்கள் இல்லாமை தொடர்பிலும் கல்வி, சுகாதார வசதிகள் போன்றவற்றில் முன்னேற்றம் காணப்பட வேண்டியுள்ளதுடன் அவை சவாலாக இருப்பதாகவும் அமெரிக்கக் குழுவினருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் தற்போது யாழ். மாவட்டத்தில் இராணுவப் பிரசன்னம் குறைந்திருப்பதாக அமெரிக்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர் - என்றார் அரச அதிபர்.

இதேவேளை நேற்றைய தினம் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க யாழ். ஆயர் தோமஸ்சௌந்தரநாயகம் ஆண்டகை ஆகியோரையும் இந்தக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர். (த-5)

# அமெரிக்க - இந்திய அதிகாரிகள் வொஷிங்ரனில் இரகசிய சந்திப்பு

»1

தாயிடம் விரிவாக விளக்கமளித்துள்ளனர். இறுதிப் போரின் பின்னரான நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழிகளின் அமுலாக்கம் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லையென்று அமெரிக்கத் தரப்பிலிருந்து இந்திய வெளியுறவுச் செயலரிடம் சுட்டிக்காட்டப்பட்டதாக அறியமுடிந்தது.

இலங்கை தொடர்பான செயற்பாடுகளைக் கண்காணித்து வருவதாக இங்கு குறிப்பிட்டுள்ள இராஜாங்கச் செயலாளர்கள் இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகள் மேம்படுவதற்காக அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்தியாவும் ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனக் கேட்டுள்ளனர். (த)

# ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்குச் சிக்கல்

»1

வுள்ள பிரேரணையைத் தடுத்துநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்ட மாலைதீவு ஜனாதிபதியின் பதவி விலகல் கொழும்புக்கு ஏதோவொரு வகையில் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

மனித உரிமைகள் பேரவையில் அங்கம்வகிக்கும் 47 நாடுகளின் முக்கிய பிரதிநிதிகளுக்கு அந்த மாநாட்டின்போது உரை நிகழ்த்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுவது வழமை.

அந்தவகையில் இம்முறை தனக்கான சந்தர்ப்பத்தின் போது, இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் விசேட உரையொன்றை நிகழ்த்துவதற்கு மாலைதீவு ஜனாதிபதியாகவிருந்த மொஹமட் நஷீட் திட்டமிட்டிருந்தார் என இராஜதந்திர மட்டத்திலான தகவல்கள் தெரிவித்தன.

இலங்கையின் மனித உரிமைகள் பாதுகாப்பு செயற்றிட்டம், நல்லிணக்க ஆணைக்குழுவின் சாதகத்தன்மை, ஈழத்தமிழர் விவகாரம் உட்பட இலங்கை அரசுக்கு சாதகமான சில விடயங்கள் தொடர்பில் அவர் பேசவிருந்தார் என்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

அதுமட்டுமின்றி, இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அந்நாட்டுக்கு கால அவகாசம் வழங்குமாறு சர்வதேச சமூகத்திடம் மாலைதீவு ஜனாதிபதி பகிரங்கமாகக் கோரிக்கையொன்றை விடுக்கவிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையிலேயே தனக்கு எதிராக நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் வலுத்ததால் ஜனாதிபதி மொஹமட் நஷீட் தனது பதவியைத் துறந்துள்ளார்.

சிரேஷ்ட நீதிபதியொருவரைக் கைதுசெய்யுமாறு ஜனாதிபதி மொஹமட் உத்தரவிட்டதையடுத்தே அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் வலுத்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஜெனிவா கூட்டத் தொடர் நெருங்கும் நிலையில் அவரது இராஜிநாமாவானது கொழும்பைக் கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

தற்போது ஜனாதிபதியாகக் கடமையேற்றுள்ள துணை ஜனாதிபதியாகப் பதவிவகித்த முஹமட் வாகிட் மாலைதீவைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜெனிவாத் தொடரில் கலந்துகொள்வார் எனக் கூறப்பட்டாலும் உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படவில்லை.

மாலைதீவுடனான உறவில் விரிசல் ஏற்படவில்லை எனக் கூறும் இலங்கை அரசு, தனது இராஜதந்திரிகளினூடாக சமரசம், பேசும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது எனத் தகவல்கள் கசிந்துள்ளன. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீனவரை விடுவிக்க இந்திய அரசுடன் இணக்கம்

## சபையில் அமைச்சர் ராஜித

கொழும்பு, பெப். 9

இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்து கைது செய்யப்படும் இலங்கை மீனவர்களைக் கால தாமதமின்றி விடுவிக்க இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் ஆறு மீனவர்கள் மட்டுமே சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்றுறையியல் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனரத்ன நேற்று சபையில் தெரிவித்தார்.

இந்தியாவில் மத்திய அரசுக்கும், மாநிலங்களுக்கு இடையிலும் வெவ்வேறு வகையான சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன.

மாநிலச் சட்டங்கள் நடைமுறையில் இருப்பதால் மத்திய அரசினால் கைது செய்யப்படும் மீனவர்கள் ஒரு வருடம் வரை சிறை வைக்கப்படுகின்றனர்.

தமிழ் நாட்டில் கைது செய்யப்படும் மீனவர்கள் ஒரு மாத காலத்தில் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்படுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக நாம் இந்தியாவுடன் பேசி வருகின்றோம் இந்திய மீனவர்கள் இலங்கை கடற் பரப்பில் மீன்பிடிப்பதை தடுப்பது தொடர்பாகவும் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

இறுதியாக நடந்த இந்திய - இலங்கைக் கூட்டு செயற்பாட்டுக் குழுக் கூட்டத்தில் சகல மாநில அரசுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதன் போது தமிழ் நாட்டு அரசு கடைப்பிடிப்பது போல், ஏனைய மாநிலங்களும் செயற்பட இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக இந்திய அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் தொடர்பான வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டுள்ளன. இதன்படி சர்வதேசக் கடல் எல்லைச் சட்டத்தின் படி வழக்கு இன்றி இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்படுவர்.

நான் கடற்றொழில் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின் 779 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அண்மையில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களுள் 20 பேர் விடுவிக்கப்பட்டனர். இன்னும் ஆறு பேர் மட்டுமே இந்திய சிறையில் இருக்கின்றனர் என அமைச்சர் குறிப்பிட்டார்.

நேற்றுச் சபை ஆரம்பத்தின்போது ஜே.வி.பி. உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க முன்வைத்த கவன ஈர்ப்புப் பிரேரணைக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

(10-2)

# பாழடைந்த கட்டடத்துக்குள் யுவதியுடன் படையினர்

கிளிநொச்சி, பெப்.9

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் இராணுவத்தினர் இருவர் பெண் ஒருவருடன் இரவு வேளை பாழடைந்த கட்டடத்துக்குள் மேலாடைகள் இன்றி நின்றிருந்த வேளை அப்பகுதி இளைஞர்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. எனினும் அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்களால் அச் சம்பவம் மூடி மறைக்கப்பட்டு இராணுவத்தினரைச் சுற்றிவளைத்து இளைஞர்களும் விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8.30 மணிக்கு கிளிநொச்சி டிப்போவுக்கு அண்மையாகவுள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் அருகில் நடைபெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

இரவு ஆறுமணி ஆகியும் பஸ் தரிப்பிடப் பகுதியில் நீண்டநேரம் தனியாக நின்றிருந்தார் யுவதி ஒருவர். இரவு 8.30 மணியளவில் ரயில் பாதை அமைந்துள்ள பகுதியில் கைவிடப்பட்ட கடைக் கட்டடத்துக்குள் அருகில் இருந்த இராணுவக் காவலரணைச் சேர்ந்த இரண்டு இராணுவத்தினரும் குறித்த பெண்ணும் நிற்பதை இளைஞர்கள் கண்டனர்.

இளைஞர்கள் அந்த இடத்தில் கூடியதும் இராணுவத்தினர் "நாளைய இளைஞர்கள்" அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பின் அமைப்பாளருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். இதன்போது சம்பவ இடத்துக்கு வந்த அந்த அமைப்பாளரும் சுதந்திரக் கட்சியின் நீலப் படையணியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளரும் குறித்த இளைஞர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டி மிரட்டியுள்ளனர். பின்னர் குறித்த பெண்ணை தங்கள் வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

குறித்த பெண் தான் பதுளையைச் சேர்ந்தவர் எனவும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்ததாகவும் சம்பவ இடத்தில் வைத்து கூடி நின்றவர்களிடம் தெரிவித்தார்.

(த-10)

# இருவருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், பெப். 9

திருநெல்வேலிச் சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இரண்டு பேரை அங்கு சென்ற இருவர் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.

காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கத்தியால் வெட்டிய இருவரையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இணுவிலைச் சேர்ந்த எஸ். பிரதீபன் (வயது-16), பி. புஸ்பவேந்திரன் (வயது-36) ஆகிய இருவருமே காயமடைந்தனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(த-4)

**தேவை**

கணக்கு வேலை
செய்வதற்கு அனுபவமுள்ள
(ஆண்) தேவை.
தொடர்பு:- 0771807672

**ROOM வாடகைக்கு**

யாழ் மாநகர எல்லைக்குள் மருத்துவ மாணவி ஒருவர் தங்கியிருந்து படிப்பதற்கு ROOM வாடகைக்கு தேவை.
தொடர்பு: 0774686222

**வடமராட்சி கிழக்கு, வன்னிப்பகுதியில் கடமையாற்றிய ஓய்வுபெற்ற அல்லது பணியிலுள்ள கிராம அலுவலகர்கள் அல்லது அரசாங்க அதிகாரிகள் ஆகியோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.**

பகுதி நேர விசா வளவாளர்கள் பதவி
கணிசமான உதவு தொகை
குடும்பமாக இலவசமாக ஆஸ்திரேலியா செல்ல வாய்ப்பு
எதற்கும் எந்நாளும் நேரில் எமது தலைமைக் காரியாலயத்திற்கு நேரில் வரலாம்.
தொலைபேசி மூலம் பேசிக் கொள்ள எவையும் இல்லை

| பொது முகாமையாளர், | கிளைகள் |
|---|---|
| திசைகாட்டி பிறைவேற் லிமிடெற் | 115ஏ, இரத்தினபுரம் வீதி, |
| தலைமைக் காரியாலயம், | கிளிநநொச்சி. |
| 37, சிவகுருநாதர் ஒழுங்கை. | 021 491 4527 |
| பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். | மெல்போண், |
| (யாழ். இந்துக்கல்லூரி மைதானம் அருகில்) | ஆஸ்திரேலியா. |
| 021 221 9016 | 0061412479209 |



இலங்கை நேரப்படி காலை 6 மணி - பி.பகல் 4.00 மணிவரை

**உடனடி வேலை வாய்ப்பு**

01. அலுவலக உதவியாளர் (Peon - 02 வெற்றிடம்)
    தகைமை : க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
    வயது : 18 தொடக்கம் 25 இற்குள்
02. தொழில்நுட்பவியலாளர் (Technician 05 வெற்றிடம்)
    தகைமை : Computer Hardware, Networking, Security Camara Intercom
    ★ 2 வருட அனுபவம் ★ வாகன சாரதி அனுமதிப்பத்திரம்
03. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (01 வெற்றிடம்)
    தகைமை: சந்தைப்படுத்தல் துறையில் பட்டம் பெற்றருத்தல் விரும்பத்தக்கது.
    ★ சந்தைப்படுத்தல்துறையில் 5 வருட அனுபவம்
    ★ வாகன சாரதி அனுமதிப்பத்திரம்
    ★ ஆங்கிலம், சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.
04. தொழில்நுட்ப உதவியாளர் பயிலுநர் (10 வெற்றிடம்)
    தகைமை: Computer Hardware அறிவு அவசியம்.
    ★ க.பொ.த. உயர்தரம் சித்தி
    ★ ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கவர்ச்சிகரமான சம்பளம் EPF. ETF அடங்கலாக

விண்ணப்பங்களை 14.02.2012 இற்கு முன்பதாக கிடைக்க கூடியவாறு தபால் மூலமாகவோ, நேரிலோ அல்லது E-mail மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

**Nalin Information Technologies (Pvt) LTD.**
195/2, Palaly Road, Parameswara Junction, Jaffna.
Tel : 0777667974/75, 021 222 1121/1166/0838. E-mail: job@nit.lk

**மு/மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா அழைப்பிதழ்**

இடம்: மு/மல்லாவி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபம்
காலம்: 10.02.2012
(வெள்ளிக்கிழமை)
நேரம்: மு.ப. 9.00 மணி
தலைமை:
திரு. து. யேசுதானந்தர் (அதிபர்)
பிரதம விருந்தினர்:
உயர் திரு. இளங்கோவன்
(வடமாகாண ஆளுநரின் செயலாளர்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- கல்லூரிச் சமூகம்.

**யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!**

**Diploma in Mobile Phone Repairing**
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
(இந்த கற்கை நெறியை கற்பதன் மூலம் 100% நீங்கள் Mobile Phone இனை திருத்தி கொள்ள முடியும்)
(With Practical Electronic)

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் - வரும் ஞாயிறு காலை 11 மணி
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No :- 021 321 6433 / 0774 110862

**மணல் விற்பனைக்குண்டு**

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.
4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)
தொடர்புகளுக்கு கண்ணா 0776766499

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

சனி ஞாயிறு பிரிவு ஆரம்பம்
11-02-2012 சனிக்கிழமை

| | |
|---|---|
| ராஜமாணிக்கம் மண்டபம் அருகில் அச்சுவேலி | காலை 8.00 - 9.00 |
| NSB அருகில், கொழகாமம் வீதி நெல்லியடி | காலை 9.00 - 10.00 |
| நகரசபை அருகில், ஸ்ரேசன் வீதி சாவகச்சேரி | காலை 11.30 - 12.30 |
| 182, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | மாலை 3.00 - 4.00 |
| இலங்கை வங்கி மேல்மாடி சங்கானை | மாலை 5.00 - 6.00 |

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளில் பணியாற்றுவதற்கு தகுதியும் அனுபவமும் உள்ள ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சிட்டை எழுதுனர்கள்
   (Bill Clerks)
   (வயது 30 - 45 இற்கும் இடைப்பட்டவர்கள்)
2. விற்பனையாளர்கள்
   (Sales Men)
   (வயது 25 - 40 இற்கும் இடைப்பட்டவர்கள்)

இப்பதவிகளில் இணைந்துகொள்ள விரும்புவோர் தமது சுயவிபரம் கொண்ட விண்ணப்பத்தினை 15.02.2012 இற்கு முன்னர் கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முகாமையாளர்
NARAYANA HARDWARES TRADER
நாராயணர் கட்டடப்பொருள் வர்த்தகர்
92,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.0212225390

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.